வாய்மையே வெல்லும்

தமிழியல்

JOURNAL OF TAMIL STUDIES

APRIL 2015

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

திருவள்ளுவர் ஆண்டு 2046, மன்மத, பங்குனி - சித்திரை

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

Tharamani, Chennai - 600 113. Tamil Nadu, India.

ISSN No. 0022-4855 Vol. No. 88 Issue : April 2015

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

Board of Governors

APRIL 2015

CHAIRMAN

Thiru. K.C. VEERAMANI

Hon'ble Minister for School Education, Tamil Official Language, Archeology and Tamil Culture, Govt. of Tamil Nadu

VICE-CHAIRMEN

Dr. M. RAJARAM, I.A.S.
Secretary to Government
Tamil Development and Information Department, Govt. of Tamil Nadu.

Vice-Chancellor
University of Madras, Chennai.

Vice-Chancellor
Annamalai University, Annamalai Nagar

Vice- Chancellor
Madurai Kamaraj University, Madurai.

Vice-Chancellor
Tamil University, Thanjavur.

MEMBERS

SECRETARY TO GOVERNMENT
Finance Department, Govt. of Tamil Nadu.

Dr. F. GROS
Former Director, French Institute of Indology, Pondicherry (IATR-Representative)

DIRECTOR
Central Institute of Indian Languages, Mysore.

MEMBER SECRETARY

Dr. G. Vijayaraghavan
Director, International Institute of Tamil Studies, Chennai.

தமிழியல்

JOURNAL OF TAMIL STUDIES

April 2015

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

திருவள்ளுவர் ஆண்டு 2046, மன்மத, பங்குனி - சித்திரை

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

Tharamani, Chennai - 600 113. Tamil Nadu, India.

www.ulakaththamizh.org.in/E-mail : iits@tn.nic.in Phone: 22542992, 22542781/ Fax: 22541436

ISSN No. 0022-4855 Vol. No. 88 Issue: April 2015

BOARD OF EDITORS

Dr. G.L. HART
Dept. of South and South East Asian Studies, University of California, U.S.A.(Retd.)

Dr. A. VELUPILLAI
Former Professor of Tamil, University of Jaffna, Srilanka.

Dr. S.N. KANDASAMY
Former Professor of Tamil, Tamil University, Thanjavur.

Dr. Pon. KOTHANDARAMAN
Former Vice-Chancellor, University of Madras, Chennai.

Dr. G. VIJAYARAGHAVAN
Editor-in-Chief

Dr. B. RAJA
Associate Editor

Editorial Board
Dr. P. SELVAKUMAR
Dr. A. THASARATHAN
Dr. M.J. RABI SINGH
Kalaimamani MARAIMALAIYAN

CONTENT

Chief Editor's Note			1
01.	தமிழ்த்தாய் 67-பெருவிழா நிகழ்வுகள்		2
02.	Tamil Scholars from Overseas		26
03.	கமில் வாச்லவ் சுவலெபில் (1927-2009)	அ.அமுல்ராஜ்	27
04.	உ.வே.சாமிநாதையர் (1855 - 1942)	சு.தாராசுந்தரி	29
05.	Puṟap Poruḷ Veṇbā Mālai	G.U.Pope	32
06.	Translating Bharathi's Works	S. Natarajan	40
07.	திராவிட மொழி ஆய்வும் தமிழியல் ஆய்வும் உலகில் அரங்கேறிய ஆண்டுகள்: 1955 - 1970	பா.ரா.சுப்பிரமணியன்	48
08.	திருமந்திரம் - காலம் குறித்த சில விவாதங்கள்	சு.வேங்கடராமன்	62
09.	Tamil inscriptions found near Tiruvellarai temple	T.S. Subramanian	72
10.	The Kural	J. LAZARUS	74
11.	சங்க இலக்கியத்தில் "மாந்து"	பா.ஜெய்கணேஷ்	83
12.	மொழித்தூய்மையமும் தனித்தமிழியக்கமும்	கி.குணத்தொகையன்	92
13.	Index of The Journal of Tamil Studies	பி. கவிதா	108
14.	அரிய பழந்தமிழ் நூல்கள் மின் எண்மம் செய்தும் புதுப்பித்தும் வெளியிடப்படும் திட்டம்	இரா.பெருமாள்சாமி	111
15.	List of Translations of Tamil Works		121
16.	நூல் மதிப்புரை	கா.விஜய்மணியன்	124
17.	Regulations for submission of research Papers		126

REVISED SUBSCRIPTION

	Within India	Outside India
Life Membership	Rs. 6000.00	U.S.$. 200 or Rs. 12000.00
Institutional Membership	Rs. 8000.00	U.S.$. 250 or Rs. 15000.00
Annual	Rs. 400.00	U.S.$. 24 or Rs. 1400.00
Single Copy	Rs. 120.00	U.S.$. 7 or Rs. 400.00

திருத்தியமைக்கப்பட்ட சந்தா விவரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் சந்தா உறுப்பினர்	ரூ. 6000.00	U.S.$. 200 (அ) ரூ. 12000.00
நிறுவனச்சந்தா உறுப்பினர்	ரூ. 8000.00	U.S.$. 250 (அ) ரூ. 15000.00
ஆண்டுச் சந்தா	ரூ. 400.00	U.S.$. 24 (அ) ரூ. 1400.00
ஒரு படி	ரூ. 120.00	U.S.$. 7 (அ) ரூ. 400.00

Chief Editor's Note

Dear Readers

I am very glad to inform you that the ***Journal of Tamil Studies*** is gaining popularity among scholars and researchers. I have to thank the scholars who have contributed their scholarly research articles to enrich the journal towards our goal of International standard.

I hope and wish that the dream of Rev. Dr. Xavier S. Thaninayagam Adigalar will also be fulfilled very soon through the journal.

I request the well - wishers of the Journal and friends and disciples of Dr. Thaninayagam Adigalar to make efforts to introduce the scholars of other languages, other states and countries to participate and contribute research articles to further enrich the journal.

I am really very happy to inform you that our beloved leader Makkalin Muthalvar Dr J Jayalalithaa Amma is very keen to serve the Tamils, the Tamil language and literature and has liberally sanctioned huge amount of money to spread Tamil language, literature and culture throughout the world by the activities like publishing research Journals, conducting National and International seminars, publishing books and inviting internationally reputed scholars through the International Institute of Tamil Studies.

Moreover, only because of our beloved Makkalin Muthalvar's sincere help and guide, the International Institute of Tamil Studies has built its own permanent building which will provide more and more research facilities, and infrastructure similar to the internationally reputed advanced research centres in the world. The credit will go to our beloved Makkalin Muthalvar only.

On behalf of our Institute lovers and scholars of Tamil studies I express my hearty thanks to the Government of Tamil Nadu. Hope and wish that the Journal will flourish well in order to contribute more for the development of Tamil studies under the encouragement and guidance of the Government of Tamil Nadu.

Readers are welcome to express their views regarding the Journal.

With best wishes

Dr. G. VIJAYARAGHAVAN

No.88 APRIL 2015

01. மாண்புமிகு மக்களின் முதல்வர்
புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
தமிழ்த் தொண்டினைப் போற்றும்
தமிழ்த்தாய் 67 - பெருவிழா
தமிழ் வளர்ச்சி மாதம் - பிப்ரவரி 2015



தமிழ்த்தாய் 67

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாகத் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புகளையும் தமிழ் இலக்கியங்களின் பெருமைகளையும் உலகளாவிய நிலையில் பரப்புவதோடு, பிறநாட்டு அறிஞர்களும் தமிழின் தனித்தன்மைகளை உணர்ந்து கொள்ளும் வகையில் பெருமளவில் நிதி உதவி வழங்கி அரும்பெருந் தமிழ்த் தொண்டாற்றி வருகிறார். அப்பெருந் தமிழ்த்தொண்டினைப் பாராட்டி, திருவள்ளுவர் ஆண்டு 2046 ஜய வருடம், தை 18 முதல் (01.02.2015) மாசி 16 (28.02.2015) வரை பிப்ரவரி மாதம் முழுவதும் தமிழ்த்தாய் 67 பெருவிழா உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

தொடக்கவிழா

01.02.2015 ஞாயிறு அன்று நிறுவன இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் தலைமையில் தொடக்கவிழா நடைபெற்றது. 'மக்கள் குரல்' நாளிதழ் ஆசிரியர் இரா.முத்துக்குமார் தொடக்கவுரை நிகழ்த்தினார். தமிழ்த்தாய் அறக்கட்டளைச் சிறப்புத் தலைவர் கவிமாமணி துரை. இராசமாணிக்கம், மூத்த பத்திரிகையாளர் திரு. பா.கிருஷ்ணன், திருக்குறள் பேரவைச்சிறப்புத் தலைவர் பாவலர் ப.கோ.நாராயணசாமி, கவிஞர் உடையார் கோயில் குணா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருக்குறள் கவனகர் திரு.இரா.எல்லப்பன் ஒருங்கிணைப்பில் 1330 திருக்குறள் முற்றோதலில் தேர்ச்சிபெற்ற மாணவர்களின் திருக்குறள் முழக்கொலியாக நடைபெற்றது.

அண்ணா அறக்கட்டளை

02.02.2015 முற்பகல் நடைபெற்ற ஆய்வரங்கில் முனைவர் ந.வேலுசாமி அவர்கள் அண்ணா அறக்கட்டளை சார்பில் **அண்ணா ஓர் இந்தியத் தலைவர்** எனும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார். சொற்பொழிவு நூலும் வெளியிடப்பெற்றது.

தொடர்ந்து முனைவர் தி.மகாலட்சுமி அவர்கள் முன்னிலையில் பச்சையப்பன் கல்லூரி இணைப்பேராசிரியர் (ஓய்வு) முனைவர் சுடலி.தியாகராஜன் அவர்கள் இராமலிங்க அபிராமி அறக்கட்டளை சார்பில் **திருமந்திரத்தில் உயிர்நிலை** எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவு நூலும் வெளியிடப்பெற்றது.

பிற்பகல் நிகழ்வில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சமூகவியல் கலை (ம) பண்பாட்டுப் புலத்தின் பேராசிரியர் முனைவர் பா.இராசா முன்னிலையில் எம்.ஜி.ஆர். ஜானகி கலை (ம) அறிவியல் கல்லூரி நாட்டியத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சி.கார்த்திகேயன் அவர்கள் சீ.மா.துரையரசு அறக்கட்டளை சார்பில் **பழந்தமிழரின் அரங்க ஆட்டம்** எனும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார். காயிதேமில்லத் மகளிர் கல்லூரி தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் சோ. நிர்மலா அவர்கள் சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளை சார்பில் **தற்கால ஆவணங்களில் தினமணி சிறுவர்மணி சிறுகதைகள்** எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார்.

சிலப்பதிகாரத்தில் கலைக் கூறுகள்

03.02.2015 செவ்வாய் முற்பகல் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் தி. மகாலட்சுமி அவர்கள் முன்னிலையில் வேதாத்திரி மகரிஷி அறக்கட்டளை சார்பில் **குடும்ப வாழ்வியலில் வேதாத்திரியின் கோட்பாடுகள்** எனும் தலைப்பில் முனைவர் ச.மல்லிகா அவர்களின் சொற்பொழிவும் நூல் வெளியீடும் மற்றும் முனைவர் வி.இரா.பவித்ரா முன்னிலையில் கலாநிலையம் டி.என்.சேசாசலம் அறக்கட்டளை சார்பில் **சிலப்பதிகாரத்தில் கலைக் கூறுகள்** எனும் தலைப்பில் வேலூர், ஆக்சிலியம் கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் நா.குமாரி அவர்களின் சொற்பொழிவும் நூல் வெளியீடும் நடைபெற்றன. பிற்பகலில் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் கு.சிதம்பரம் அவர்கள் முன்னிலையில் மலேசியா, சுல்தான் இட்ரீஸ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முனைவர்

ஜெ. சாமிக்கண்ணு, முனைவர்பா.த. கிங்ஸ்டன்ஆகியோர் தனிநாயகம் அடிகளார் அறக்கட்டளை சார்பில் **மலேசியத் தமிழ்க் கல்வி வரலாறு** எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினர். சொற்பொழிவு நூலும் வெளியிடப்பெற்றது.

மறைமலை அடிகளாரின் தமிழ்ப்பணி

04.02.2015 புதன் முற்பகல் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் பா.இராசா அவர்கள் முன்னிலையில், இராணிமேரி கல்லூரித் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் இர.சிவசக்தி அவர்கள் மறைமலையடிகளார் அறக்கட்டளை சார்பில் **மறைமலை அடிகளாரின் தமிழ்ப்பணி** எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார். பிற்பகலிலும் இதே தலைமை, முன்னிலையில் ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் முனைவர் கௌ.மீனாட்சி அவர்கள் வேதாத்திரி மகரிஷி அறக்கட்டளை சார்பில் **மனவளக்கலையின் தவநிலைகள்** எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார்.

தகவல் தொடர்பு

05.02.2015 வியாழன் முற்பகல் முதல் 14.02.2015 சனி பிற்பகல் வரை முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் து.ஜானகி அவர்கள் முன்னிலையில் செம்மொழி மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையுடன், சங்க இலக்கியங்களில் தகவல் தொடர்புக் கூறுகளும் மொழிச் செயல்பாடுகளும் எனும் தலைப்பில் பத்துநாள்கள் பயிலரங்கம் நடைபெற்றது. இதில் மாணவர்களும் பேராசிரியர்களும் பங்கேற்றனர்.

தெருக்கூத்துப் பயிற்சிப் பட்டறை

15.02.2015 ஞாயிறு முழுநாள் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் பா.இராசா அவர்கள் முன்னிலையில், கொம்பந்தாங்கல் தலைமை ஆசிரியர் (ஓய்வு) க.கமலகண்ணன் அவர்களின் தெருக்கூத்துப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

பிரான்சு கம்பன் கழகம்

16.02.2015 திங்கள் முற்பகல் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் கு.சிதம்பரம் அவர்கள் முன்னிலையில், ம.பொ.சி. அறக்கட்டளை சார்பில் **A Study of Flora and Fauna in Akananuru** எனும் தலைப்பில் மலேசியா சபா பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் அருள்செல்வன் ராஜ் அவர்களின் சொற்பொழிவும் நூல் வெளியீடும் நடைபெற்றன. பிற்பகல் உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு (ம) தகவல் மையத்தின் சார்பில் பிரான்சு கம்பன் கழகத் தலைவர் கவிஞர் கி.பாரதிதாசன் அவர்கள் **பிரான்சு கம்பன் கழகத்தின் தமிழ்ப் பணிகளும் சமூகப்பணிகளும்** எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். சொற்பொழிவு நூலும் வெளியிடப்பட்டது.

அரிய நூல்கள் மின் எண்மம் ஆதல்

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2014-2015 ஆம் சட்டமன்ற மானியக்கோரிக்கை அறிவிப்பில் அறிவித்த திட்டமான அரிய நூல்களை மின் எண்மமாக்கும் பணியினை இவ்விழாவிற்கு வருகை தந்திருந்த அறிஞர்கள் பார்வையிட்டு, அழிந்துவரும் பல நூற்றாண்டுக் கால அரியநூல்களை மின்எண்மம் செய்தும் புதிய நூலாக வெளியிட்டும் பாதுகாத்து, தமிழ்மக்களுக்கு அர்ப்பணிக்கும் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கு இது ஒரு **“மணிமகுடம்”** என்று வியந்துப் பாராட்டினர்.



இந்திய இலக்கண மரபுகளும் தொல்காப்பியமும்

17.02.2015 மற்றும் 18.02.2015 ஆகிய இரு நாள்களில் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் அ.சதீஷ் அவர்கள் முன்னிலையில் **மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2013ஆம் ஆண்டு ரூ.50 இலட்சம் வைப்புத் தொகை வைத்து ஆரம்பிக்கப்பட்ட தொல்காப்பியர் ஆய்விருக்கையின் சார்பில் இந்திய**

இலக்கண மரபுகளும் தொல்காப்பியமும்: தமிழியலில் தொல்காப்பியம் எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.



கிரேக்கக் காப்பியத்தில் மகாபாரதத் தமிழர்

19.02.2015 வியாழன் முற்பகல் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் ஆ.மணவழகன் அவர்கள் முன்னிலையில் பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளை சார்பில் **கிரேக்கக் காப்பியத்தில் மகா பாரதத் தமிழர்** எனும் தலைப்பில் நந்தனம் அரசு ஆடவர் கலைக்கல்லூரி இணைப்பேராசிரியர் முனைவர் த.புகழேந்தி அவர்களின் சொற்பொழிவும் நூல் வெளியீடும் பிற்பகலில் முனைவர் பா.இராசா முன்னிலையில் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அறக்கட்டளை சார்பில் **இஸ்லாமியரின் தமிழ் நாடகங்கள்** எனும் தலைப்பில் புதுக்கல்லூரி தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் மு.முகமது அலி அவர்களின் சொற்பொழிவும் இராமலிங்க அபிராமி அறக்கட்டளை சார்பில் **பன்னிரு திருமறைகளின் அமைப்பும் சிறப்பும்** எனும் தலைப்பில் இராணிமேரி கல்லூரி தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் அ.மு. மாலதி அவர்களின் சொற்பொழிவும் நடைபெற்றன.

பெரியாரும் வான்புகழ் வள்ளுவனும்

20.02.2015 வெள்ளி முற்பகல் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் கா.காமராஜ் அவர்கள் முன்னிலையில் ஈ.வெ.ரா. மணியம்மை அறக்கட்டளை சார்பில் **தந்தை பெரியாரும் வான்புகழ் வள்ளுவனும்** எனும் தலைப்பில் செஞ்சி உலகத் திருக்குறள் பேரவை முனைவர் நயம்பு. அறிவுடை நம்பி அவர்களின் சொற்பொழிவும் நூல் வெளியீடும் முனைவர் பா.இராசா முன்னிலையில் பெ.நா. அப்புசாமி அறக்கட்டளை சார்பில் **தமிழ்ப்பழமொழிகளில் அறிவியல்** எனும் தலைப்பில் நந்தனம் அரசு

ஆடவர்கலைக்கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் க.பலராமன் அவர்களின் சொற்பொழிவும் பிற்பகல் முனைவர் வி.இரா.பவித்ரா முன்னிலையில் தந்தைபெரியார் அறக்கட்டளை சார்பில் **பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள்** எனும் தலைப்பில் வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளி திருமதி சாந்தி அவர்களின் சொற்பொழிவும் நூல் வெளியீடும் **உணவே மருந்து** எனும் தலைப்பில் சித்தமருத்துவர் பாக்கம் தமிழன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெற்றன.



உலகத் தாய்மொழித் திருநாள்

21.02.2015 சனி முற்பகல் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் தி.மகாலட்சுமி அவர்கள் முன்னிலையில் **திருமந்திரமும் வாழ்வியலும்** சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வில் - **அன்பே சிவம்** எனும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் (ஓய்வு) முனைவர் அரங்க.இராமலிங்கம் அவர்கள் சொற்பொழிவாற்றினார்; தொடர்ந்து சென்னைப் பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தத் துறை வருகைதரு பேராசிரியர் அருணை பாலறாவாயன் அவர்கள் **திருமந்திர நெறி** எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். பிற்பகல் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் தலைமையில் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகச் சிறப்புநிலை பேராசிரியர் முனைவர் ம.செ.இரபிசிங் அவர்கள் "உலகத் தாய்மொழித் திருநாள்" சொற்பொழிவு ஆற்றினார். முனைவர் நா.சுலோசனா முன்னிலையில் தெ.பொ.மீ. அறக்கட்டளை சார்பில் பாரதி மகளிர் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் லொ.ஆ.உமா மகேஸ்வரி அவர்கள் **'சிலப்பதிகார பதிப்பில்**

தெ.பொ.மீ.யின் பங்களிப்பு' எனும் தலைப்பில் சொற்பொழிவும் நூல் வெளியீடும் நடைபெற்றன.

சங்கத் தமிழ் வளர்க்கும் தங்கத் தலைவி அம்மா

22.02.2015 ஞாயிறு முழுநாள் கவிமாமணி. இராசமாணிக்கம் தலைமையில் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் முன்னிலையில் தமிழ்த்தாய் அறக்கட்டளை சார்பில் 108 கவிஞர்கள் பங்கேற்ற சங்கத் தமிழ் வளர்க்கும் தங்கத் தலைவி அம்மா எனும் தலைப்பில் கவியரங்கமும் அமுதகவி பொன்.தங்கவேலன் அவர்களின் ஒளிரும் தமிழகம் நூல் வெளியீடும் நடைபெற்றன. விழாவிற்குக் கவிமாமணி துரை. இராசமாணிக்கம் தலைமையேற்றார். தஞ்சாவூர்த் தமிழ்த்தாய் அறக்கட்டளையின் பொதுச்செயலாளர் கவிஞர் உடையார்கோயில் குணா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் முன்னிலை வகித்தார். சைதை சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ஜி. செந்தமிழன் அவர்கள் **அம்மாவின் ஆட்சி அருந்தமிழின் மாட்சி** மற்றும் **ஒளிரும் தமிழகம்** என்ற கவிதை நூல்களையும் வெளியிட்டார். கவிபாடிய கவிஞர்களுக்குத் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ.ஜெயவர்தன், திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் சினேகன் ஆகியோர் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்புச் செய்தனர்.

பாவேந்தரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள்

23.02.2015 திங்கள் முற்பகல் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் நா.சுலோசனா அவர்கள் முன்னிலையில் வா.செ.கு. அறக்கட்டளை சார்பில் **வா.செ.கு. வின் படைப்புக்கலை** எனும் தலைப்பில் சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி இணைப் பேராசிரியர் முனைவர் சு. நயினார் அவர்களின் சொற்பொழிவும் நூல் வெளியீடும் நடைபெற்றன.

முனைவர் பா.இராசா அவர்கள் முன்னிலையில் பெரியார் ஈ.வெ.ரா.நாகம்மை அறக்கட்டளை சார்பில் **பாவேந்தரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள்** எனும் தலைப்பில் இராணிமேரி கல்லூரி தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் சு.தமிழ்ச்செல்வி அவர்களின் சொற்பொழிவும் பிற்பகல் **சித்தர்களின் தமிழ் மருத்துவம்** எனும் தலைப்பில் நாகர்கோயில் மூலிகை ஆராய்ச்சியாளர் திரு.தெ.ஜோசப்பெனடிக்ட் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் முனைவர் பா.இராசா முன்னிலையில் வ.உ.சி. அறக்கட்டளை சார்பில் **வ.உ.சியும் சமகாலத் தேசிய இயக்கச் சான்றோர்களும்** எனும் தலைப்பில் இராணிமேரி கல்லூரி தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் (ஓய்வு) முனைவர் அ.இராஜேஷ்வரி அவர்களின் சொற்பொழிவும் நூல்கள் வெளியீடும் நடைபெற்றன.

அம்மா ஆட்சியில் தமிழ் வளர்ச்சியும் கலைப்பண்பாடும்

24.02.2015 செவ்வாய் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் தலைமையில் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அறக்கட்டளை சார்பில் **வள்ளலாரின் வழியில் புரட்சித் தலைவி அம்மா** எனும் தலைப்பில் முனைவர் கு.சிதம்பரம் முன்னிலையில் இராணிமேரி கல்லூரி தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் ம.லோகநாயகி அவர்களின் சொற்பொழிவும் நூல் வெளியீடும் நடைபெற்றன. முனைவர் வி.இரா.பவித்ரா முன்னிலையில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அறக்கட்டளை சார்பில் **அம்மா ஆட்சியில் தமிழ் வளர்ச்சியும் கலைப்பண்பாடும்** எனும் தலைப்பில் திருச்சி பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் இளம்பை தமிழ்ச்செல்வன் அவர்களின் சொற்பொழிவும் நூல் வெளியீடும் நடைபெற்றன.

171 அரிய நூல்கள் வெளியீடு

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிறந்த மாதமான பிப்ரவரியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் "தமிழ்த்தாய் 67 - பெருவிழா" தமிழ் வளர்ச்சி மாதம் 2015 எனக் கொண்டாடிப் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியதைத் தொடர்ந்து, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவின் பிறந்த நாளான பிப்ரவரி 24ஆம் தேதியன்று 171 அரிய மற்றும் புதிய நூல்கள் வெளியீடும் நடைபெற்றது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். நிறுவனப் பதிப்புத்துறைத் தலைவர் முனைவர் ஆ.தசரதன், நூலகர் இரா.பெருமாள்சாமி ஆகியோர் வரவேற்றனர். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப.



அவர்கள் நூல்களை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் கா.மு.சேகர், உலகத் தமிழ்ச்சங்கம் மதுரை தனி அலுவலர் முனைவர் க.பசும்பொன், முனைவர் பா.இராசா, நிறுவனத் தனிஅலுவலர் தா.மார்டின் செல்லதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் பெயரில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பெற்றுள்ள இரண்டு அறக்கட்டளைகளின் சார்பில் **வள்ளலாரின் வழியில் புரட்சித் தலைவி, அம்மா ஆட்சியில் தமிழ் வளர்ச்சியும் பண்பாடும்** என்ற தலைப்புகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச்செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப. அவர்கள் பங்கேற்றார்.

தமிழிசை இரவு

உலகத் தமிழினக் காவலர் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் பெருவிழா - "தமிழ்த்தாய்-67" - தமிழிசை இரவு என்ற பெயரில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்தனர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். சைதை சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ஜி.செந்தமிழன் அவர்கள் கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்குப் பரிசும் பாராட்டுச்சான்றுகளும் வழங்கிச் சிறப்புச் செய்தார். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் கா.மு.சேகர், 13வது

மண்டலத்தலைவர் திருவான்மியூர் ச.முருகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கவிஞர் த.உடையார்கோயில் குணா, கவிமாமணி துரை இராசமாணிக்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். காஞ்சிபுரம் மாவட்டத் தமிழ்ச்செம்மொழி கலை வளர்ச்சிச் சங்க நிறுவனப் பாடகர் செம்மொழி மு.குமார் அவர்கள் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். மதுராந்தகம் தமிழ்ச்சங்க அமைப்பாளர் திரு.தமிழமுதன் நன்றி கூறினார்.

தமிழர் வானியல்

25.02.2015 புதன் முற்பகல் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் தலைமையில் முனைவர் பா.இராசா முன்னிலையில் செ.அரங்கநாயகம் அறக்கட்டளை சார்பில் **தமிழர் வானியல்** எனும் தலைப்பில் நந்தனம் அரசு ஆடவர் கலைக்கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் க.பலராமன் அவர்களின் சொற்பொழிவும் திருக்குறள் கவனகர் இரா.எல்லப்பன் அவர்களின் **கவனகக் கலைப் பயிற்சியும்** நடைபெற்றன. பிற்பகல் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் தலைமையில் அம்மா மனப்பயிற்சி மையம் முதன்மை இயக்குநர் ஜெ.எஸ்.சந்தானம் அவர்களின் **மனப்பயிற்சியும் உணவும் தியானமும்** மற்றும் தரமணி கானகம் எ.கனகசபை அவர்களின் **தமிழர் தற்காப்புக் கலைப்பயிற்சியும்** நடைபெற்றன.

26.02.2015 வியாழன் மற்றும் 27.02.2015 வெள்ளி ஆகிய இருநாள்கள் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் தலைமையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சமூகவியல், கலை (ம) பண்பாட்டுப்புலப் பேராசிரியர் முனைவர் பா.இராசா ஒருங்கிணைப்பில் **தமிழர்-கலை, பண்பாடு** எனும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

அரிய நூல்கள் மின் எண்மம் பதிவேற்றம் செய்தல்



மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தமிழ்த்தொண்டினைப் போற்றும் வகையில் பிப்ரவரியில் பல்வேறு சொற்பொழிவுகள், பன்னாட்டுக் கருத்தரங்குகள், தேசியக் கருத்தரங்குகள், 171 அரிய நூல்கள் வெளியீடு போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. அவ்வரிசையில் இவ் அரிய நூல்கள் மின் எண்மம் செய்யப்பெற்றுப் பதிவேற்றம் செய்த நிகழ்ச்சி, 26.02.2015 வியாழக் கிழமை காலை 10.30 மணியளவில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

பேரறிஞர் அண்ணா அவர்களால் அறிவிக்கப்பெற்றுத் தோற்றுவிக்கப் பெற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நூலகம் ஓர் இலட்சத்துக்கும் மேல் தமிழ் நூல்களைக் கொண்டு தமிழ் ஆய்வாளர்களுக்குப் பயன்பட்டு வருகிறது. தேடக்கிடைக்காத நூறாண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையும் இலக்கியத்தரமும் வாய்ந்த அரிய நூல்கள் பல இந்த நூலகத்தில் பாதுகாக்கப்பெற்று வருகின்றன. இவற்றின் பயனைப் பொதுமக்களும் பெறவேண்டுமென்ற நோக்கத்தில், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கி, அரிய நூல்களை மின் எண்மம் செய்து, இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்ய ஆணையிட்டார்கள்.

அதன்படி இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட பக்கங்கள் கொண்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் மின் எண்மம் செய்யப்பெற்று, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவருமான திரு.கே.சி.வீரமணி அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலிருந்து நாட்டுக்கு அர்ப்பணித்த நிகழ்வு 26.02.2015 இல் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாண்புமிகு பள்ளிக்கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

உள்ளத்து உள்ளிருந்து . . .
உணர்வுகளைத் தானெழுப்பி . . .
நெஞ்சமதில் நீதி வைத்து . . .
நேர்மையாகத் தான் வாழ . . ,
சொல்லில் வருவதே . . . அறிவு . . . என்பதால்

"அறிவு அற்றம் காக்கும் கருவி"
ஆம் . . .
அறிவு . . . அழிவு வராமல் காக்கும் கருவி மட்டுமல்லாமல்
பகைகொண்டு எதிர்ப்பவர்க்கும்
அழிக்க முடியாத உள் அரணும் ஆகும்.

என்பதால் ,

எங்கள் அறிவுக்கும் அறிவு சார்ந்த இயக்கத்திற்கும், என்றும், நாங்கள் போற்றும் இதயதெய்வம் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களே காரணகர்த்தா ஆவார்.

மக்களுக்குத் தொண்டு செய்து மகேசன் என வாழும் . . .
மாண்புமிகு மக்கள் முதல்வர் எங்கள் அம்மா!

ஏழை என்னும் சொல்
மேதினியில் எங்கும் இல்லாமல் நீங்கிடவே
ஏற்றம் பல அவர்களுக்கு ஈந்து
எதிலும் அவர் வாழ்க்கை தழைத்தோங்க
எண்ணற்ற திட்டங்கள் தந்து
தமிழ்நாட்டுக்கு அருள்பவர்தான்
மாண்புமிகு மக்கள் முதல்வர் எங்கள் அம்மா.

அதனால் . . .
"அல்லல் - அருள் ஆள்வார்க்கு இல்லை"

என்ற குறள் நெறிப்பட அருளுடையவராக வாழ்கின்றவர்க்குத் துன்பம் என்றும் இல்லை என்பதால்,

மாண்புமிகு மக்களின் முதல்வர் எங்கள் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவிற்குத் துன்பம் என்பது என்றைக்கும் ஏற்படாது... என்று வான்மறை கண்ட தெய்வப் புலவர் வள்ளுவரே சொல்லுகிறார்.

"பயிற்றுப் பல கல்வி தந்து . . . இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

"அன்னயாவினும்
புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்றார் பாரதி.

"மலைவாழை அல்லவோ கல்வி"

என்கிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

இக்கல்வியைப் பாமரனும் படைப்பவனும் சமமாய்ப் பெற்றிடவே,
சமச்சீர்கல்வி கொணர்ந்தார் நம் அம்மா.

ஏற்றத்தாழ்வு ஒழிந்து மாற்றம் பெற்றது தமிழ்நாடு.

ஆற்றல் மிக்கவர்களாக மாறுகின்றனர் மாணவர்கள்.

இன்றைய நிலையை மட்டும் யோசிக்காமல்
நாளைய தலைமுறையின் நிலையையும் எண்ணிக்

காத்துவரும் தலைவிதான் மாண்புமிகு மக்களின் முதல்வர்
நம் அம்மா ஆவர்.

நீ ஒருவனுக்கத் தரும் மீன் துண்டு
அவனுக்கு அன்றைய பொழுதுக்கு உணவு
மீன் பிடிக்கவே கற்றுக்கொடுத்துவிட்டால்
நீ அவனுக்கு வாழ்நாள் முழுவதும்
உணவளித்தவனாவாய் . . .

எனும் சீன நாட்டின் பழமொழிக்கேற்ப... தமிழ்நாட்டிற்கு ஆதாரக்கல்வியாய்ச் சமச்சீர் கல்வியை மாற்றி மாணவச் செல்வங்களைத் தன்னம்பிக்கை உள்ளவர்களாக ஆக்கிய தலைவி மாண்புமிகு மக்களின் முதல்வர் நம் அம்மா ஆவார்.

"ஒரு நாட்டின் இளைஞர்கள் அந்நாட்டின் நாளைய வழிகாட்டி" என்றார் விவேகானந்தர்.

அந்த இளைஞர்களின் "இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்" என்கிறது நான்மணிக்கடிகை, இளமையில் கல்வி கற்காமல் இருப்பது பெரும் குற்றமாகும் என்பதால்,தாய்த்திருநாட்டு இளைஞர்களின் வாழ்க்கைக்கு மழலையர் வகுப்பு முதல் கல்லூரிக் கல்வி வரை அவர்களுக்குக் குடும்பச் சுமை தெரியாத அளவிற்கு அவர்கள் கல்விச்சாலையில் தங்குத் தடையின்றிப் பயணிக்க

அனைத்தும் விலையில்லாமல் தந்து அவர்களுக்கு அறிவு ஒளி ஏற்றுவதை இலட்சியமாகக் கருதி வாழ்ந்து வருபவர் மாண்புமிகு மக்களின் முதல்வர் நமது அம்மா ஆவார் . . .

இதனால் தேசிய அளவில் தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சிக் குறியீடு முதனிலை நோக்கி விரைந்துள்ளது என்றால் . . . இதற்குக் காரணம் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்.

தமிழ்நாட்டின் கல்வியில் அளப்பரிய புரட்சிசெய்த புரட்சித் தலைவி அம்மா தமிழ் வளர்ச்சியில் சாதனைகளைப் பல புரிந்து வருகிறார்.

"சலுகைகள் இல்லையே" என்றும்

"தமிழ் அழிந்திடுதே" என்றும் . . .

பாவேந்தர் பாரதிதாசன் ஆதங்கப்பட்டார்.

ஆனால் இன்று தமிழ் வளர்ச்சிக்குத் திட்டங்கள்.

வரிசையாக, வரலாறு பேசுகிறது. அம்மாவின் பெருமையை . . .

"வரப்பு உயர நீர் உயரும்" என்றார் ஒளவை.

ஆம்.. தமிழுக்குத் தொண்டு செய்பவர்கள்தாம் தமிழ் வளர்ச்சிக்கு வரப்புகள் ஆவர். அவர்களை அடையாளம் கண்டு அவர்கள் வாட்டத்தைப் போக்கிடவே காலங்காலமாக இருந்துவந்த அகவை முதிர்ந்த தமிழறிஞர் நிதியுதவியை ரூ.2000/- ஆக உயர்த்தியவர் அம்மா. இதனால் அறிஞர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளார் நம் அம்மா. அதுமட்டுமல்லாமல்.. நிதியுதவி பெறத் தடையாகயிருந்த ஆண்டு வருமானம் ரூ.12,000/- என்பதை ரூ. 24,000/-ஆக உயர்த்தி ஆணையிட்டவர் நம் அம்மா.

இதுமட்டுமல்ல, இன்று தமிழ்நாடெங்கும் இவர்கள் பயணம் சென்று அன்னைத் தமிழ் வளர்க்க இலவசப் பேருந்துப் பயண அட்டை தந்தவர் மாண்புமிகு அம்மா.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ், மாண்புமிகு அம்மாவின் ஆணையால் அறிவியலை உள்ளடக்கி, நான்காம் தமிழாக நம் தாய்மொழி இன்று மிளிர்கிறது. இதை உறுதிப்படுத்திடும்வண்ணம் ஆண்டுதோறும் புதிய தமிழ்க் கணினி மென்பொருள் உருவாக்குபவர்களுக்கு முதலமைச்சர் கணினித் தமிழ் விருது உருவாக்கிட ஆணையிட்டவர் நம் மாண்புமிகு அம்மா.

தன்னைச்சுற்றிவரும் துதிபாடிகளுக்கும் . . . 'கோரசு கோஷ்டிகளுக்கும்' தமிழறிஞர் விருதுகளை வழங்கியவர்கள் இருந்த நாட்டில் . . .

இன்று விருதுகள் தமிழறிஞர்களுக்கு; விண்ணப்பித்தவர்களுக்கும், விண்ணப்பிக்காதவர்களுக்கும் அவர்தம் தமிழ்த் தொண்டினை அறிந்து தாயுள்ளத்தோடு விருதும் தங்கப்பதக்கமும் பண முடிப்பும் தந்து பாராட்டி மகிழ்பவர்தான் நம் மாண்புமிகு அம்மா.

இன்று தமிழறிஞர்களுக்கான விருதுகள் ஆண்டுக்கு ஆண்டு கூடுகின்றன. இதனால் தமிழறிஞர்கள் மனங்கள் எல்லாம் அம்மாவின் தமிழ்ப் பணிக்கு நன்றி பாராட்டி வாழ்த்துகின்றன.

மூன்றாம் முறையாக இன்றும் என்றும் தமிழ் மக்களின் பேரரசியாக வளர்ந்துவரும் நம் மாண்புமிகு அம்மா அவர்களின் இக்கால ஆட்சியில் கபிலர் விருது, கம்பர் விருது, உ.வே.சா விருது, ஜி.யு.போப் விருது, உமறுப்புலவர் விருது, சொல்லின் செல்வர் விருது, ஔவையார் விருது, இளங்கோவடிகள் விருது, முதலமைச்சர் கணினித்தமிழ் விருது, மற்றும் மாவட்டந்தோறும் தமிழ் அமைப்பு வைத்துத் தமிழ்த்தொண்டு ஆற்றுபவருக்கு ஒரு 'தமிழ்ச் செம்மல்' விருது, தலா ரூ. 25,000/- என அறிவித்துள்ளார் நம் புரட்சித்தலைவி அம்மா.

கற்றோர், சான்றோர், புலவர்கள், தாய்மார்கள், மாணவச் செல்வங்கள், பத்திரிக்கையாளார்கள், ஊடக நண்பர்கள், இசைக் கலைஞர்கள் எல்லாம் நிரம்பியிருக்கின்ற இந்த அவையில் கூறுகிறேன்.

நாடு விடுதலையடைந்து, 1956-நவம்பர் முதல்நாள் தமிழ்நாடு தனி மாநிலமாகி 59 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 59 ஆண்டுகளின் வரலாற்றில் தமிழறிஞர்களுக்கு 41 விருதுகளை வழங்கிப் பெருமைப்படுத்திய ஒரே ஆட்சி - மாட்சிமைமிக்க உலகத்தமிழர்களின் தலைவி ஆட்சி. இதுவரை 5 விருதுகளே வழங்கப்பெற்றிருந்தன. ஆனால் அம்மா அவர்கள் கடந்த 3 ஆண்டுகளில் 41 விருதுகளாக உயர்த்தியுள்ளார். மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி மட்டுமே என்பதைப் பதிவுசெய்கிறேன்.

அது மட்டுமா? திருவள்ளுவரையும் சி.சுப்பிரமணிய பாரதியாரையும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனையும் சீன மொழிக்கும் அரபு மொழிக்கும் கொண்டு சென்றவர் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 1330 திருக்குறள் ஒப்புவிக்கும் மாணவர்களிள் ஆண்டுதோறும் 30 பேரைத் தெரிவுசெய்து ரூ.10,000/- வழங்கப்படுகிறது. இளந்தமிழர் இலக்கியப் பட்டறையால் இளைஞர்களைத் தமிழ் உணர்வாளர்களாக மாற்றிட ரூ.20 இலட்சம் அளிக்கப்படுகிறது. சிறந்த நூல் பரிசளிப்புத் திட்டத்தில் மகளிர் இலக்கியம், தமிழர் வாழ்வியல் வகைப்பாடு சேர்ப்பு, சிறந்த நூல் வெளியிட நிதியுதவி ரூ. 25,000/- என்பது ரூ. 50,000 ஆக உயர்த்தப்பெற்றது.

பள்ளி - கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தித் தமிழில் படைப்பாற்றலை உருவாக்கி ஆண்டுதோறும் ரூ. 50/- இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார் புரட்சித்தலைவி மக்கள் முதல்வர் அம்மா அவர்கள்.

தமிழ்த் தாத்தா உ.வே.சா. திருவுருவச் சிலைக்கு மலர்தூவிச் சிறப்புச் செய்து இன்றைய இளைஞர்களுக்குத் தமிழர் வாழ்வியலைக் காணச்செய்திட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ரூ. 3.46 கோடி செலவில் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடத்தையும் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடத்தையும் உருவாக்கியுள்ளார் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்பப் புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கிட சொல்வங்கித் திட்டத்தைத் உருவாக்கியவர் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா.

உலகத்திலுள்ள தமிழர்களையும் தமிழ் அமைப்புகளையும் ஒரு குடையின்கீழ் ஒன்றிணைக்க மதுரையில் மீண்டும் புதுப்பொலிவுடன் "உலகத் தமிழ்ச்சங்கம்" ஒன்றினை அமைத்துள்ளார் நம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

தமிழறிஞர் டாக்டர் கால்டுவெல்லின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்திட ஆணையிட்டுள்ளவர் நம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

சித்திரைத் திங்கள் முதல்நாள்தான் மரபுப்படி தமிழ்ப் புத்தாண்டு நாள் என 23.08.2011 அன்று மாண்புமிகு அம்மா அவர்களால் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படியே அந்தநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தவத்திரு தனிநாயக அடிகளுக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாட ஆணையிட்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா.

ஆந்திரம் கேரளம் பிற மாநிலங்களிலும் மும்பையிலும் தமிழ் வளர்ச்சிக்கு நிதியுதவி வழங்கியுள்ளார் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா.

தில்லித் தமிழ்ச்சங்கத்திற்குத் தோரண வாயில் கட்ட நிதிஉதவியாக ரூ. 25.00 இலட்சம் வழங்கியுள்ளார் நம் புரட்சித் தலைவி மக்களின் முதல்வர் அம்மா.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்புக்கு மூன்றாண்டுகளுக்கு ரூ. 30 கோடியும் கணினிவழி தமிழ் வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றிச் செயற்படவும் தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூ.12 இலட்சமும் ஒதுக்கீடுசெய்துள்ளார் நம் புரட்சித்தலைவி அம்மா.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பழந்தமிழ் ஓலைச்சுவடிகளைப் பாதுக்காக்க, ஓலைச்சுவடிப் பாதுகாப்பு மையம் ஒன்று அமைத்திட ரூ. 34 இலட்சமும் வழங்கியுள்ளார் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

நிறுவனத்தில் உள்ள நூலகத்தில் உள்ள அரிய நூல்களை மின் எண்மத்தில் பதிவு செய்ய ரூ. 10 இலட்சம் ஒதுக்கியுள்ளார் புரட்சித்தலைவி மக்கள் முதல்வர் அம்மா.

அயல்நாட்டவர்க்குத் தமிழ் கற்பித்திட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மொழியியல் ஆய்வுக்கூடம் அமைத்திட ரூ. 24 இலட்சமும் ஒதுக்கியுள்ளார் நம் மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா.

அரிய தமிழ் நூல்கள்

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அரியவகைத் தமிழ் நூல்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் கடந்த இரண்டு ஆண்டுகளாக முனைப்போடு செயல்பட்டு வருகிறது. இதன் ஒரு முயற்சியாகக் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள புதுப்பாளையம் என்ற கிராமத்தில் அமைந்துள்ள சமரச சன்மார்க்க நூலகத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் தலைமையில் அரிய நூல்கள் குறித்துத் தேடும் பணி நடைபெற்றது.

தேடக்கிடைக்காத நூறாண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையும் இலக்கியத்தரமும் வாய்ந்த அரிய நூல்கள் பல இந்த நூலகத்தில் பாதுகாக்கப்பெற்று வருகின்றன.

சிவபிரகாச சுவாமிகளின் நன்னெறி - பதவுரை (கி.பி.1871), ஜெயமுனி சூத்திரம் (கி.பி.1892), அமிர்தம் பிள்ளையின் யாப்பிலக்கண விளக்கம் (கி.பி.1876), கோ.பள்ளி கொண்டானின் பிரபந்தத் திரட்டு (கி.பி.1897), அதிவீரராம பாண்டியனின் நைடதம் (கி.பி.1878), பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப்புலவர் சரித்திரம் (கி.பி.1899), சபாபதி நாவலரின் திராவிடப் பிராகசிகை (கி.பி.1899), இராஜகோபாலப் பிள்ளையின் திரிகடுகம், பாரதவெண்பா, பஞ்சதந்திரம் (கி.பி.1870), குப்புசாமி நாயுடுவின் ஆரூடசாத்திரம் (கி.பி.1896), ஏகாம்பர முதலியாரின் விஷ்ணு நாமாவளிகள் (கி.பி.1895) போன்றவை இவ்வரிய நூல்கள் ஆகும்.

அதன்படி இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட பக்கங்கள் கொண்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் மின் எண்மம் (Digitization) செய்யப்பெற்றுப் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

தமிழையும் தமிழ் இனத்தையும் இரு கண்களாக எண்ணி உலகமே வியக்கும் வண்ணம் தமிழ்நாட்டைக் காத்து, வளர்த்து வரும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் தலைமையில் **"எங்கள் திருநாட்டில் எங்கள் அம்மா அவர்களின் நல் ஆட்சியே!"** என்று கூறுவோம்.

புரட்சித்தலைவி அம்மாவின் தலைமையை ஏற்று என்றும் வாழ்ந்திடுவோம்!

என்றார்.

தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப. அவர்கள் தமது உரையில் ...

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் கோடிக்கணக்கான திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருவதை நாடறியும். குறிப்பாக, தமிழ் வளர்ச்சிக்கு இக்காலம் பொற்காலம். தமிழறிஞர்களுக்கு விருதுகள், நிதியுதவிகள், பாராட்டு விழாக்கள் எனவும் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தினை மீட்டெடுக்கப் பலகோடி ரூபாய் ஒதுக்கீடு, மீண்டும் புதுப்பொலிவுடன் மதுரை, உலகத்தமிழ்ச்சங்கம், அண்டை மாநிலத்தில் இயங்கும் பல்கலைக் கழகங்களுக்குத் தமிழ் வளர்க்க நிதியுதவி எனப் பல்வேறு தமிழ்வளர்ச்சித் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்றைய நாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வரலாற்றில் ஒரு பொன்னாள் ஆகும். கடந்த 24ஆம் தேதி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா பிறந்தநாளில் 171 அரிய மற்றும் புதிய நூல்கள் வெளியிட்டு, பழந்தமிழர் பெருமைகளை, வரலாறுகளை, இலக்கியங்களைச் சிதைந்த நிலையிலிருந்து மீட்டுருவாக்கம் செய்து நூலாக்கம் பெற்றதால் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் தமிழ்ப்பணி உலகெங்கும் பரவிடச்செய்யப்பெற்றது.

அதன் வரிசையில் இன்று உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பாதுகாக்கப்பட்டுவரும் நூற்றாண்டு கால அரிய நூல்களைத் தேடிக்கண்டுபிடித்து அரிய நூல்களை இன்று மின் எண்மம் செய்து வலைத்தளத்தில் ஏற்றம் செய்யும் நிகழ்வு தமிழ்வளர்ச்சியில் ஒரு மைல்கல் ஆகும். வருங்கால, நிகழ்கால ஆய்வறிஞர்களின் தமிழியல் ஆய்வுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஊரெல்லாம் தேடிக் கண்டுபிடித்து ஆய்வு நிகழ்துவதைவிட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வலைத்தலத்தில் நூல்களையெல்லாம் பார்த்தால் படித்தால் மட்டுமே போதும் - பழங்காலத் தமிழிலக்கியச் செல்வங்களை உங்கள் வீட்டிலேயே கொண்டுவந்து இணையத்தளத்தின் வாயிலாகச் சேர்த்த பெருமை மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களதாகும்.

மேலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு அம்மா அவர்கள் தமிழுக்குச் செய்துள்ள பணிகள்: நிதியுதவிகள் 2011-2012 ஆம் ஆண்டு - ரூ.54.54 இலட்சமும், 2012-2013 ஆம் ஆண்டு - ரூ. 23.00 இலட்சமும், 2013-2014 ஆம் ஆண்டு - ரூ. 72.30 இலட்சமும், 2012-2013 ஆம் ஆண்டு - ரூ. 436.04 இலட்சமும், புதிய அலுவலகக் கட்டடம் கட்ட வழங்கப்பட்ட - ரூ. 417.00 இலட்சமும், நூலக ஆணை மூலம் பெறப்பட்ட தொகை - ரூ. 106.31 இலட்சமும் கடந்த நான்கு ஆண்டுகளில் நிறுவனத்தின் மூலம் தமிழ்வளர்ச்சிப் பணிகளுக்கு வழங்கிய மொத்த தொகை - ரூ. 1109.19 இலட்சமாகும். இது உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வரலாற்றில் பொற்காலம் ஆகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கடந்த ஆண்டுகளில் 25 நாடுகளைச் சேர்ந்த சுமார் 600 மாணவர் தமிழ் மொழி கற்றுள்ளனர். இவர்களைப்போன்று பல அயல்நாடுகளிலிருந்து வரும் மாணவர்கள் தமிழ் படிப்பதற்கு ஏற்றவகையில் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி இங்கே மொழியியல் ஆய்வுக்கூடம் தொடங்கப்பெற்றுள்ளது. இதை அயல்நாட்டு மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கடந்த ஆண்டு தமிழ் மொழி கற்ற அயல்நாட்டினர் 38 பேர். ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றோர் 175 பேர். முனைவர் பட்டம் பெற்றோர் 123 பேர். சுவடியியல் பட்டயம் படிப்போர் 45 பேர். திருமந்திரம் வாழ்வியலில் பட்டயம் படிப்போர் 95 பேர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், உயர் தமிழ் ஆய்வு நிறுவனமாதலால் அதன் பல்துறை (multi- disciplinary) ஆய்வுப்பணிகளுக்குத் தொடக்ககால ஆய்வின் தன்மைகளை (before Independence) அறிந்து இதற்கேற்ப ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு இவ்வரிய நூல்கள் பயன்படும். பொதுமக்களின் பயன்பாட்டிற்கும் இவ்வரிய நூல்கள் தேவையாக உள்ளன. பழந்தமிழர் அறிவின் வெளிப்பாடுகளே இவ்வரிய நூல்கள். எனவே இவற்றைப் பதிப்பித்து வெளியிடுவது சிறந்த செயல் ஆதலால் இச்செயலைச் செய்து வருகின்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வுரையைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2 இலட்சம் மின்எண்மப் பக்கங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார். இதை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இணையத் தளத்தில் www.ulakaththamizh.org காணலாம்.

பன்னாட்டுக் கருத்தரங்கம்

28.02.2015 சனிக்கிழமை முனைவர் கோ.விசயராகவன் தலைமையில் தஞ்சைத் தமிழ்த்தாய் அறக்கட்டளை சார்பில் **பழந்தமிழர் வாழ்வில் இயற்கை பன்னாட்டுக் கருத்தரங்கம்** நடைபெற்றது. கருத்தரங்கில் மாநில முழுவதிலும் இருந்து 40 பேராளர்கள் கலந்துகொண்டு கட்டுரை வாசித்தனர்.

நிறுவன இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக, சென்னை, உயர்கல்வி மன்றச் செயலாளர் முனைவர் நாகராசன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில் மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் சிறப்பியல்புகளை எடுத்துக்கூறியதுடன் அவர்கள் ஆட்சியில் தமிழகம் அடைந்துள்ள சாதனை அளவிலான வளர்ச்சியைப் புகழ்ந்துரைத்தார். தொடர்ந்து பேசிய பொதிகைத் தொலைக்காட்சி நிலைய இயக்குநர் பால.இரமணி அவர்கள் தமிழ் வளர்ந்து செழித்த விவரம் குறித்து அனைவரும் இரசிக்கும்படி பேசினார்.

முன்னதாக, நிறுவன இயக்குநர் அவர்கள் இந்நிறைவு விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் வரவேற்றுப்பேசினார். இவ்விழாவில் வேலூர் தனபாக்கியம் மகளிர் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஞா.சுஜாதா சிவகுமார் மற்றும் அக்கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் பி.சி.ஜெகதா, நிறுவனப் பேராசிரியர் முனைவர் பா.இராசா, தமிழ்த்தாய் அறக்கட்டளைப் பொதுச்செயலாளர் கவிஞர் உடையார்கோயில் குணா, அந்த அறக்கட்டளையின் துணைத்தலைவர் பாவலர் ப.கோ.நாராயணசாமி மற்றும் பல தமிழறிஞர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

பிற்பகல் 4.30 மணியளவில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் ஆராய்ச்சி மாணவர்கள், தமிழறிஞர்கள், கவிஞர்கள் ஆகியோரால் "தமிழ்த்தாய்-67" பெருவிழாவின் நினைவாக 108 மரக்கன்றுகள் நடப்பட்டு விழா நிறைவு செய்யப்பட்டது. *(தொகுப்பு: ஆ.விமலாதித்தன்)*

---

02. Tamil Scholars from Overseas

Rhenius, Charles Theophilus Ewald (1970 - 1838)

- Rhenius, CTE. Rev.: A grammar of the Tamil language, with an appendix., 3d ed. Madras, Printed for the Proprietor, by P.R. Hunt. American mission press, 1853.

Schomerus, Hilko Wiardo (1879 -)

- Schomerus, H.W.: Der Caiva-Siddantha / H.W. Schomerus, New York : Garland Pub., 1980.; Series title : Oriental religions 9.
- Schomerus, H.W.: Arunantis Sivajnasiddhiyar : die Erlangung des Wissens um Siva oder um die Erlosung / unter Beifugung einer Einleitung und Meykantadevas Sivajnanabodha aus dem Tamil ubersetzt und kommentiert, Wiesbaden : Steiner, 1981.
- Schomerus, H.W.: Indische erlosungslehren; ihre bedeutung fur das verstandnis des christentums und fur die missionspredigt, von lic. theol., Leipzig, J.C. Hinrichs'sche buchhandlung, 1919.; Series title: Sachsische forschungs - institute in Leipzig.
- Schomerus, H.W.: Sivaitische Heiligenlegenden : (Periyapurana und Tiruvatavurar - purana), aus dem Tamil ubersetzt, Jena : E. Diederichs, 1925.; Series title: His Texte zur Gottesmystik des Hinduismus; Bd. 2.

(to be continued)

03. மேலைநாட்டுத் தமிழறிஞர்கள் வரிசை
கமில் வாச்லவ் சுவலெபில் (1927-2009)

அ.அமுல்ராஜ்


கமில் வாச்லவ் சுவலெபில்

கமில் வாச்லவ் சுவெலபில் நவம்பர் 17, 1927-இல் செக்கோசுலவாக்கியாவில் உள்ள பிராகா மாநகரில் பிறந்தவர். 'சுவலெபில்' என்பதற்கு, To Make everything better, to make everything more perfect: more beautiful என்பது பொருளாகும். இவர் 1952 இல் நீனா என்பவரை மணந்துள்ளார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள். இவரது பெற்றோர் கமில்சுவெலபில் - மரியம்மா ஆவர்.

கல்வி / பணி

1952 இல் 'சமற்கிருதத்தில்' முதல் முனைவர் பட்ட ஆய்வை நிறைவு செய்த இவர், பின்னர், 'திராவிட மொழியியலில்' 1959 ஆம் ஆண்டு தமது இரண்டாவது முனைவர் பட்டத்தை நிறைவு செய்துள்ளார். பின் 1965-66 இல் அமெரிக்காவில் சிக்காக்கோ பல்கலைக் கழகத்திலும் 1967-68 இல் செருமனி கெய்டல்பெர்க் பல்கலைக்கழகத்திலும் 1968 இல் சார்லஸ் பல்கலைக் கழகத்திலும் 1970 இல் பிரான்சிலும் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். நெதர்லாந்து லெய்டன் பல்கலைக் கழகத்திலும் யூட்ரிச் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். மேலும் செக்கோசுலவாக்கியாவில் அமைந்துள்ள கீழையியல் துறையில் தமிழ், திராவிட மொழியியல் பிரிவில் ஆய்வாளராகப் பணியாற்றியுள்ளார். தமிழ், தமிழர் பற்றிப் பிறமொழியினருக்குச் சிறப்பாக அறிமுகம் செய்துவைத்தவர்களில் முக்கியப் பங்காற்றிய இவர் சிறந்த மொழியியல் அறிஞரும் ஆவார்.

கற்ற துறைகள்

இந்தியவியல், ஆங்கில இலக்கியம், தத்துவம்.

அறிந்த மொழிகள்

கிரேக்கம், இலத்தீன், செருமன், ஆங்கிலம், உருசியன், சமற்கிருதம், தமிழ், மலையாளம், இந்தி, பிரெஞ்சு, இத்தாலியன், போலந்து போன்ற மொழிகளை நன்கு அறிந்தவர்.

சுவலெபில் தமிழுக்கு ஆற்றிய பணிகள்

தமிழின் மிகப்பெரும் இலக்கண நூலான ***தொல்காப்பியத்தை*** மொழிபெயர்க்கும் அளவிற்குத் தமிழ்ப் புலமையும் ஆங்கிலப் புலமையும் பெற்ற 'கமில் சுவலெபில்' அவர்கள் ***நற்றிணை, புறநானூறு*** முதலிய சங்க இலக்கியங்களை நன்கு அறிந்தவர். ***சிலப்பதிகாரத்தையும்*** கல்கியின் நாவல்களையும் மொழிபெயர்த்துள்ளார். மொழியியல் நோக்கில் தமிழையும் தமிழில் படைக்கப்பட்ட இலக்கியங்கள், இலக்கணங்கள், நாட்டுப்புறவியல் சார்ந்த செய்திகளையும் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

இவர் மொழிபெயர்த்த ***தொல்காப்பியம்*** 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ***தொல்காப்பிய*** உரைவளத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது. முருகன் மற்றும் நடராசரின் ஆனந்த தாண்டவம் பற்றி மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். குறிப்பாக, முருகன் மீது இவர் கொண்ட பற்றின் விளைவே ***'The Smile of Murugan'*** என்ற ஆங்கில நூலாகும்.

தமிழ் யாப்புப் பற்றி அறிஞர் சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் வழியாக ஈடுபாடுகை வரப்பெற்ற சுவலெபில் அவர்கள் தமிழ் யாப்புப் பற்றியும் விரிவாக ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். நீலகிரிப் பகுதியில் பேசப்படும் இருளர்மொழி பற்றிய ஆய்விலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டவர். இருளர் மொழியை மொழியியல் நோக்கில் ஆராய்ந்து வெளிப்படுத்தியவர்.

பாரதியின் இளமை வாழ்க்கையை ஆங்கிலத்தில் அறிமுகம் செய்த சுவலபில், அவரின் பாடல்கள் சிலவற்றை மொழிபெயர்த்ததோடு திறனாய்வுக்கும் உட்படுத்தியவர்.

உ.வே.சா. அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் ***என் சரித்திரம்*** என்ற நூலைச் சுவலெபில் அவர்கள் **The Story of My Life** என்னும் பெயரில் மொழிபெயர்த்துள்ளார். நூல்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் என இதுவரை 500 க்கும் மேற்பட்ட படைப்புகளை வழங்கியுள்ள இவர் சாகித்திய அகாதெமியின் சிறப்புக் கருத்துரையாளராகவும் இருந்துள்ளார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ***தமிழியல்*** **(Journal of Tamil Studies)** ஆய்வு இதழ் உள்ளிட்ட பல இதழ்களின் ஆசிரியர் குழுவிலும் இடம்பெற்றவர் கமில் சுவலபில்.

கமில் சுவலெபில் அவர்கள் தம்முடைய பேராசிரியர்ப் பணியிலிருந்து 1992 இல் ஓய்வு பெற்றபின் பிரான்சு தலைநகரம் பாரிசுக்கு அருகில் ஒரு சிற்றூரில் வாழ்ந்து பின், உடல்நலக்குறைவின் காரணமாக ஜனவரி 17, 2009 இல் மறைந்தார்.

தொகுப்பு: அ.அமுல்ராஜ், முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.

04. இந்தியத் தமிழறிஞர்கள் வரிசை

உ.வே.சாமிநாதையர் *(1855 - 1942)*

சு.தாராசுந்தரி

உ.வே.சாமிநாதையர்

காலத்தால் தமிழ் இலக்கியங்களின் புகழ் மங்கிவிடாமல், அழிந்துவிடாமல், பதிப்புப் பணி எனும் பணியை மேற்கொண்டு தமிழ் அறிஞர்கள் போற்றத்தக்க அரும்பணியைச் செய்தவர் உ.வே.சாமிநாதையர் அவர்கள். சுவடிகளில் இருந்த தமிழைக் காலச்சுவடு அழித்துவிடாமல் பாதுகாத்தவர். காலத்திற்கேற்ற அரிய பணி மட்டுமன்று காலத்தை வென்று தமிழ்மொழி வாழும் பணியைச் செய்து காலம் வென்று தம் புகழை நிலைநாட்டியவர் உ.வே.சாமிநாதையர் அவர்கள். எனவே, இன்றும் அவரைத் 'தமிழ்த் தாத்தா' என உறவுப் பெயரால்அழைத்து மகிழ்கிறோம். உ.வே.சாமிநாதையர் பணியைச்சிந்திப்பது என்பது தமிழ் இலக்கியங்களின் புகழைச் சிந்திப்பதை ஒத்ததாகும்.

தமிழன்னையின் தவப்பயனாய்த் தஞ்சை மாவட்டம் உத்தமதானபுரத்தில் வேங்கட சுப்பையருக்கும் சரஸ்வதி அம்மையாருக்கும் மகனாக 1855ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19ஆம் நாள் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சாமிநாதன் என்பது. அவரது வீட்டார் 'சாமா' என்றழைத்து வந்தனர். உபநயன நிகழ்வுக்குப் பின்னர் வேங்கடராமன் என்று அழைக்கப்பட்டார். தொடக்கத்தில் நாராயணசாமி ஐயரிடமும் சிறிய தந்தையிடமும் தமிழும் இசையும் பயின்ற உ.வே.சாமிநாதையர் தம் தந்தையின் முயற்சியால் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் மாணவராகத் தமது 13ஆவது வயதில் சேர்ந்தார். உ.வே.சாமிநாதையைருக்கு உபநயன நிகழ்வுக்குப் பிறகு சூட்டப்பட்ட வேங்கடராமன் என்ற பெயரை பிள்ளையவர்கள் சாமிநாதன் என்றே மாற்றியமைத்தார். அன்று முதல் சாமிநாதையர் என்றே அழைக்கப்பட்டார். அதன் பின்னரே உ.வே.சாமிநாதையரின் 'சாமிநாதன்' என்ற பெயருடன் அவர் பிறந்த ஊரின்

பெயரையும் தந்தையின் பெயரையும் சேர்த்து உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகன் சாமிநாதன் என்பதாக உ.வே.சாமிநாதன் எனப் பெயர் பெற்றார். அதுவே தமிழுலகில் அழியாப் பெயராக நிலைத்து நின்றது.

தம் ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் *கம்பராமாயணம், அந்தாதி, பிள்ளைத்தமிழ், உலா, தூது, பிரபந்தங்கள்* இவற்றைக் கற்றுத் தேர்ந்திருந்தாலும் உ.வே.சாமிநாதையரின் நிலைத்த புகழுக்குக் காரணம், திருவாடுதுறை ஆதினத்தலைவர் சுப்பிரமணிய தேசிகர் உ.வே. சாமிநாதையருக்கு அறிமுகப்படுத்திய இராமசாமி முதலியாரையே சாரும். இராமசாமி முதலியார் தொடுத்த வினா தமிழில் பழைய இலக்கியங்கள் படித்ததுண்டா? என்பது. அவ்வினாவே உ.வே.சாமிநாதையருக்குத் தமிழிலக்கியம் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டியது. இராமசாமி முதலியார் முதலில் தந்த *சீவகசிந்தாமணி* காப்பியமே பதிப்புப் பணியின் தொடக்கமாக அமைந்தது. நச்சினார்க்கினியர் உரையில் அமைந்த *சீவகசிந்தாமணி* தமிழ் இலக்கியங்களின் பரப்பை உ.வே.சாமிநாதையருக்கு உணர்த்தியது. ஊர் ஊராக, பட்டி தொட்டியெல்லாம் திரிந்து பரண்களில் கிடந்த ஏடுகளை எடுக்கச்செய்து, படித்து, பொருளுணர்ந்து பிழைகள் களைந்து தம் பதிப்புப்பணியை இடையறாது மேற்கொண்டார்.

பதிப்புப்பணி குறித்த உ.வே.சாமிநாதையரின் விளக்கம் இன்றும் பதிப்பாசிரியர்களுக்கு ஏற்றதொரு விளக்கமாக வழிகாட்டியாக அமைந்துள்ளது.

"தமிழ்த் தாயே! நீ சிந்தாமணியை இந்த ஏழை முகமாக மீட்டு அணிந்து கொண்டாய். பிற ஆபரணங்களையும் அடியேன் கைப்பற்றும்படி அருள் செய்ய வேண்டும்!" எனச் *சீவகசிந்தாமணியைப்* பதிப்பித்த 1887 ஆம் ஆண்டு, தமது முகவுரையில் தமிழன்னையை வேண்டினார் உ.வே.சாமிநாதையர். அந்தப் பெருமகனாரின் வேண்டுதல் வீண் போகவில்லை.

பத்துப்பாட்டு (1889) சிலப்பதிகாரம் (1892) புறநானூறு (1894) புறப்பொருள் வெண்பா மாலை (1895) மணிமேகலை (1898) ஐங்குறுநூறு (1903), பதிற்றுப்பத்து (1904), பெருங்கதை (1924), குறுந்தொகை (1937) ஆகிய பண்டைய இலக்கியங்களை ஒவ்வொன்றாகப் பதிப்பித்து, வணக்கத்திற்குரிய

செந்தமிழ்ப் பெரியாராகத் தமிழர் நெஞ்சில் இடம் பெற்றார் உ.வோ.சாமிநாதையர்.

மன்னர் பாஸ்கர சேதுபதி உ.வே.சா.வின் தமிழ்ப் பணியைப் போற்றிப் புகழ்ந்து, பொற்கிழி வழங்கி, இரண்டு சாதராக்களைப் போர்த்திக் கௌரவித்தார். கும்பகோணம் வந்த உ.வே.சா., பாஸ்கர சேதுபதி போர்த்திய விலை உயர்ந்த இரண்டு சாதராக்களையும் முந்நூறு ரூபாய்க்குக் கொடுத்துவிட்டு, *சிலப்பதிகாரப்* பதிப்பில் தமக்கு ஏற்பட்டிருந்த கடனை அடைத்தார். (சாதரா - விலையுயர்ந்த சால்வை)

தமது குருநாதர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மறைந்த பின், அவரது மனைவியார் காவேரி ஆச்சி, தனியாக மாயவரத்தில் வாழ்ந்து வந்தார். அவருக்கு உதவி செய்வதைக் கடமையாகக் கொண்டிருந்த பெருமகனார் உ.வே.சாமிநாதையர், மகாவித்துவானின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிட்டார். பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி, தமது எண்பத்து ஐந்தாவது வயதில் ***என் சரித்திரம்*** எனும் தலைப்பில் தம் வரலாற்றை அப்பெருந்தகை எழுதினார். அந்த நூல், தமிழ்த்தாத்தா உ.வே.சா.வின் சரித்திரம் மட்டுமன்று. அது தமிழின் வரலாறு. தமிழுணர்வு கொண்டோர் படித்தறிய வேண்டிய தமிழ்ப் பண்பின் வரலாறு.

உ.வே.சா.வின் ஐம்பத்தோராவது வயதில், அரசாங்கம் அப்பெருமகனாருக்கு 'மகாமகோபாத்தியாயர்' பட்டத்தை அளித்தது. அறுபத்திரண்டாவது வயதில் 'திராவிட வித்தியா பூஷணம்' எனும் விருதினைப் பெற்றார். காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் உ.வே.சா.வின் எழுபதாவது வயதில் 'தாக்ஷிணாத்திய கலாநிதி' எனும் பட்டம் வழங்கினார். 1932-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

தமிழுக்குத் தனிப் புகழ் ஈட்டித் தந்த தவப்புதல்வர் உ.வே.சா. 1942-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் நாள் மறைந்தார். அப்பெருந்தகை தேடித் தந்த தனிப் பெருஞ் செல்வங்களில், அத்தமிழ்ப் பெரியாரின் ஆன்மா உறைந்தும், நிறைந்தும் இருப்பதாகவே நமக்குத் தோன்றுகிறது!

தொகுப்பு: சு.தாராசுந்தரி, முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.

05. Puṟap Poruḷ Veṇbā Mālai

G.U.Pope

*1950களில் மேலை நாடுகளில் பொதுவாக நிலவியிருந்த தீவிரச் சமஸ்கிருதச் சார்பான கருத்துக்களே இவை. பால் தீமே ஜெர்மனியில் இக்கருத்துகளின் வலிமையான சார்பாளராக இருந்தவர். எமனோவும் பரோவும் சமஸ்கிருதப் பேராசிரியர்கள் என்றாலும் மொழிக் குடும்பங்கள் குறித்து அவர்கள் எடுத்த நிலை வேறு. ஒவ்வொரு மொழிக் குடும்பத்தின் தனித்தன்மைகளையும், ஒரே நாட்டில் இரு வேறு மொழிக் குடும்பத்து மொழிகள் பல்லாண்டு காலமாக வழங்கிவரும்போது அவற்றிடையே சொற்கள் கடன் பெறுதல் இயல்பானது என்றும் அந்தக் கடன் வாங்கல் இரு வழிப் போக்குவரத்து என்றும் உணர்ந்து இக்கருத்துக்களைத் தங்களது ஆய்வில் வெளிப்படுத்தியவர்கள். பரோ சமஸ்கிருத மொழியில் திராவிடச் சொற்கள் சில பண்டே இடம்பெற்றுவிட்டன என எழுதியதற்குப் பால் தீமே எதிர்த்ததை அறியவந்த 34 வயது இளைஞரான வ.அய்.சுப்பிரமணியம் மேற்கூறிய கருத்துகளை மறுத்து எழுதினார். இந்தக் கட்டுரை **Tamil Culture** தொகுதி 9இல் (1961) வெளியாயிற்று.*

உலக அரங்கில் திராவிட மொழிகளும் தமிழியலும் எளிதாக இடம்பெற்றுவிடவில்லை என நான் முன்னரே குறிப்பிட்டேன். போராட வேண்டியிருந்தது. 'நாங்கள் போராட்டக்காரர்கள்' என்று சொல்லிக்கொள்ளாமல் தங்களது உறுதியான, வலிமையான ஆய்வுகளின் வழியே ஆய்வரங்கத்தில் சமஸ்கிருதச்சாய்வு என்னும் நிலைப்பாட்டை மெல்ல மெல்ல நீக்கியவர்களாக, எமனோ, பரோ, பில்லியோசா (பிரான்சு), குரோ (பிரான்சு), குய்ப்பர் (நெதர்லாந்து), கமில் சுவலபில், ஆந்திரனோவ் (ரஷ்யா) முதலியோரைக் கூறவேண்டும்.

இந்தியாவில் கல்கத்தாவில் இருந்த சுனிதிகுமார் சட்டர்ஜி, தென்னாட்டில், தெ.பொ. மீனாட்சிசுந்தரம், பிஹெச். கிருஷ்ணமூர்த்தி, வ.அய்.சுப்பிரமணியம் முதலியோருடன் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் தனிநாயகம் அடிகள். உலகம் முழுவதும் சுற்றிவந்து மொழி அடையாளம் இழந்த தமிழர்களை நம் கவனத்திற்குக் கொண்டுவந்தவர், உலக அரங்கில் தமிழ்க் கல்வியின் நிலையைக் காட்டியவர், மேலைநாட்டு ஆய்வாளர்களுக்கும் தமிழக ஆய்வாளர்களுக்கும் பாலம் அமைத்துத் தந்தவர் தனிநாயகம் அடிகள்.

1962இல் தெ.பொ. மீனாட்சிசுந்தரம் சிகாகோ பல்கலைக் கழகத்தினரால் அழைக்கப்பட்டுத் தமிழ்மொழி வரலாறு குறித்துப் பத்துச் சொற்பொழிவுகளும் தமிழ் இலக்கிய வரலாறு குறித்துப் பத்துச் சொற்பொழிவுகளும் ஆற்றினார். மேலைநாட்டு அறிஞர்களுக்கும் தமிழக அறிஞர்களுக்கும் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

தமிழ்மொழி உலக அரங்கிற்கு வந்ததும் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தை உலக அரங்கில் அறியச் செய்வதும் நிகழத் தொடங்கியது. அறுபதுகளில் வெளிநாடுகளில் வெளியான மூன்று நூல்கள் வெளிநாட்டு அறிஞர்களிடையே மிகுந்த கவனத்தைப் பெற்றன. ஏ.கே. ராமானுஜத்தின் ***The Interior Landscape*** 1967இல் வெளியாயிற்று. எளிய, இனிய ஆங்கிலத்தில் சில ***குறுந்தொகைப்*** பாடல்களை மறுமொழியாக்கம் செய்து உலகில் பலரின் கவனத்தைக் கவர்ந்தார்.

Bigger than earth, certainly
higher than the sky

என்பதைப் படிக்கும்போதே, 'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று' என்னும் குறுந்தொகை அடி தமிழ்ப் படித்தவர்களின் நினைவிற்கு வராமல் போகாது.

மற்றொரு நூல் கைலாசபதியின் ***The Heroic Poetry***. 1968இல் வெளியான இந்த நூல் பண்டை இலக்கியத்தில் வாய்மொழி இலக்கியக் கூறுகளின் ஆட்சியைக் கிரேக்க இலக்கிய ஒப்புமையோடு எடுத்துக்காட்டி விளக்கியது.

ஜான் மார் 1958இல் இலண்டனில் முனைவர் பட்டத்திற்குப் பொருளாக எட்டுத்தொகை நூல்களை எடுத்துக்கொண்டார். எட்டு நூல்களையும் நுணுக்கமாக ஆராய்ந்ததோடு அவற்றின் யாப்பையும் நன்றாக விவரித்துள்ளார். (இந்த ஆய்வு பல காலமாக ஆய்வேடாகவே தங்கியிருந்தது. 1985இல்தான் சென்னையில் வெளியாயிற்று.)

1950களின் பிற்பகுதியிலிருந்து 1970வரை, ஒரு பதினைந்து ஆண்டுகள் வெளிநாட்டு ஆய்வாளர்களும் தமிழக ஆய்வாளர்களும் கலந்து, கருத்துப் பரிமாறிக்கொண்டு, தொடர்ச்சியாகச் செயல்பட்டதன் விளைவாகத்தான் திராவிட மொழிகளும் தமிழியல் ஆய்வுகளும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பாவில் நெதர்லாந்து, பிரான்சு, ஜெர்மனி முதலிய நாடுகளில் காலூன்றி வளர்ந்தன.

இப் பதினைந்து ஆண்டுகளில் மேலை நாட்டவரும் நம் ஆய்வாளர்களும் தோளோடு தோளாக நின்று நிகழ்த்தியனவற்றை இப்போது தொகுத்துப் பார்க்கலாம்.

- 1952இல் ***Tamil Culture*** தனிநாயகம் அடிகளால் தொடங்கப்பட்டது.
- 1953இல் தனிநாயகம் அடிகள் ***Nature in Ancient Tamil*** என்னும் சங்க இலக்கிய ஆய்வை வெளியிட்டார்.
- 1954ஆம் ஆண்டு ***Tamil Culture*** இதழில் தனிநாயகம் அடிகள் ஐரோப்பிய நாடுகளில் (போர்த்துகல், பிரான்ஸ், இத்தாலி: வத்திகன் நகர்) உள்ள நூலகங்களில் தாம் கண்ட தமிழ்த் தொடர்பான நூல்கள் குறித்து எழுதிய கட்டுரை தமிழக ஆய்வாளர்களுக்குப் பழம் நூல்களைத் தேடும் பணியின் பரப்பை விரிவாக்கிற்று.

- *1954ஆம் ஆண்டு புதுச்சேரியில் பிரான்ஸ் நாடு இந்திய அரசின் ஒப்புதலோடு பிரஞ்சு-இந்திய நிறுவனத்தை நிறுவியது. பேரா. பில்லியோசா இந்த* French Institute *நிறுவுவதற்குப் போதிய முயற்சி மேற்கொண்டதோடு அதன் தலைமைப் பொறுப்பிலும் இருந்தார். பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு* French Institute of Pondichery*க்கு 1955ஆம் ஆண்டு வருகைபுரிந்து நிறுவனத்தின் குறிக்கோளைக் கேட்டறிந்தார்.*

- *1956இல் பேரா. எமனோ* "India as a Linguistic Area" *என்னும் சிந்தனையைக் கிளறும் கட்டுரையை வெளியிட்டார். ஒரு நாட்டில் பல மொழிக் குடும்பங்களின் ஒட்டுறவை விவரித்து எழுதிய முக்கியமான கட்டுரை இது.*

- *1956இல் தனது 29ஆவது வயதில் கமில் சுவலபில் தமிழ் இலக்கியத்தில் யவனர்*("The Yavanas in Old Tamil Literature", ***Repr. Orientalia Pragensia***, XIII, Charles University Press, 1995, pp.125-132*) என்னும் ஆய்வு செறிந்த கட்டுரையை வெளியிட்டார். வயதில் இளையவர் என்றாலும் ஆய்வில் முதிர்ச்சி பெற்றவர் என்பதைக் காட்டும் கட்டுரை இது.*

- *1956இல் வ.சுப. மாணிக்கம் அவர்களின்* ***Tamil Concept of Love*** *முனைவர் பட்ட ஆய்வேடாக அளிக்கப்பட்டது (1962இல் வெளியாயிற்று).*

- *1957ஆம் ஆண்டு மு. வரதராசனாரின்* ***The Treatment of Nature in Sangam Literature*** *என்னும் ஆய்வுரை வெளியாயிற்று. இவரிடம் தமிழ் பயின்றவர்தான் எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் பொது மொழியியல் பேராசிரியராக இருந்த ஆஷர்.*

- *1958இல் ஜான் மார் இங்கிலாந்தில் எட்டுத் தொகையில் ஆய்வேடு அளித்தார். (1985இல் சென்னையில்* Asian Institute *வெளியிட்டது).*

- *இதே ஆண்டில் நெதர்லாந்திலிருந்து வெளியான* ***Indo-Iranian Journal****இல் (2:191-224) பழந்தமிழில் ஆய்த எழுத்துக் குறித்து குய்ப்பரின் கட்டுரை வெளிவந்தது. (நெதர்லாந்து லெய்டன்*

பல்கலைக்கழகத்தில் வடமொழிப் பேராசிரியர் F.B.J. Kuiper திராவிட மொழிகளில் ஆய்வையும் வரவேற்றவர்).

- 1961ஆம் ஆண்டைத் திராவிட மொழிகளுக்கும் தமிழ் ஆய்விற்கும் வளம் சேர்த்த ஆண்டாகக் கருதவேண்டும். திராவிட மொழிக்கான இரு நூல்களும் திராவிட மொழிகளுக்கான துறையும் தமிழ் இலக்கியம் ஒன்றின் பிரஞ்சு மொழிபெயர்ப்பும் சங்க இலக்கிய நூல் ஒன்றின் மொழியை மொழியியல் நோக்கில் செய்த ஆய்வும் இந்த ஆண்டில் வெளிவந்தன.

- பி.ஹெச். கிருஷ்ணமூர்த்தியின் ***Telugu Verbal Bases*** என்னும் தெலுங்கு வினைச்சொற்கள் குறித்த நூல் 1961ஆம் ஆண்டில் வெளியாயிற்று.

- பரோ-எமனோ இருவரும் இணைந்து உருவாக்கிய ***Dravidian Etymological Dictionary***யும் இதே ஆண்டு வெளியாயிற்று.

- 1961ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் Advanced Centre for Dravidian Linguistics பேரா. தெ.பொ.மீ. தலைமையில் தொடங்கப்பட்டது.

- இந்த ஆண்டுதான் *சிலப்பதிகாரம்* பிரெஞ்சு மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது. அலன் தானியல் (Alain Daniélow) புதுச்சேரி பிரஞ்சு இந்திய நிறுவனத்து ஆர்.எஸ். தேசிகனுடன் இணைந்து இந்த மொழிபெயர்ப்பை வெளியிட்டார்.

- பேரா. வ.அய். சுப்பிரமணியத்தின் நெறிகாட்டுதலின்படி ச.அகஸ்தியலிங்கம் 1961இல் *பதிற்றுப்பத்தை* மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்து முனைவர் பட்ட ஆய்வை அளித்தார். இந்த ஆய்வேடு *பதிற்றுப்பத்தின்* சொல்லடைவோடு அளிக்கப்பட்டது. சொல்லடைவோடு கூடிய ஆய்வேடு என்பது 1960களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையிலும் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையிலும் வழக்கமான நடைமுறையாக இருந்தது.

- *1962இல் பேரா. வ.அய். சுப்பிரமணியம்* ***புறநானூற்றுச்*** *சொல்லடைவை வெளியிட்டார்.*

- இதே ஆண்டில் நெதர்லாந்திலிருந்து குய்ப்பர் *பழந்தமிழும் யாழ்ப்பாணத் தமிழும் - ஒரு குறிப்பு* என்னும் கட்டுரையை வெளியிட்டார் (***Indo-Iranian Journal*** 6:52-64).

- *1962இல் பேரா. தெ.பொ. மீனாட்சிசுந்தரம் சிகாகோவில் ஆற்றிய இரு சொற்பொழிவுகளும் 1965ஆம் ஆண்டு நூல்களாக வெளிவந்தன.* ***History of Tamil language*** *நூல் புனே டெக்கான் கல்லூரி வெளியீடாக வெளியாயிற்று.* ***History of Tamil Literature*** *நூலை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது.*

- *1963இல் பேரா. சி. இலக்குவனாரின்* ***Tholkappiyam in English with Critical Studies*** *வெளியாயிற்று.*

- *1964இல் தில்லியில் அகில உலகக் கீழ்த்திசை மாநாடு நடைபெற்றது. பன்னாட்டுத் தமிழ் ஆய்வுக் கழகம்* **IATR** *தொடங்கப்பெற்றது.*

- இதே ஆண்டில் ரஷ்ய இந்தியவியலாளர் ஆந்த்ரநோவ் *திராவிட மொழியியல் நூலடைவிற்குப் பயன்படும்படியான ஆதாரங்களைத் தொகுத்து வெளியிட்டார்.* "Materials for a Bibliography of Dravidian Linguistics" *என்னும் பெயரில் இது* ***Tamil Culture*** *இதழில் (11:1,* pp. *3-50) வெளிவந்தது.*

- *1965ஆம் ஆண்டு சா.வே. சுப்பிரமணியன் முனைவர் பட்ட ஆய்வை* ***Descriptive Grammar of Cilappatikaaram*** *அளித்தார். இந்த ஆய்வேடும் சொல்லடைவோடு கூடிய ஆய்வேடுதான்.*

- *தமிழகக் கல்வெட்டுகளில் பிராமி வரிவடிவங்கள் குறித்து ஆய்வாளர்கள் முன்பே தெரிவித்திருந்தாலும் சங்க கால மன்னர்களின் பெயர்கள் இக்கல்வெட்டுகளில் இடம்பெற்றிருந்ததை ஐராவதம் மகாதேவன் இரு கட்டுரைகளில் வெளிப்படுத்தினார். இரண்டு கட்டுரைகளுமே 1965இல் வெளியானவை. ஒன்று,* "Chera Inscriptions of Sangam Age"; *மற்றது,* "Tamil Brahmi Script Inscription from Mangulam".

- அடுத்த ஆண்டு தமிழ்-பிராமிக் கல்வெட்டுகளின் ஆவணம் "Corpus of the Tamil - Brahmi Inscriptions" என்பதையும் அவர் வெளியிட்டார்.

- 1966ஆம் ஆண்டு IATR ஆதரவில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

- கருத்தரங்கை ஒட்டித் தனிநாயகம் அடிகள் முயற்சியில் வெளிநாடுகளில் தமிழ் மொழி குறித்த பலரது கட்டுரைகளின் தொகுப்பான ***Tamil Studies Abroad*** வெளியானது.

- 19ஆம் நூற்றாண்டிலிருந்து 1966ஆம் ஆண்டின் தொடக்கம் வரை வெளியான பலதுறை நூல்களைத் தொகுத்துக் கையேடு ஒன்றை ***(A Reference Guide to Tamil Studies - Books)*** தனிநாயகம் அடிகள் இதே ஆண்டில் வெளியிட்டார்.

- ஐராவதம் மகாதேவன் 1965இல் வெளிப்படுத்திய கட்டுரையில் குறிப்பிட்டிருந்த சேர மன்னர்களின் பரம்பரையைக் குறித்து, 1966இல் கோலாலம்பூர் மாநாட்டில் பன்னீர்செல்வம் படித்த கட்டுரை இலக்கியமும் கல்வெட்டும் ஒன்றிற்கொன்று ஆதாரமாக இருப்பதைக் காட்டியது. ("An Important Brahmi Tamil Inscription: A Reconstruction of the Genealogy of the Chera Kings").

- 1967இல் ஏ.கே. ராமானுஜத்தின் ***The Interior Landscape*** வெளியானது.

- இதே ஆண்டில் புதுச்சேரி பிரஞ்சு இந்தியவியல் நிறுவனம் சங்க இலக்கியச் சொல்லடைவின் முதல் தொகுதியை வெளியிட்டது. இந்த அடைவு 1970இல் நிறைவேறியது.

- 1968இல் கைலாசபதியின் ***Tamil Heroic Poetry*** வெளியானது.

- இதே ஆண்டு சென்னையில் IATR ஆதரவில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. மாநாட்டின் முடிவில் தமிழியல் ஆய்வுகள் உலகத் தரத்துடன் நடைபெறுவதற்கு ஆய்வு

நிறுவனம் ஒன்று தொடங்கப்பட வேண்டும் என்னும் கருத்து உருவாயிற்று. இந்த நிறுவனம் சென்னையில் உருவாவதற்கான அடிப்படைப் பணிகள் 1968, 1969இல் தொடங்கப்பட்டன. இந்த முயற்சியின் விளைவாக 1970இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னையில் நிறுவப்பட்டது.

- 1968இல் தமிழக வரலாற்றிற்கு உதவும் இருமொழியில் எழுதப்பட்ட சாதவாகனர் நாணயத்தைக் குறித்து நாகசாமி தமது கட்டுரையை வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக அடுத்த ஆண்டில் 1969இல் பன்னீர்செல்வம் இந்த இருமொழி பொறித்த நாணயத்தைக் குறித்து மேலதிக விளக்கம் தந்தார் (***Indo-Iranian Journal*** 11, 4).

- 1969இல் கமில் சுவலபில் தமிழ்மொழி பற்றி ***"Current Trends in Linguistics"*** (ed.T.A. Sebeok) தொகுதியில் எழுதினார்.

- அதே தொகுதியில் எமனோவின் எழுத்து இலக்கிய வளமற்ற திராவிட மொழிகள் (Non-Literary Dravidian Languages) குறித்த கட்டுரையும் இடம்பெற்றது.

- இதே ஆண்டில் ஆந்த்ரநோவின் ***A Standard Reference Grammar of Modern and Classical Tamil*** வெளியாயிற்று.

- 1969ஆம் ஆண்டில்தான் பின்லாந்து ஆய்வாளர் அஸ்கோ பர்ப்போலா வேறு இருவருடன் இணைந்து சிந்துவெளி எழுத்துக்களின் மொழி திராவிட மொழியைச் சார்ந்தது எனத் தம் அறிக்கைகளைக் கோபன்ஹேகனிலிருந்து வெளியிட்டார். Decipherment of the ***Proto-Dravidian Inscriptions of the Indus Civilization: A First Announcement, 1969; Progress in the decipherment of the Proto-Dravidian Indus Script,*** 1969; ***Further Progress in the Indus Script Decipherment,*** 1970.

- 1970இல் தனிநாயகம் அடிகள் ***Tamil Culture and Civilization*** என்னும் தமிழ் மொழி - இலக்கியம் - பண்பாடு குறித்த விரிவான நூலை வெளியிட்டார். (இதன் மீள்பதிப்பை 1997இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை வெளியிட்டது)

- 1970இல் கமில் சுவலபில் ***Comparative Dravidian Phonology*** நூலை வெளியிட்டார்.

1856ஆம் ஆண்டு இராபர்ட் கால்டுவெல் தொடங்கிவைத்த திராவிட மொழிக் குடும்ப ஒப்பிலக்கணம் விரிவும் ஆழமும் முறைமையும் பெற்றதைக் கமில் சுவலபிலின் திராவிட மொழிகளின் ஒலியியல் ஒப்புமை நூல் 1970ஆம் ஆண்டு நிறைவேற்றி வைத்தது.

1955 - 1970 என்னும் இப் பதினைந்து ஆண்டுகள் திராவிட மொழிகளும் தமிழியலும் உலக அரங்கில் தடம்பதிப்பதற்கான அடிப்படைகளை அமைத்துத் தந்தன. பதினைந்து ஆண்டுகளில் 20 நூல்கள், 15 கட்டுரைகள், ஓர் ஆய்விதழ், நான்கு நிறுவன அமைப்புகள், இரு பன்னாட்டுக் கருத்தரங்குகள் தோன்றித் திராவிட மொழிகளையும் தமிழ் மொழியையும் உலக அரங்கிற்கு இட்டுச் சென்றன.

இன்று உலக அரங்கில் திராவிட மொழி, தமிழ் மொழி ஆய்வின் நிலை என்ன?

மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்பிப்பது கணிசமாகக் குறைந்துவிட்டது. திராவிட மொழி ஆய்வாளர்கள் அங்கும் குறைவு, இங்கும் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை. குப்பத்தில் உள்ள திராவிட மொழிப் பல்கலைக்கழகம் திராவிட மொழிகள் ஆய்விற்குப் புத்துயிர் ஊட்டவேண்டும். IATR என்னும் அமைப்பு இனி இல்லை என்று அதன் செயல்தலைவராக இருந்த ஜப்பானிய அறிஞர் கரோஷிமா அறிவித்துவிட்டார். திருவனந்தபுரத்தில் 1971இல் தொடங்கப்பட்ட ***International Journal of Dravidian Linguistics*** ஆய்விதழ் தொடர்ந்து வெளிவருகிறது. புதுச்சேரியில் பிரஞ்சு இந்திய நிறுவனம் இன்றளவும் ஆய்வுகளைத் தொடர்கிறது. இவை நம்பிக்கை தரும் அறிகுறிகள். என்றாலும் நான் முன்பே குறிப்பிட்ட "இருபக்கமும் எழுச்சியான ஆய்வுகள்" என்னும் ஆரோக்கியமான சூழல் இல்லாதது வருந்துவதற்குரியது. தமிழகத்தில் தமிழ் ஆய்விற்கு எழுச்சி ஏற்பட்டிருக்கும் நிலையில் அதே எழுச்சி அமெரிக்க-ஐரோப்பிய நாடுகளிலும், ஜப்பான் போன்ற கீழ்த்திசை நாடுகளிலும் ஏற்படாமல் போவது உலக அரங்கில் ஏறிய தமிழிற்கு ஏற்பட்ட சரிவு அல்லது சறுக்கல் என்று சொல்லத் தோன்றுகிறது.

இந்தச் சரிவு அல்லது சறுக்கல் தற்காலிகமானதாக இருக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்வோம்.

08. திருமந்திரம் - காலம் குறித்த சில விவாதங்கள்

சு. வேங்கடராமன்

தமிழ் மரபில் திருமூலர் எழுதிய *திருமந்திரம்* பக்தி இலக்கிய மரபில் காலத்தால் முற்பட்டது எனக் கூறப்படுகிறது. மூவர் தேவாரப் பாடல்களுக்கு முன்னர் அது பாடப்பட்டது எனக் கூறுவர். ஏறத்தாழ, கி.பி.6-ஆம் நூற்றாண்டில் அவர் வாழ்ந்தார் என்பர். *திருமந்திரம்* 3,000 பாடல்களை உடையது; மிகைப் பாடல்கள் கூடுதலாக இடம் பெற்றுள்ளன. 9 தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தந்திரமும் உட்பிரிவுகளுடன் உள்ளது. தந்திரம், உட்பகுப்பு அனைத்தும் பெயரிடப்பட்டு இன்றுள்ள பிரதி உள்ளது.[1] மிகைப்பாடல்கள் உரைகளில் காணப்படுவதாகக் குறிப்பு தரப்பட்டு, மூலம் மட்டும் உள்ள பிரதி பயன்பாட்டில் உள்ளது. மூலம், பிரிவுகள், உரைமரபு, மிகைப்பாடல்கள் காலந்தோறும் வெவ்வேறு சிந்தனைச் செறிவுகளால் வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டதை விளக்கும். சைவத் திருமுறைகள் வரிசையில் 10ஆம் திருமுறையாக உள்ளது. *திருமந்திரமாலை* எனவும் இது வழங்கப்படுகிறது.

திருமந்திரம் பிரதி, திருமூலர் குறித்த தொன்மங்கள் பல காலப்போக்கில் அவ்வச்சூழலுக்கேற்பக் கட்டமைக்கப்பட்டன. திருமூலர் வாழ்க்கை வரலாறு குறித்துத் (சரிதை) தொன்மக்கதை ஒன்று உள்ளது. இறந்து கிடந்த இடையன் ஒருவனின் உடலில், வானவெளியில்சென்ற - வடக்கிலிருந்து தமிழகம் வந்த - முனிவர் உடல் விட்டு உடல் மாறி (பரகாய நுழைவு) - கூடுவிட்டுக் கூடு பாய்ந்து - திருமூலரானார். திருவாவடுதுறையில் தவமிருந்து *திருமந்திரம்* பாடினார். ஆண்டுக்கு ஒரு பாடலாக 3,000 பாடல்களைப்பாடினார் எனத் தொன்மம் உள்ளது. 63 நாயன்மார்களின் கதைகளைக் கூறும் நம்பியாண்டவர் நம்பியின் (கி.பி.11ஆம் நூற்றாண்டு) *திருத்தொண்டர் திருவந்தாதி* இத்தொன்மக் கதையைக் கூறுகிறது. சேக்கிழாரின் *பெரிய புராணம்* நம்பியை வழிமொழிகிறது. காலத்தால் முற்பட்ட சுந்தரரின் (கி.பி.7) *திருத்தொண்டர் தொகையில்* திருமூலர் குறித்த மேற்கூறிய தொன்மக் கதை இல்லை. 'நம்பிரான் திருமூலன் அடியாருக்கும் அடியேன்' (பாடல் 5) என்று மட்டுமே உள்ளது. கி.பி. 7-11க்கு இடைப்பட்ட காலத்தில், தமிழ்ச் சமூகத்தில் இக்கதை வாய்மொழி வழக்கில் இருந்திருக்கும். நம்பி அதைப் பதிவு செய்துள்ளார்.

பேராசிரியர் சு.வேங்கடராமன் அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பக்தி இலக்கியங்கள் குறித்த இவரது ஆய்வுகள் நுட்பமானவை. 'அறியப்படாத தமிழ் இலக்கிய வரலாறு' முதலான முப்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டவர். தற்பொழுது செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் செய்பட்டு வருகிறார்.

வடக்கிலிருந்து வந்த முனிவர் மூலனின் உடலில் புகுந்து பாடினார் என்ற தொன்மம் தமிழ்ச் சிந்தனை மரபிற்கு மாறுபட்ட மரபு வந்து கலந்ததைக் குறிப்பிடுகிறது. அதே போலத் *திருமந்திரம்* நூல் சாத்தனூர் மூலன் (இடையன்) பாடினான் என்பது ஏற்புப் பெறாது. எனவே முனிவர் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து வடமொழி வேதமரபை அப்படியே தமிழில் பாடினார் என நம்பி கூறுகிறார் *(திருத்தொண்டர் திருவந்தாதி பா.36)*. 'வேதத்தின் சொற்படியே' என்பது இதை விளக்கும். இந்த அடிப்படையில் தான் *திருமந்திரம்* சைவமரபில் வேதம், தமிழ் ஆகமம் என்றெல்லாம் புனையப்பட்டது. நூலின் பாயிரத்தில் 'ஆகமம் செப்பல்' (பா.73), 'வேதத்தைச் செப்ப' (பா.77) என உள்ளன. பாயிரம் 112 பாடல்கள் பிற்காலச் சேர்க்கை. நம்பியும் சேக்கிழாரும் கட்டமைத்த பிரதிக்கேற்பப் பாயிரம் பாடிச் சேர்க்கப்பட்டது. அதேபோல மந்திரமாலை (பா.86), பாடல்கள் 3,000 (பா.99), ஆவடு துறையில் தவமிருந்து பாடியது (பா.78-81) என்ற கதைக்கூறுகளும் தொன்மக் கதைகளான பின்னர், பாயிரத்தில் சேர்க்கப்பட்டன. வடநூல் மரபைத் தமிழில் பாடுவதற்காகவே தாம் வந்ததாக (தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு இறைவன் படைத்தனன் - பா.81) முனிவரின் வருகை நோக்கம் அமைந்ததைப் பாயிரம் கூறுகிறது.

எனவே, *திருமந்திரம்* பாடப்பட்ட பின் பல்வேறு காலங்களில், வெவ்வேறு வாசிப்பிற்கேற்பப் பிரதி மாற்றம் பெற்றது. அத்தகைய மாற்றங்களாலான *திருமந்திரம்* சைவமரபில் உரிய ஏற்பைப் பெறுவதற்காக நம்பி, சேக்கிழார், பாயிரம் பாடியவர் வெவ்வேறு நிலைகளில் தரப்படுத்திய பிரதி இன்று நாம் காண்பது. அதற்குப் பின்னரும் வெவ்வேறு தளங்களில் பின்வந்த பல்வேறு சிந்தனை மரபுகளை உட்கொண்டதாகத் *திருமந்திரம்* உள்ளது. சைவச் சார்பின்றி, நடு நிலையோடு *திருமந்திரப்* பிரதியை - மூலம் மட்டும் - வாசிப்பவர் அந்த நூலில் பல்வேறு காலங்களைச் சார்ந்த பல்வேறு சமய, தத்துவ மரபுகள் சார்ந்த சிந்தனைகள் இடம் பெற்றுள்ளதை உணரலாம். தமிழ் மரபில் கூறப்பட்டுவரும் *திருமந்திரம்* திருமூலர் பாடியது என்பதற்கு மாறாக, *திருமந்திரம்* பல்வேறு காலங்களில், வேறுபட்ட குழுச் சிந்தனைகளுக்கேற்பப் பாடப்பட்ட நூல். பலர் பாடிய பாடல்களைக் கொண்ட தொகை நூல். என்ற கருத்தாக்கம் இன்றைய பிரதியை ஆழமாக வாசிப்பவருக்குப் புலப்படும். எனவே *திருமந்திரம்* வெவ்வேறு காலச்சிந்தனை மரபுகளைக் கொண்டது; வெவ்வேறு காலக் கவிஞர்களால் பாடப்பட்டது; திருமூலர் ஒருவர் மட்டுமே பாடியது என்பதும் மூவர் தேவாரத்திற்கு முந்தியது என்ற கருத்தும் பொருத்தமற்றவை. இதைத் *திருமந்திர* அகச்சான்றுகள் மூலம் விளக்குவது இதன் மையமாகும்.

தமிழ் மரபில் காரைக்கால் அம்மையார், தேவார மூவர், மணிவாசகர் உள்ளிட்ட திருமுறைக் கவிஞர்கள் பாடல்கள் வைப்பு முறையில் கடவுள் வாழ்த்துப் பாடுவதும் பாயிரம் பாடுவதும் இல்லை. திருமுறைகள் முழுவதும் சிவனைப் பரம் பொருளாகப் பாடுவன. 11ஆம் திருமுறையில் மட்டும் இதற்கு மாறாக விநாயகர், முருகன், ஞானசம்பந்தர், அப்பர் ஆகியோரைப் பரவும் பாடல்கள் உள்ளன. எனவே 11ஆம் திருமுறையிலும் சிவ பரம்பொருளுக்கு மாறுபட்ட போக்கு உள்ளது. அது தனித்த விவாதத்திற்குரியது. ஆனாலும் அதிலும் கூட நூலின் தொடக்கத்தில் தனியாகக் கடவுள் வாழ்த்து, பாயிரம் என்பவை இல்லை. பன்னிரு திருமுறைகளிலும் *திருமந்திரம்* நீங்கலாக ஒரு படித்தாக இம் மரபு உள்ளது. *திருமந்திரம்* மட்டும் இதற்கு மாறாக விநாயகர் காப்பு, கடவுள் வாழ்த்து (50 பாடல்கள்) கொண்டுள்ளது. கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவனைப் பாடுகின்றன ('சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை' - பா. 5). நூலுக்கு முன்னர், நூலின் தொடக்கமாகக் கடவுள் வாழ்த்துப் பாடும் மரபு பிற்காலத்தது. ஏடெழுதியவர், பதிப்பாசிரியர் போன்றவர்களால் இது நிகழ்ந்திருக்கும் என வாதிட்டாலும் நூலின் கட்டமைப்பு, பாயிரம் நீங்கலாகத் (112 பாடல்கள்) *திருமந்திரப்* பிரதி எண்ணிக்கையில் குறைவுபடும். மூவாயிரம் பாடல்கள், 3000 ஆண்டுகள் தவமிருந்து ஆண்டுக்கு ஒன்றாகப் பாடப்பட்டது என்ற தொன்மக் கூறுகள், பாயிரத்திலுள்ள அதை வலியுறுத்தும் சான்றுகள் அடிபடும். பாயிரம் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்பது அப்போதும் வலிமை பெறும்.

தமிழ் மரபில், மூவர் தேவாரம், *பெரிய புராணம்* ஆகியவைகளில், ஞான சம்பந்தர், சுந்தரர், சேக்கிழார் ஆகிய மூவருக்கும் இறைவனே அடிஎடுத்துக் கொடுக்க அவர்கள் பாடினர் என்ற மரபு உள்ளது - ஞானப்பால் தந்தது, முகம் முகமாகப் பேசுவது, அசரீரியாக முறையே மேற்கண்ட மூவருக்கும் இறைவன் அடியெடுத்துக் கொடுத்தான் என்பது சைவ மரபு. இதற்கு மாறாகத் திருமூலர் பாடிய தொன்மக்கதை உள்ளது; பல்வேறு சிந்தனை மரபுகள் கலந்துள்ளன. எனவே நந்தி அருளால் தாம் பாடியதாகத் திருமூலர் கூறுவதை வலியுறுத்தும் வண்ணம் பாயிரம் உள்ளது. பிற்கால மரபில் கடவுள் வாழ்த்து (விநாயகர், சிவன்), அவையடக்கம் என்ற வைப்பு முறையும், நூலின் இறுதியில் வாழ்த்தும் உள்ளன.

முதல் தந்திரத்தில் யாக்கை, செல்வம், இளமை, உயிர் நிலையாமை வரிசையாக அமைந்துள்ளன. ஒரு நிலையில் முதல் தந்திரம் பாடல்கள் பெரும்பாலும் கீழ்க்கணக்கு அற நூல்களை - *திருக்குறள், நாலடியார்* - ஒத்துள்ளன. அவைதிக சமயமான சமண, பௌத்தம் இரண்டும் தமிழ்ச் சிந்தனை மரபில் கலந்த பின்னரே நிலையாமைக் கருத்துக்களைப் பாடும் மரபு,

துறவறம் வலியுறுத்தப்படும் மரபு தமிழ் நூல்களில் இடம்பெற்றன. உலக வாழ்வை - இல்லற மரபை - முதன்மைப் படுத்துவதே தமிழ் மரபாகத் *தொல்காப்பியம்* முதல் காணப்படுகிறது. எனவேதான் அவைதிக சமயங்களுக்கு மாற்றாகத் தமிழ் மரபை முதன்மைப் படுத்தும் முறையில், நிலையாமைக்கும் துறவிற்கும் எதிராக, 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனப்பாடி உமையொரு பாகன், திருமகள் கேள்வன் ஆகிய இறைக் கோலங்களை முறையே சைவ, வைணவ சமயங்கள் வலியுறுத்தின. எனவே *திருமந்திரத்தின்* முதல் தந்திரம் நிலையாமையைப் பாடுவது, துறவைப் பாடுவது என்பவை வேறொரு சிந்தனை மரபின் - அறநெறிக்கால மரபின் - வெளிப்பாடுகள். மேலும் *திருமந்திரம்* நூலே பின்னால், 'ஊனுடம்பு ஆலயம்' (பா.1823) எனவும் 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்' (பா. 725) என்னும் பாடல்களின் அடிகளில் உடம்பு இழுக்கு என முன்னர் நினைத்ததாகத் திருமூலர் கூறுவதும் ஒன்றுக்கொன்று முரண்படும். யாக்கை நிலையாமையில் உடம்பு ஓடு, குயவன் வனைந்த மண்பாண்டம் (பா.158), தோற்பை (பா.167) என்றெல்லாம் பாடுவது ஒரு நிலையில் சமண, பௌத்த சமயிகள் கூறும் உடல் நிலையாமை, துறவு என்பவற்றை வலியுறுத்துகின்றன. மறுநிலையில் பிற்காலச் சித்தர் பாடல்களை நினைவுபடுத்தும். உடலைப் பழிப்பது பெண்ணைப் பழிப்பது போன்ற கருத்தாக்கங்கள் சித்தர் பாடல்கள் மரபிலும் (பட்டினத்தார், பதினெட்டுச் சித்தர்) பௌத்தத்திற்கு எதிராகத் தம் வேதாந்தக் கொள்கையைப்பேசிய ஆதிசங்கரர் மரபிலும் காணப்படுபவை. வாழ்க்கையை மாயை எனப் பார்த்த மரபு இது.

இதற்கு மாறாக, முன்னமே தமிழ் மரபின் தொடர்ச்சியாக நிலையாமை, துறவு என்பவற்றை மறுத்த தமிழ்ப் பக்தி மரபை உள்வாங்கித் தமிழ் அத்வைத மரபு (கி.பி. 13) கட்டமைக்கப்பட்டது. பொதுமக்கள் வேதாத்தமாக அது உள்ளது.[2] *திருமந்திரம்* ஒரே சமயத்தில் அவைதிக சமயம் கூறும் நிலையாமை, ஆதி சங்கரரின் வேதாந்தம், தமிழ்ப் பக்தி மரபு, சைவசித்தாந்த மரபு, சித்தர் மரபு, தமிழ் அத்வைத மரபு எனப்பலவற்றையும் உள்ளடக்கிய கலவைப்பிரதியாக உள்ளது. அத்துடன் பராசக்தியைப் பரம்பொருளாகக் கொள்ளும் சாக்த மரபு, அதன் கூறான தாந்திரிக மரபு ஆகியவை மிகுதியும் ஊடாடி உள்ளன. சமய வரலாற்றின்படி தாந்திரிகக் கோட்பாடு, பௌத்தத்திலிருந்து வைதிகசமயம் - சாக்தம் - உள்வாங்கியது. பௌத்தத்திற்கும் முன்னதாக இனக்குழுச் சமூக மரபில், பெண்தலைமைச் சமூகத்தில் காணப்பட்டது. *சிலப்பதிகார* வேட்டுவ வரியில் இடம்பெறும் வாலை வழிபாடு இதற்கு நல்ல சான்று. கள்ளுண்ணாமையை வலியுறுத்தும்போது (பா. 324-336), *திருக்குறள்* மரபைக்(அறநூல் -

அவைதிகம்) கூறும் திருமூலர், 'சக்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்' (பா.332) என்கிறார். ஒருநிலையில் அவைதிக அறநெறித் தளத்தில் நின்று கள், புலால் மறுப்பைக் கூறுகிறார். மற்றொரு தளத்தில் சாக்த மரபு, தாந்திரிக நெறியினர் கள்ளுண்டு களிப்பதைக் கூறுகிறார். இது ஊடாட்டம் மட்டுமின்றித் *திருமந்திரம்* காலத்தை மிகப் பின் தள்ளும்.

சக்தி வழிபாட்டு மரபில் வாம நெறியினர் (வாமாசாரம்) இவ்வாறு கள், புலால் என்பதும் பெண்களோடு கூடுவதுமான சடங்கு மரபைத் ***தக்கயாகப் பரணியின்*** பழைய உரையாசிரியர் (கி.பி.11) குறிப்பிடுகிறார். தமிழ் மரபில் அது முதல் பதிவு. உயிர் நிலையாமையைப் பேசும்போது திருமாலும் சிவனும் ஒன்று எனத் தமிழ் அத்வைத மரபைப் பேசுகிறார். 'வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை... நந்தியை' (பா. 190) எனப்பாடுகிறார். தமிழ் வேதாந்த மரபினர் - பாட்டனார், தத்துவராயர், ஆவுடையக்காள் போன்றோர் - இவ்வாறு பாடியுள்ளனர்.[3] ***திருமந்திரம்*** கலவை நூல்; பலர் எழுதியது; மிகப் பிற்காலத்தது என்பதை இவை வலியுறுத்தும்.

சிவன் பற்றிய தொன்மங்களைக் குறியீட்டு முறையில் விளக்குவதும் சித்தாந்த மரபை இயைப்பதும் திருமூலரின் சைவமரபை வெளிப்படுத்தும். சான்றாக முப்புரம் எரித்த தொன்மத்தை, 'முப்புரமாவது மும்மலக் காரியம்' (பா. 343) எனச்சித்தாந்த மரபில் குறியீட்டு விளக்கம் தருகிறார். உடனே மனோன்மணி, பூரணி, திரிபுரை, முக்கோணம் (பா. 400-402) எனச் சாக்த மரபோடு இணைக்கிறார். பிற்காலச் சாக்த நெறியினர் பல்வேறு எந்திரங்கள் அமைத்துப் (ஸ்ரீசக்ரம்) பராசக்தியை முழுமுதற் கடவுளாகப் போற்றுபவர் இவ்வாறு கூறுவர். திருமூலர் அதைப் பாடுவது அவருடைய காலத்தை மறு ஆய்வு செய்ய உதவும்.

அதேபோலக் கருஉற்பத்தியை விரிவாகப் (பா. 451-491) பேசுவது (2ஆம் தந்திரம்), பரியங்க யோகம் எனக் கலவியைப் பற்றி விளக்குவது (3ஆம் தந்திரம் - பா. 825 - 844) இரண்டும் ***திருமந்திரத்தில்*** - சைவத் திருமுறையில் - எப்படி இடம் பெற்றன? தோத்திர நூல் எனக் கொண்டாடப்படும் பிரதியில் வெளிப்படையாகப் பரியங்க யோகம் (கலவி) பேசப்படுவது ஏற்புடையதா? 'ஆண் மிகில் ஆணாகும். பெண் மிகில் பெண்ணாகும்' (பா. 478) என்ற பாடலடி இதற்கு நல்ல சான்று. கலவியைத் திருமூலர் யோகம் எனக் கூறினாலும் தமிழ் மரபில் தாந்திரிக நெறிப்பட்ட சாக்தம் மட்டுமே இதை விளக்கும். வடமொழியில் காமசூத்திரம் போன்ற நூல்களும் தமிழ் மரபில் அதிவீர ராம பாண்டியரின் ***கொக்கோகம்*** போன்ற நூல்களும் இதை விரிவாக விளக்கும். இதற்குச் சைவமரபில் இடமுண்டா என்பது விவாதத்திற்குரியது. இதுவும் ***திருமந்திரத்தின்*** காலத்தைப் பின் தள்ள உதவும் சான்று.

மூன்றாம் தந்திரம் முழுவதும் யோகம் பற்றியும் நாள் கணித மரபு - பஞ்சாங்க மரபு - கூறுவதும் தமிழ் மரபில் முற்பட இல்லை. மாறாக நாளும் கோளும் தீயவாயினும் அரனடியாருக்கு நன்மையாகும் என்று ஞானசம்பந்தர் தொடங்கித்(கோளாறு பதிகம்) தமிழ் பக்தி மரபு வலியுறுத்தியுள்ளது. எனவே *திருமந்திரம்* வார சூலை பற்றி (பா. 790 - 798) விளக்குவது தமிழ் மரபன்று. அதேபோல யோகம் பற்றி மிக விரிவாக 3ஆம் தந்திரம் விளக்குகிறது. பக்தி இலக்கிய மரபு யோகத்தை வலியுறுத்தவில்லை. திருமழிசையாழ்வார் தவிர, சைவ, வைணவ அடியார்கள் இதை முற்றிலுமாகப் புறந்தள்ளினர். தனிமனித ஈடேற்றத்திற்குரிய நெறியோகம் என அருளாளர்கள் கருதினர். அனைவருக்குமான வீடுபேறு என்பதாக - வடமொழி வேத மரபிற்கு மாற்றாக - ஞானசம்பந்தர் தொடங்கித் தமிழ்ப் பக்தி மரபு விளக்கியது. சித்தர் மரபில்தான் பிற்காலத்தில் இது விளக்கப்பட்டது. எனவே *திருமந்திரம்* யோக மரபைப்பாடுவது அதன் காலம் பற்றி விவாதிக்கத் துணை செய்கிறது.

நாலாம் தந்திரம் முழுவதும் சாக்த மரபை - தாந்திரிக அடிப்படையில் விரித்துரைக்கிறது. குறிப்பிட்ட பகுதி வைரவி (வயிரவி) மந்திரம் எனவும் பூரண சக்தி எனவும் பெயர்களிடப்பட்டுள்ளன. வெளிப்படையாகப் பராசக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட மரபைத் *திருமந்திரம்* விரித்துரைக்கிறது. ***தக்கயாகப் பரணி*** தொடங்கித் தமிழில் இடம் பெற்றுள்ள சாக்த மரபும் தாந்திரிகச் சக்ரவழிபாட்டு மரபும் இதில் பின்னிப் பிணைந்துள்ளன. 'அவளை அறிந்தபின் அருந்தவம் இல்லை' (பா. 1053) எனப் பாடுவது இதை வலியுறுத்தும். அபிராமி என்ற பெயரும் பயின்று வந்துள்ளது. முழுவதுமாகச் சக்தி வழிபாட்டு நூலாக இப்பகுதி தன்னை இனங்காட்டுவது பிரதியின் காலம் பற்றிய விவாதத்திற்குத் துணைசெய்யும். கண்ணுடைநாயகி, ஆவுக்கு நாயகி என்ற பெயர்கள் குறிப்பிட்ட சிவத்தலங்களிலுள்ள அம்மனின் பெயர்களாக உள்ளன. தமிழ் மரபில் சம்பந்தர், அப்பர் தேவாரப் பாடல்களில்தாம் முதன் முதலாகத் தமிழ் நாட்டுச் சிவத் தலங்களில் உறையும் ஈசன், தேவி பெயர்கள் பதிவாகி உள்ளன. எனவே தேவாரக் காலத்திற்கு முற்பட்ட காலத்தவர் திருமூலர் என்ற வாதம் தவறானதாகும். அம்மையின் பெயர் இடம்பெறுவது போலத் தலம்சார்ந்த இறைவன் பெயர் இல்லை. அத்துடன் கலைமகள் - நாவுக்கு நாயகி, பாவுக்கு நாயகி என்றெல்லாம் குறிப்பிடப்படுகிறாள். தேவார மரபில் உமையம்மை பேசப்படும் அளவிற்குத் திருமகள், கலைமகள் இடம்பெறவில்லை. சக்தி வழிபாட்டை முதன்மைப் படுத்தும்போது, இறைவனோடு கூடிய நிலையிலும் (உமா சகிதர்) இறைவனுக்கு மேலான பராசக்தி-பரம் பொருள் - நிலையிலும் பாடுகிறார் திருமூலர். முத்தொழில், ஐந்தொழில் இயக்கும் கடவுளருக்கு மேம்பட்ட மூல

வித்தான பராசக்தி-திரிபுரையாக அவர் பரவுகிறார். மாதொருபாக வடிவை முதன்மைப்படுத்தவேண்டி இல்லற நெறியை வலியுறுத்துகிறார். 'இல்லடைந் தானுக்கும் இல்லாத தொன்றில்லை' (பா. 1417) எனப் பாடுவது முன்பு துறவறத்தை வலியுறுத்திய நிலையோடு மாறுபடுகிறது. எனவே *திருமந்திரப்* பிரதி வெவ்வேறு காலங்களைச் சார்ந்த சிந்தனை மரபுகள் கலந்ததாக உள்ளது.

5ஆம் தந்திரம் முழுவதும் சைவ சமயச் சித்தாந்த மரபை விரிவாகப் பேசுகிறது. பின்னர்த் தோன்றிய *சிவஞானசித்தியார், சிவஞான மாபாடியும்* கூறும் விவாதங்களுக்கு (பரபக்கம், சுபக்கம்) இணையானதாக உள்ளது. தேவார மூவர், மணிவாசகர் பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள், தொடர்புடைய கலைச்சொற்கள் விரவியுள்ளன. ஆனால் *சிவஞான போதம்* தொடங்கித் தமிழ் மரபில் தனித் துறையாக வளர்ந்த சித்தாந்த மரபு - சாத்திர மரபு - *திருமந்திரத்தில்* 5ஆம் தந்திரம் முழுவதுமாக இடம் பெற்றுள்ளது அதன் காலத்தைப் பின்தள்ளும். அதே நேரத்தில் புறச் சமயங்களை மிகக் கடுமையாக விவாதம் மூலம் தள்ளும் திருமூலர், 'ஆறு சமயமும் கண்டவர் கண்டிலர்' (பா. 1533) எனப்பாடுமிடத்தில் ஆறுசமயம் எனக் குறிப்பிடுவது அறுவகைச் சமயமா? அறுவகைத் தரிசனங்களா? (இந்தியச் சிந்தனை மரபு) என்ற கேள்விகள் எழும். சைவ சித்தாந்தத்தைப் பாடும்போது சில இடங்களில் வேதாந்தத்தின் வேறாகச் சித்தாந்தத்தைக் கூறுகிறார் (பா.1435). அதே நேரத்தில் இரண்டும் ஒன்று (பா. 1422) என வேதாந்த சித்தாந்தச் சமரசம் கூறுவது தாயமானவர் தொடங்கிவரும் பிற்காலத் தமிழ் மரபு.

இதன் தொடர்ச்சியாக ஏழாம் தந்திரத்தில் சிவலிங்க வகைகள் பற்றியும் யோகநெறியிலும் உணர்வு மயமான பக்தி நெறியிலும் சிவனை வழிபடும் பல்வேறு முறைகள் பற்றியும் பேசுகிறார். அண்டம் தொடங்கி ஆத்மலிங்கம் வரை அவர் விரிவாகப்பேசுவது பிற்கால மரபு, தமிழ்ச் சமூக மரபில் பிற்காலச் சோழர் உருவாக்கிய கட்டுமானக் கோயில்களில் கருவறையில் - சைவமரபில் - மூல மூர்த்தமாகச் சிவலிங்கம் அமைந்தது. அதற்கேற்ற முறையில் ஆகம நூற்கள் உருவாக்கப்பட்டன. தேவாரக் காலத்தில் இறைத் திருமேனி கருவறையில் சிவலிங்கமாக இருந்ததற்கான சான்று வெளிப்படையாக இல்லை. பல்லவர், முற்காலப் பாண்டியர் காலக்குடைவரைக் கோயில், புடைப்புச் சிற்பம், கற்றளிகள் கோயிலமைப்பில் இலிங்கம் இடம்பெற்றமைக்கான வரலாற்றுச் சான்றுகள் இதுவரை கிட்டவில்லை. எனவே சிவலிங்கம் பற்றி விரிவாகப் பேசும் திருமூலர் காலம் தேவார ஆசிரியர்களுக்குப் பிற்படும்.

'ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்' (பா. 1816) எனப்பாடும் போது *தேவார, திருவாசகம்* கூறும் உணர்ச்சிமயமான பக்தியைக் கூறுகிறார். அதே

நேரத்தில் சாமதி நிலை சென்று யோக நெறியில் இறைவனைக் காணும் பயிற்சியையும் கூறுகிறார். 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' (பா. 1823) எனப் பாடுபவர், கட்டுமானக் கோயில் கூறுகளையும் (விமானம், பலி பீடம்) விளக்குகிறார். சிவபூசை, மகேசுவர பூசை (அடியார் வழிபாடு) பற்றி விரிவாகப் பேசுகிறார். 'நடமாடும் கோயில்' (பா. 1857) எனப் பாடுபவர் விரிவாக நந்தியைப் பரவுகிறார். 'நந்தியைப் பூசிக்க நற்பூசையாமே' (பா.1853) எனப்பாடுவது நந்தியைக் குருவாகத் *திருமந்திரம்* முழுவதிலும் கூறுவது திருமூலரின் மரபு. இந்திய மரபில் நந்தியைக் குருவாகக் கொள்ளும் சைவமரபு, தமிழ் மரபிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை இது விளக்கும். பக்தி இயக்க மரபில் சிவனே குரு. 'அருபரத்தொருவன்... குருபரனாகி' என மணிவாசகர் பாடுவது தமிழ் மரபு. அதே காலக்கட்டத்தில் வைணவத்திலும் இது காணப்பட்டது. 'பீதக ஆடைப் பிரானார் பிரம குரு' எனப் பெரியாழ்வார் பாடுவார். திருமூலர் நந்தியைக் குருவாகக் கூறுவது பிற்கால மரபு. அடியார் பிச்சையேற்று உண்ணுவதை வலியுறுத்தும் கருத்து (பா.1886 - 1891) முழுவதும் நிறுவனச்சமயமாக உருவெடுத்த பிற்கால மரபு. பக்தி இயக்கக் காலத்தில் இது இல்லை. 'அட்டிட்டல் காணாது போதியோ' எனச் சம்பந்தரும், அப்பூதி அடிகள் அப்பருக்கு உணவிடுதல், சிறுத் தொண்டர் சோறிட்டது என்பன அக்காலச்சமூக அமைப்பில் காணப்பட்ட இல்லற நெறி. துறவி பிச்சையேற்று உண்பதைத் திருமூலர் நெறியாகக் கூறுவது பிற்கால நிறுவனச் சமய மரபு. மீண்டும் உடற்கூறு, கலவி பற்றி விரிவாகக் கூறுவது (விந்து பற்றிய பிரிவு - 49 பாடல்கள்) தாந்திரிக மரபு. அது சித்தர் நெறியோடு கலந்துள்ளது. பக்தி மரபை உள்வாங்கிய தமிழ் வேதாந்த மரபு இத்தந்திரத்திலும் பரவியுள்ளது. சான்றாக 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' (பா. 2104) எனப் பொதுநிலையில் வேதாந்தமாகப் பாடுபவர், 'ஏறுடையாய் இறைவா' (பா. 2111) என வெளிப்படையாகப் பக்தி மரபைப் போற்றுகிறார்.

6ஆம் தந்திரம் முழுவதும் சைவ பக்தி மரபை உள்வாங்கிய தமிழ் வேதாந்தம் மையப்படுத்தப் பட்டுள்ளது. தமிழ் வேதாந்திகள் கூறும் காண்பவன், காட்சி, பொருள் என மூன்றையும் குறிக்கும் கலைச் சொற்கள் (ஞாதுரு ஞான ஞேயம்) அப்படியே திருமூலரால் ஆளப்பட்டுள்ளன. தமிழ் மரபில் பிற்காலப் பதிவான இக்கருத்து, பக்தி மரபில் இல்லாதது. திருநீறு பூசுவதைக் 'கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை' (பா.1666) எனப் பாடுபவர் நூல், சிகை (பூணூல், குடுமி) என்பவற்றை முறையே வேதாந்தம், ஞானம் (பா.1665) எனக் குறியீட்டு விளக்கம் தரும்போது திருமூலர் சைவமரபினை உள்வாங்கித் தமிழ் வேதாந்த மரபைப் பாடுகிறார். இப்பாடல்கள் அப்படியே தத்துவராயரின் பாடுதுறைப் பாடல்களோடு ஒத்துள்ளன.

எட்டாம் தந்திரம் முழுவதும் வேதாந்தம், சைவ சித்தாந்தம், பக்தி மரபு என்பன ஒன்றோடொன்று கலந்து வருவதைக் காண்கிறோம். இறைவன் கரும்புக்கட்டி, பாலில் நெய், பழத்தின் சுவை, பூவில் நாற்றம் (பா.2639) எனத் திருமூலர் பாடுவது சம்பந்தர், அப்பர் தேவாரத்தை அப்படியே நினைவூட்டுகிறது. நேர்மாறாக, 'நீ யதுவானால்... பேருரை' (பா. 2577) எனப் பாடும்போது பிரம்ம சூத்திர மகா வாக்கியமான 'தத்துவம் அஸி' (நீ அதுவாக உள்ளாய்) எனப் பாதராயனர் தொகுத்த உபநிடதப் பாடல்களை விளக்கும். நான் கடவுள் (பிரம்மம்), பிரம்மமும் நானும் ஒன்று என்ற ஆதி சங்கரரின் வேதாந்தத்தை அப்படியே கூறுவதாகும். மீண்டும் பிற்காலத் தமிழ்ச் சித்தர் மரபில் பேசப்பட்ட குறியீட்டுச் சொற்கள் மூலம் கருத்தை விளக்கும் போக்கு உள்ளது. இந்த அடிப்படையில் தான் திருமூலர், 'மரத்தை மறைத்தது மாமதயானை' எனவும் 'பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்' எனவும் (பா. 2290 - 2289) பாடுகிறார். ஒரு நிலையில் குறியீட்டுச் சொற்களாக மரம், பொன், யானை, பூடணம் (அணிகலன்) இருந்த போதிலும் மறைந்த நிலையில் வேதாந்தக் கருத்து உள்ளது. பரமாகிய பிரம்மத்தில் சடப் பொருளான காணும் உலகு மறைந்து விடும்; எல்லாம் ஒன்றே (கயிறு, பாம்பு சான்று) என்பதைத் திருமூலர் வலியுறுத்துகிறார்.

'வேதாந்தமும் சித்தாந்தமும் சிவனையே காட்டும்' (பா.2394) எனப்பாடுவது மாறுபட்டவாதம். சித்தாந்தத்தில் சிவன் பரம் பொருள்; வேதாந்திகளுக்குப் பிரம்மம் பரம் பொருள் - தமிழ் வேதாந்தத்தில் சிவன், திருமால் இருவரும் ஒன்று, பரம்பொருள். எனவே திருமூலரின் நிலைப்பாடு எது எனக் கேள்விக்குறியதாகிறது. 'கன்று நினைத்தெழு தாயென ' (பா. 2446) என ஈசனை - பரம் பொருளை அடையாளப்படுத்தும் போது தமிழ்ப் பக்தி மரபு முதன்மை பெறுகிறது. சங்கரரின் வேதாந்தக் கொள்கையை ஏற்கும் திருமூலர் சமூக மரபில் காணப்பட்ட சாதி வேறுபாடு, பாலின வேறுபாடுகளை முழுவதும் புறந்தள்ளிய பக்தி இயக்க மரபை (பிற்கால நிறுவனச் சமயங்களன்று) அப்படியே விளக்குகிறார். புனிதம், தீட்டு என்ற கருத்தாக்கங்களுக்கு எதிரான நிலையில் 'ஆசூசம் இல்லை அரனை அர்ச்சிப்பார்க்கு' (பா.2552; ஆசூசம்-தீட்டு) என்று குரல் கொடுக்கிறார். சிவனை வழிபடுவாருக்கு, வேதம் வல்ல ஞானிக்குத் தீட்டு இல்லை என்பது நடைமுறைக்கு மாறுபட்டது.

ஒன்பதாம் தந்திரம் பலவகைக் கருத்தாக்கங்களை உள்ளடக்கியது. வேதாந்தம், சித்தாந்தம், வீரசைவம் (சூனிய உரையாடல்), பக்தி மரபு எனப்பலவும் கலந்துள்ளன. 'நமன் வந்தால் சிவநாமம் என்ற ஞானவாள் உள்ளது' (பா. 2968) என்று திருமூலர் கூறுவது அப்படியே *திருவாசகத்*

தொடரை நினைவூட்டும். 'கடவுளை நாளும் வழிபட்டு... நின்றவர் கோளும் வினையும் அறுப்பர்' (பா.2995) எனப் பாடும்போது சம்பந்தர் தொடங்கிய பக்தி மரபை நினைவூட்டுகிறார். ஓம் என்னும் பிரணவ மந்திரம் பற்றிய கருத்தை விளக்கும்போது, 'பிரணவம் வேதாந்த வீதி' (பா.2675) எனப்பாடுகிறார். யோகமுறை, வேதாந்தம் மரபு, சித்தாந்தம், பக்தி இயக்க மரபு என எல்லாவற்றையும் கலந்த கலவையாக இத்தந்திரம் உள்ளது.[4] மோன சமாதி என யோக நெறியைப் பாடும்போது குறியீட்டு முறையில், அகத்தில் கண்கொண்டு காண்பதைத் தாய் தன் கணவனோடு கூடியதை மகளுக்கு விளக்க முடியாது (பா.2944) எனப் பாடுகிறார். ஒரு நிலையில் *திருமந்திரம்* எளிய சொற்களில் குறியீட்டு முறையில் உயர் தத்துவத்தைப் பேசுவதாகத் தென்படுகிறது. பிற்காலச் சித்தர் மரபு - வள்ளலார் வரை ('வானத்தின் மீது') - இம்மரபு தொடர்கிறது. இதுவரை பார்த்த விவாதங்கள் அடிப்படையில் *திருமந்திரப்* பிரதியில் பல்வேறு காலங்களைச் சார்ந்த வெவ்வேறு சிந்தனைக் குழுக்களின் கருத்தாக்கங்கள் பின்னிப் பிணைந்துள்ளன. அறநூல் மரபு (அவைதிக நெறியிலான சமண அறநூல் மரபு - *நாலடியார், திருக்குறள்*), பக்தி மரபு, சங்கர வேதாந்த மரபு, தமிழ் அத்வைத மரபு, சைவ சித்தாந்த மரபு, தாந்திரிக நெறி கலந்த சாக்த மரபு, சித்தர் மரபு, வேதாந்த சித்தாந்த சமரசமரபு, வீர சைவமரபு எனப்பல்வேறு சிந்தனை மரபுகளைத் தன்னகத்தே கொண்டதாகத் *திருமந்திரம்* உள்ளது. அறநூல் காலம் முதல் (கி.பி. 3-5) தாயுமானவர் (கி.பி. 17) கட்டமைத்த வேதாந்த சித்தாந்த சமரச நெறி வரையிலான பல்வேறு காலச் சிந்தனைகள் கலந்து உருவான கலவை நூலாகத் *திருமந்திரம்* உள்ளது.

குறிப்புகள்

1. *திருமூலர், திருமந்திரம்,* குமரகுருபரன் பிள்ளை,TM,(ப.ஆ.), ஸ்ரீவைகுண்டம், திருபனந்தாள் மடம், 1968.

   இப்பதிப்பே இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ப.இராமநாத பிள்ளை எழுதிய விளக்க உரையோடு, கழகம் வெளியிட்ட பதிப்பும் (1996) இதே முறையில் பகுப்பு, உட்பிரிவுகளுடன் உள்ளது அறியத்தக்கது.

2. இது பற்றி விரிவாக அறியப் பின்வரும் நூல் காண்க: சு.வேங்கடராமன், *அறியப்படாத இலக்கிய வரலாறு*, பக். 47-56, 2004, மதுரை, மீனாட்சி புத்தக நிலையம்.

3. மேலது, இயல்கள் 4, 6, 8 காண்க,

4. சு.வேங்கடராமன், *தமிழர் சமய மரபுகள்*, முன்னுரை, 2007, மதுரை, மீனாட்சி புத்தக நிலையம்.

09. Tamil inscriptions found near Tiruvellarai temple

T.S. Subramanian

CHENNAI: Three inscriptions of different periods, including one belonging to a merchant guild, have been discovered close to an ancient Vishnu temple at Tiruvellarai near Tiruchi.

The inscription in Tamil, datable to the 10th - 11th century A.D., has several symbols, associated with such trade guilds, engraved on it. A team, comprising D.Dayalan, Superintending Archaeologist, Temple Survey Project, Southern region, Archaeological Survey of India (ASI), and A. Anil Kumar, Assistant Archaeologist, made the discovery. The inscription about the merchant guild is engraved on a granite slab, found half buried in a field south-west of the Pundarikatchar temple. It has 21 lines in Tamil, with a few Sanskrit words.

Dr. Dayalan said this inscription referred to an "ambalam" (a temple or mantapa) of Chettiyars of Tiruvellarai and mentioned a trade guild called "ainuttruvar," which meant 500 members.

It was common to make transactions or build edifices in the name of "ainuttruvar," and the Chettiyars, a trading community, could have formed the "ainuttruvar."

This inscription also has the engraving of two bags, called "pasumpai" and considered sacred by merchant communities.

The other symbols are a sword, billhook, bow and arrow, coiled whip, elephant goad and lance. The inscription refers to a person called "tirukayyilattu ainutruvan" as the protector of charity and has a verse that says that "the feet of the persons who patronize or protect charity shall be on my head."

Some of the merchant guilds referred to in the inscriptions in south India are "ainnutruvar," "Manigramam," "Nanadesi," "Padinenbhumi," "Anjuvannam" and "Ayyavole."

The "ainnutruvar" over-arched all the substantial traders' guilds in a particular locality, and also covered a wider area and various communities, including artisans, said Dr. Dayalan. An inscription of about 1,000 A.D., found at Bedkihal in Belgaum district, Karnataka, referred to "Aynurbaru" (500 greatmen). Merchant guild inscriptions with symbols such as conch, axe and lamp have been found at

Melnangavaram in Karur district; Idaimalai-pattipudur, Kaliampatti, Nagainallur and Singalantakanallur, all in Tiruchi district; and Pozhichalur in Kanchipuram district. These guilds had warriors to protect them.

The ASI team found several label inscriptions in Pallava grantha, belonging to the 7th-8th century A.D., on a hillock on the rear of the temple. These labels are the names of devotees such as (ka) pra mina sa and (aa) vi ri ta.

On the same hillock, Dr. Dayalan, Mr. Anil Kumar and others discovered a big inscription, running to several metres in size. It is in Tamil and belongs to the Vijayanagara period. Preliminary study indicates that it refers to a "bhattar" (temple Brahmin) of a village called Manavala Chaturvedi Mangalam and an officer named Mummudi Chola Thevar.

V. Vedachalam, retired Senior Epigraphist, Tamil Nadu Department of Archaeology, who has researched on Tiruvellarai and its temple, called these discoveries "important additions to Tiruvellarai's history."

Dr. Vedachalam, who has authored a book titled "Tiruvellarai,' which was published by the Department in 1977, said that while Tiruvellarai was 1,500 years old, the Pundarikatchar temple had its origin during the reign of the Pallava king, Nandivarman II, in the 7th-8th century A.D., The temple saw continuous construction by the Chola, the later Pandya, the Hoysala and the Vijayanagara Kings.

ANCIENT SYMBOLS: An inscription belonging to a merchant guild, datable to 10th -11th century AD. –Photo: *ARCEOLOGICAL SURVEY OF INDIA*

Source: 24th August 2008, THE HINDU

10. The Kural

J. LAZARUS

By way of introduction it may be stated at the outset that the *Kural* is a Tamil poem on ethical subjects, held in the highest estimation by the Tamil people. No less than twelve commentaries have been written on this work by men representing different religious sects of Hinduism: the one written by the Brahman Parimēlaḻagar[1] being the most popular. The text itself is simple and readily yields its meaning to the diligent student. But as there is a "pleasure in poetic pains which only poets know," so in this matchless piece of poetic effort, there are depths of thought and heights of moral excellence which can only be perceived by those endowed with a sense for the true and the beautiful in life. Though universally known and frequently quoted, the *Kural* is not studied as intensely as it ought to be by the Tamil people. A few foreigners, however, have bestowed on its study a considerable amount of labour, time and thought. Among Frenchmen M. Ariel, among Italians Father Beschi, the greatest European Tamil scholar, among Germans Dr. Graul and among Englishmen Ellis, Drew, Robinson and Pope, have rendered valuable service by publishing partial or complete translations of the *Kural* and thus introducing it to the learned public of Europe. Mr. Drew carried his translation to the end of the 63rd chapter, and the writer of this paper may be pardoned for adding that he was the first to publish a prose rendering of the remaining seventy chapters. The late Dr. Bower was quite familiar with the poet, but unfortunately he did not commit to writing the results of this critical, and life-long study of this great work. In his valuable Dravidian Comparative Grammar the late lamented Bishop Caldwell refers particularly to the *Kural* as the most ancient extant Tamil work and fixes the date of its composition at a period previous to the ninth century. This conjecture, however, has since been indisputably proved to be incorrect by Scholars who have investigated the subject with the light of literature and epigraphy. The late Professor Sundaram Pillai and Kanakasabai Pillai and Mr. S. Krishnaswamy Aiyengar, M.A., M.R.A.S., have shown that

---

Source: The Tamilian Antiquary Vol. II, No.1, VI. THE KURAL
by the Late Rev. Dr. J. LAZARUS

Tiruvalluvar flourished in the Tamil Augustan Age, *i.e.,* in the first or the early year of the second century. The *Kural* is quoted in the Epics whose dates have been ascertained by internal evidence and contemporaneous history to have been in the second century.

With these introductory remarks, we may proceed to consider more fully the authorship, style and subject-matter of the work before us. Very little is known regarding the author of the *Kural.* His very name has not been handed down to posterity. From time immemorial he has been described as Tiruvalluvar, the sacred Pariah priest. The Pariahs are divided into eighteen tribes, at the head of which stands the Valluvan. He is their priest, soothsayer and doctor. Unlike the hut of the Pariah, the Valluvan's house is quite close to, if not on the very border of or just within, the 'village' proper and not in the *cheri* itself. He wears a thread like the twice-born. His service as a doctor and astrologer are in great demand among the higher castes, who treat him with respect and receive him into their houses. With reading and writing, he is more or less familiar, while he repeats by rote a great deal of current learning and common *mantras.* His general appearance is so neat that even a practiced eye fails to see the Pariah in him. To this tribe then did the author of the *Kural* belong. And twenty centuries ago when the caste lines of demarcation were not so rigidly drawn as they are now, Tiruvalluvar must have enjoyed greater facilities for education, and more familiar intercourse with peoples of other classes, than is the case at present with his down-trodden castemen. A later tradition, however, makes the poet a son of a Brahman father and a Pariah mother, evidently a foolish attempt to improve on the humble though purer ancestry of the Tamil bard. The words *Adi Bagavan* occur in the first distich of the *Kural* as an epithet of the Deity; and though the tradition would make it appear that *Adi* was the mother and *Bagavan* the father of the poet, it has utterly failed to alter the descriptive name of the poet, which still continues to be Valluvar.

The poet lived at St. Thomé or Mylapur, the southern suburb of Madras, and earned his livelihood as a weaver. How a Valluvan could take to working at the loom, is to us somewhat surprising. And surprising as this may be, it is still more surprising how a Valluvan weaver could win the hand of a Vellala maid of

Cāvripauk. But so it was two thousand years ago. The poet is also said to have enjoyed the friendship and patronage of one Elasingan, a wealthy merchant of St. Thome who belonged to the *Karaya* or *Parava* community, owned vessels and had trade with foreign countries. With his wife Vāsuki, therefore, the poet seems to have spent the greater portion of his life in this 'town of peacocks,' as the name Mylapore signifies, and gathered the materials for his immortal work, having probably as his contemporaries the Pandiyan Ugra-peru-valudi, Chancellor of the third academy in Madura and the Roman Emperor Claudius I, conqueror of Britain.[2]

But whence did the poet gather his materials? This is an important question and no less interesting. The most natural source must have been the vast literature of the Sangam period. And life in his time must, of course, have afforded his genius ample food for thought and reflection. Not far from his village was the Chola Kingdom invariably in alliance with the Paṇḍyās of the south. The follies and vices of the Kings, the early training and education of the Princes, the intrigues of their courts, the varied gifts and tactics of the Ministers, the frequent wars which laid the states in ruins, the contests of warriors who combated with the courage and skill of gladiators, the frequency of famines and epidemics, could not but have filled the poet's mind with anxious thoughts regarding royal rectitude and the well-being of kingdoms. The *Kural* also bears testimony to the fact that the 'worker at the loom' was a close observer of life in its more familiar and humbler walks. The ascetic and the house-holder, the gambler and the drunkard, the farmer and the idler, the wedded husband and the unwedded lover, the devoted wife and the mercenary prostitute, the host and the guest, and parents and children do not escape the activity of his mind or the keenness of his eyes. Even nature, animate as well as inanimate, is laid under contribution. The roaring sea of St. Thomé beating with its creamy surf on the palm-grown shore, the hills and lakes, the brooks and rivers, the *topes* and groves in his neighbourhood, the flowers and herbs, the plants and shrubs, with the birds and animals of his country, the poet summons to his aid as he clothes moral 'dry bones' with life and beauty.

It is most likely that Tiruvalluvar with his active mind ever in quest of knowledge and bent on discerning truth from error, must have visited the third

and last survivivg University or College of Madura, and witnessed the hair-splitting controversies of the proud arbiters of learning in that ancient seat of Shen-Tamil. The rival schools of religion and philosophy which were in his time fast developing into rival sects, the spread of Buddhism and the decline of Jainism, the unsuitability of the Vedic and Brahmanic cult to the simple tastes of the Dravidian farmer, the moral worthlessness of rites and ceremonies, these the poet had carefully scrutinized and found utterly useless for the system he was daily elaborating in his humble cottage.

It is often urged, and with considerable force, that at least for the purer moral sentiments of the *Kural,* the poet is indebted to Christianity. "We may fairly picture him," writes Dr.Pope, the latest advocate of this theory, "walking along the sea-shore with the Christian teachers, and imbibing Christian ideas, tinged with the peculiarities of the Alexandrian School, and day by day working them into his own wonderful *Kural.*" But the *Kural* betrays no traces of distinctively Christian ideas or ethics such as may be ascribed to Christ or His Apostles alone. None of the ten epithets by which the Deity is described in the opening chapter of the *Kural* have the remotest connection with Christ or God, that is to say, as they are designated in the Bible. The chapter on Killing deals exclusively with the literal taking away of life. That on Love is quite different from the Apostle's eulogium in 1 cor.xiii. Of course here and there, there are similarities of expression, nay even identical moral sentiments, but this is quite natural; for human nature is the same everywhere, and even oceans cannot separate kindred souls or moral instincts. Of one thing, however, we may be certain. In his daily intercourse with the Christians of Mylapore, which is quite probable, the poet must have observed the superior sanctity and attractiveness of the Christian home, which may have contributed in no small degree to the beautiful picture he has given us of a Tamil Family.

When the work was completed the poet repaired, we are told, to Madura to secure for it the *imprimatur* of the College of Pandits there. It is said that at first the haughty Professors, refused to review it. The author thereupon requested permission to place it on their 'divine seat' which was then afloat in a tank. The request was granted. But the seat immediately contracted itself to the size of the

book and threw the professors into the tank. Shorn of all figure, the account means, that, though it was far from easy for the humble poet to get his work acknowledged by the southern luminaries as one of intrinsic merit, his ultimate triumph was complete.

The poet's life was a poem in itself. The concurrent voice of various traditions bears testimony to the happy and exemplary life he led with his beloved Vāsuki. She it was who had sat for the poet's portrait of the ideal wife. A pattern of perfect obedience and devoted virtue, she had never during her whole married life, questioned her lord's command. The night on which she died, the poet was heard to utter the following pathetic lines :

"O thou loving one, O sweet'ner of my food,
O wife who ne'er transgressed my word,
who did'st chafe my feet, rising first and sleeping last,
O when will these eyes know sleep again!"

Vāsuki's death affected the sage so deeply that he soon secluded himself from society and devoted the rest of his life to religious contemplation. At his death, his body was, according to his expressed desire, exposed in the open air outside the town to be devoured by crows.

"Though dead he yet speaketh." To think is to live; and he by whom the reality and responsibility of life on earth was thought out in all its manifold bearings and aspects, still lives in the loving memory of millions. The despised Pariah has been raised to the highest pinnacle to which in the opinion of Hindus mortal man can rise: the Valluvan has become a god: he is regarded as an incarnation of Brahma. Brahman and Non-Brahman alike raise their hands in devout worship to this 'divine teacher.' Twenty centuries have not diminished the weigh of his authority or the vitality of his utterances. He lives, and his fame will increase with the flight of time; and so long as men continue to revere the true and the good so long will the words of the poet continue to inspire them, and gain him a seat with the great teachers of the world.

The *Kural* then is the work which this great teacher has bequeathed to posterity. Like its author, the work too is nameless. The name by which it is

known, is simply the name of the metre in which it is composed. Several Tamil poets have since followed our poet's example, and named their works after their respective metres. The word *Kural* means *short.* The root is *Kur,* a purely Tamil primitive But it has its cognates in Sanskrit and other Aryan languages, and is one of the many distinctively Tamil roots which unmistakably prove the hoary antiquity of the language and its intimate connection with some pre-Aryan tongue from which the Aryan, Semitic, and Tamilian families are generally held to have descended. But as applied to Tiruvalluvar's work, the term signifies a shortened form of the metre called *Venba.* For the *Venba* consists of four lines while the *Kural,* or *Kural-Venba,* as it is properly termed, consists but of two. And it is quite probable that the poet's genius invented this couplet form as being the best fitted to convey his thoughts in the briefest form to his countrymen. It approaches the Sansrit *sloka,* but is capable of clothing a perfect syllogism. The first line of each *Kural* contains four feet and the second, three. With the exception of the seventh or last foot, the others may consist of two or three metrical syllables. And thus by a most skilful combination of these two kinds of feet (for which western prosody has no generic names), involving an endless variety of accent – of spondees and iambuses, trochees and dactyls, and a corresponding variety of rhythm and pause, with a judicious introduction of rhyme and alliteration as well as a careful selection of soft and hard consonants, the poet plays on his two-stringed harp with match-less power and grace, and adapts his notes to every mood of mind or emotion of heart he desires to awaken in our souls.

Both critic and commentator unite in saying that the object of the *Kural* is to enable men to live, that is to say, live in the truest and highest sense, reminding us, very feebly it may be, of the words of Jesus who says, "I came that they may have life and have it abundantly." And from the *Kural* itself it may be gathered that while modern science defines life as a struggle against death, Tiruvalluvar by anticipation defines it as a struggle against the "seven-fold births."

In carrying out this great purpose the poet naturally treads in the path of Indian philosophers, and undertakes to write on the well-known four great themes, viz., Virtue, Wealth, Pleasure and Heaven. The last being beyond the pale of human knowledge and experience, he wisely omits; though incidentally he approaches it elsewhere with great yearning of soul.

The plan of the *Kural*, therefore, is briefly as follows: first an Introduction of four chapters, followed by thirty-four on *Virtue*, practised by both the domestic and the ascetic; seventy on *Wealth*, earned both by the state and citizen; with twenty-five on *Pleasure*, enjoyed by unwedded lovers ending in conjugal life; making in all 133 chapters. Each chapter contains ten couplets. Thus there are altogether 1,330 distiches in the *Kural*. The late Mr. Scott of Madura recently published an edition of it with a re-arrangement of the plan and what he considered to be the necessary emendations of the text. But time will soon shew that it was a futile attempt. The *Kural* cannot be improved nor its plan made more perfect. It is a perfect mosaic in itself. The slightest change in the size, shape or colour of a single stone would mar the beauty of the whole. "Complete in itself," to quote the words of Dr.Pope, "the sole work of its author, it has come down the stream of ages absolutely uninjured, hardly a single various reading of any importance being found." *(To be continued)*

Notes

1. Parimelalagar is now-a-days considered as a Brahman, because he was a Sanskrit scholar, and a native of Conjiveram as the Thondamandala-Chadagama work scarcely of any value for historical purposes – would have it. But according to the traditional account Kadayam was his birth place and Pungavar-nattam his residence, where he spent the major portion of his life. Both these villages are in the district of Tinnevelly; the former situated on the bank of the Thambraparni to the west of Tinnevelly and the latter in *Karisal-Kadu* (black cotton-soil) to the north of Tinneveliy. A wealthy and munificent land-lord of the village Pungavar-nattam by name Veli-kanda Nadar was his patron. Parimelalagar himself was of the same caste as his patrona Santar, and belonged to the *Gurukkal* family of the community. The site of his house is still discernible in the northernmost portion of the village. He was named Parimelalagar after the God-Siva of Madura who, according to the Stala-purana, appeared on horse-back as an Arabian horse-trader to save Manikkavacagar from the oppression of his king, the Pandya Arimardhana. (Alagar, Chocker and Sundarar are but synonymous, meaning "the graceful," and pari-mel "mounted on horse.") Parimelalagar was by religion a Saivite and the date of this able commentator of the *Kural* is about the 15th century A.D. and from his commentary we have to infer, he came after the great Nachchinarkkiniyar.

   Parimelalagar had a son by name Kumarasami Gurukkal, who was also a poet and a scholar and has left behind him a work "Adiramayanam" – an allegorical treatise composed in verse. It is still pıeserved in cadjan leaves

under the custody of one of the surviving descendants of the ancient and famous *Veli-kanda Nadar*. A clear and remarkable account of the descent of Parimelalagar the Editor chanced to gather from an old lady who according to her own account was the last descendant of Parimelalagar. This good old lady was living some 15 years ago at Iral a petty but flourishing village of the Santar community near Ettaiyapuram and not far from the said Punguvar-nattam. She was then about 90 years old, and although she had lost her sight, possessed a clear head and a noble heart. She became a widow while quite young and had no issue. She was held in great esteem by the villagers on account of her old age and virtuous character, besides her being a member of the *Gurukkal* family. With her the noble line of Parimelalagar terminates. To the information as to the existence of this old lady at Iral, the Editor owes his sincere thanks to the villagers of Pungavar-nattam. Branches of this *Gurukkal* family are at present found at Iral, Kadayam, Padukkapattu (near Kulasekhara Pattinam) Kach-china-villai (near Alwar-tirunagari) and in some of the villages of Nanjil-Nadu (South Tranvancore). The members of this family invariably bear the title of "Aiya' or "Aiyar." This is a hereditary title owned, from time immemorial, by the community to which the great Parimelalagar belonged. Perhaps this has led the modern literary world as well as the late talented Bishop, Dr. Caldwell, to shift Parimelalagar from the Santar (சான்றார்) community and place him in a Brahman environment. – Editor T.A.).

When Tiruvalluvar submitted his *Kural* to the Sangam Critics, the reigning sovereign in Madura was Ugra-Pandiayan, victor over the "Big Forest Fort" (Kana-per-eyil) of Vengai-Marban. Avvai, who is claimed as the sister of Valluvar and who was one of the three celebrities of the time the other two being Kapilar and Paranar has sung the praise of this Pandiyan and his two friends, the Cholan Perunarkilli and Cheran Mavenko. Both Kapilar and Paranar of the *'Great trio'* and another poet of no less fame known by the name of Perumkuntur-Kilar, have sung the praise of Vaiyaviko-perun-Pegan, a chief of the Vellala caste, whose daughter was given in marriage to Cheral-Athan-Chelva-Kadumko, whom Kapilar has sung in the VIIth section of the "Ten Tens," and whose son Cheral-Athan-Vana-varamban become the son-in-law of Karikala I. Another king sung by Paranar and Perumkuntur-kilar is Cholan Ilanjed-Chenni, father of Karikala I. From this we may infer that the contemporary kings of Pandiyan Ugra-Peru-Valudi alias Ugra-Pandiyan were the Cholas-Peru-Narkilli and Ilanjed-Chenni (brothers elder and younger respectively as the name suggests), and the Cheras-Mavenko and Chelva kadumko (probably brothers) and the Count Perum-Pegan.

From the "Epic of the Anklet," we learn that, in the beginning of the 2nd century A.D., the reigning kings of the three Tamil Kingdoms were Pandiyan

Nedum-Cheliyan, Cholan Nedumudi-Killi and Cheran Chenkuttuvan – the contemporaries of the Ceylon King Gajabahu I. Chenkuttuvan was a prominent figure of the day; he was the son of Cheral-Athan Vana-varamban above referred to and Nedu-mudi-Killi (son of Karikala I) was his maternal uncle. Pandiyan Nedumcheliyan, the then ruling king of Madura, is known by the epithet the "Conqueror of the Aryan Army," thus distinguishing him from his predecessor of the same name, the "Hero of Alanganam." We find no mention in the "Epic of the Anklet" or its sequal "The Jewel Belt" regarding the existence of the academy at the time, nor do we find any Sangam-poet singing the glories of this "Conqueror of the Aryan Army." And we know Avvai and Kapilar have already passed away from the scene. Mr.S. Krishnaswamy Aiyangar, M.A., in his learned article, "The Augustian Age of Tamil Literature," is inclined to think that the Pandyan Ugra-Peru-Valudi was "no other than the ill-starred Pandyan Nedum-Cheliyan of the "Epic of the Anklet;" and the late Kanakasabhai Pillai, the learned author of the "Tamils 1800 years Ago" places Ugra-Pandiyan as the third in succession after the Nedum- Cheliyan referred to in the Epic. Their conclusions, we fear, are not sufficiently warranted by facts. We have noted above that Ugra-Peru-Valudi was a contemporary of Perunar-Killi and Ilanjed-Chenni and thus an ancestor of the "ill-starred" Pandiyan Nedum-Cheliyan of the 'Epic of the Anklet,' who ordered the execution of the innocent Kovalan.

Chenkuttuvan is said to have reigned 50 years and his date falls between A.D. 95 and 145. He was the grandson (daughter's son) of Karikala the Great, whose age is fixed as 50 to 90 A.D. Thus the age of Ilanjed-Chenni, father of Karikala, and his contemporary Ugra-Peru-Valudi should probably be fixed between 30 and 50 A.D. This is the age of the *Kural*, when our Valluvar, the Prince of Moralists, produced it to the Professors of the last Academy presided by Ugra-Pandiyan. This Ugra Pandiyan should either be identified with Nedum Cheliyan of the Alanganum fame, 'who was far and near terror to his enemies,' or, be his immediate successor. For we learn from the Sangam works that Cheran Mantharam Cheral Irumporai, who engaged in a war with Perunar-killi, was captured by this Nepolean of the Ancient Madura and subsequently escaped. We have already pointed out that Perunar-Killi, and Ugra Peruvaludi were contemporaries and friends. Mr.Kanakasabhai Pillai is far from correct in placing these potentates after Cheran Chenkuthuvan, contemporary of Gajabahu I of Ceylon, in his "Tamils 1800 Years Ago." Ed. T.A.)

11. சங்க இலக்கியத்தில் "மாந்து"

(வீழ்ந்த சொல் வாழ்ந்த வரலாறு)

பா. ஜெய்கணேஷ்

மொழியில் புதிய புதிய சொற்கள் தோற்றம் பெறுகின்றன. அவை அவ்வாறே நிலை பெறுவதில்லை. கால ஓட்டத்தில் திரிந்தும் பின்னர் மறைந்தும் போகின்றன. அவ் வகையில் வீழ்ந்து போன அல்லது மறைந்து போன சொற்களை ஒவ்வொரு மொழியும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன. தமிழ் மொழியில் சங்க இலக்கியக் காலந் தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரை மறைந்துபோன சொற்களைப் பட்டியலிடுவ தென்பது இந்த பூமியைக் காலால் நடந்து அளப்பதற்குச் சமமான ஒன்றாகும். அந்த அளவிற்கு அதன் எல்லை விரிவுடையது.

ஒரு பொருளைத் தரக்கூடிய பலசொற்கள் எல்லா மொழியிலும் உண்டு. தமிழில் ஒரு பொருளுக்கு எண்ணற்ற சொற்கள் உண்டு என்பதைக் கிடைக்கக் கூடிய அத்தனை நிகண்டுகளையும் புரட்டினாலே அறிந்துகொள்ளமுடியும். ஒரு பொருளைத் தரக்கூடிய பல சொற்களில் சில சொற்கள் சில காரணங்களால் நீண்ட காலம் வாழ்வதும் சில சொற்கள் தோன்றிய உடனே மறைந்து போவதும் என்பது மொழியில் இயல்பாய் நடக்கக்கூடிய ஒன்றாக உள்ளது. இச்சொற்கள் வாழ்வதற்கும் மறைவதற்கும் உள்ள காரணங்களை ஆராயும் போது அவற்றை ஒரு பொதுவிதியாக வரையறை செய்யமுடியவில்லை.

பழங்காலத்தில் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட பல சொற்கள் சுவடு தெரியாமல் மறைந்து போனதும், ஓரிரண்டு இடங்களில் மட்டும் பயன்படுத்தப்பட்ட பல சொற்கள் புழங்குநிலையில் பெருவளர்ச்சி பெற்றிருப்பதையும் அறியமுடிகிறது. அவ்வகை யில் இக்காலத்தில் பெயரளவில்கூட பெரிதும் அறியப்படாதுபோன 'மாந்து' என்ற வினைச்சொல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய செவ்விலக்கியங் களான சங்க இலக்கியங்களில் எவ்வாறு பெருவழக்குப் பெற்றிருந்தது என்பதையும் அச்சொல் எந்நிலைகளிலெல்லாம் புலவர்களால் பாடல்களில் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

முனைவர் பா.ஜெய்கணேஷ் அவர்கள் எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். தமிழ் இலக்கண மரபுகள் குறித்தும் இலக்கண உரை மரபுகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டவர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வழங்கும் 'இளம் ஆய்வறிஞர்' விருதினை குடியரசுத் தலைவரிடம் பெற்றவர்.

சங்க இலக்கியத்தில் உட்கொள்ளுதல்

சங்க இலக்கியங்களில் 'உட்கொள்ளுதல்' என்னும் செயலைக் குறிக்கப் பல வினைகள் வழங்கியிருப்பதை அறியமுடிகிறது.

உண்ணுதல், மாந்துதல், மடுத்தல், தின்னுதல், அருந்துதல், பருகுதல், குடித்தல், ஆர்தல்.

இவ்வினைகள் தவிர்த்து இன்று பரவலாக வழங்கப்படுகின்ற சாப்பிடு என்னும் வினை ஒருமுறை கூட சங்க இலக்கியத்தில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.[1] சாப்பிடு என்னும் வினை இக்காலத்தில் எவ்வாறு பெருவழக்குப் பெற்றிருக்கிறதோ அதே போல் சங்க இலக்கியங்களில் பெருவழக்குப் பெற்ற வினையாக **உண்ணுதல்** என்னும் வினையே இருந்துள்ளது. ஏறக்குறைய இருநூறுக்கும் மேற்பட்ட இடங்களில் இந்த வினையின் பல வடிவங்கள் வந்துள்ளன என்பதை சங்க இலக்கிய வினை வடிவங்கள் என்னும் அடைவு வழியாக அறிய முடிகிறது.[2]

இக்காலத்தில் திட உணவுப் பொருளையும் (Solid Food) திரவ உணவுப் பொருளையும் (Liquid Food) உட்கொள்வதற்கு சாப்பிடு, உண், தின் - குடி, அருந்து, பருகு முதலான பல வினைகள் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று இந்த வினைச்சொற்கள் எவ்வாறு வழங்கின எனப் பார்க்கும்போது பரவலாக அறியப்பட்ட வினைகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்:

இக்காலத் தமிழில் வழங்கும் **உண்ணுதல்** என்னும் வினையே சங்க இலக்கியங்களில் மிகுதியாகவும் பெருவரவாகவும் உள்ளது. **குடித்தல்** என்னும் வினை மிகக் குறைவாகவே சங்க இலக்கியங்களில் வழங்கியதை அறிகிறோம். நான்கு முறையே 'குடித்தல்' என்னும் வினை வழங்கியிருக்கக் காண்கிறோம். அந்த நான்கு இடங்களுமே திரவப்பொருளை உட்கொள்ளுதல் தொடர்பானவை. சங்க இலக்கியங்களில் **அருந்து** என்னும் வினை மனிதர்களோடு தொடர்புபடுத்தப் பட்டிருப்பது மிகக் குறைவு. விலங்குகளோடும் பறவைகளோடும் தொடர்பு படுத்தப்பட்டிருப்பதே மிகுதி. சங்க இலக்கியங்களில் பருகு என்னும் வினை மனிதரும் விலங்குகளும் திரவப் பொருளை உட்கொள்ளுவதைப் பதிவு செய்துள்ளது. தின் என்னும் வினை திடப்பொருளை மென்று உட்கொள்ளும் செயலுக்குரிய வினையாகவே சங்க இலக்கியங்களில் வழங்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மடுத்தல் என்னும்

சொல் குறைவான நிலையில் குடித்தல் என்னும் பொருளில் இடம்பெற்றுள்ளது. இந்த அனைத்துச் சொற்களும் இன்றைய தமிழிலும் வெவ்வேறு நிலைகளில் இடம்பெற மாந்து என்ற சொல் இன்றைய நிலையில் பெயரளவில் கூட அறியப்படாத சொல்லாக, வழக்குவீழ்ந்த சொல்லாக மாறிவிட்டது.[3]

என்னும் கூற்றின் வழியாக மாந்து தவிர மற்ற சொற்கள் சங்க இலக்கியம் தொடங்கி இன்று வரையிலும் வழக்கு பெற்று வந்திருக்கக்கூடிய தன்மையினையும் மாந்து என்னும் சொல் இன்றைய நிலையில் வழக்கற்றுவிட்ட நிலையினையும் அறிந்து கொள்ள முடிகிறது.

மாந்து வாழ்ந்த வரலாறு

மாந்து என்ற வினைச்சொல் இன்றைய நிலையில் அறியப்படாத சொல்லாக மாறி விட்டாலும் சங்க இலக்கியங்களில் அச்சொல் வெவ்வேறு நிலைகளில் புலவர்களால் எடுத்தாளப்பட்டுள்ளதைப் பார்க்கும்போது அச்சொல்லின் புழக்கம் மற்றும் பயன்பாடு எவ்வாறு இருந்தது என்பதை அறியமுடிகிறது.

குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து என எட்டுத்தொகை நூல்களில் பரிபாடல் தவிர மற்றவை அனைத்திலும், பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை, பொருநராற்றுப்படை ஆகியவற்றிலும் மாந்து என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மாந்து என்ற வினை மாந்த, மாந்தி, மாந்திய, மாந்தும் என்ற பல வடிவங்களில் இடம்பெற்றுள்ளது.

திடப்பொருளை உண்பதற்கும், திரவப்பொருளைக் குடிப்பதற்கும் மாந்து பயன்படுத்தப்பட்டுள்ளதோடு மனிதர், விலங்கு, பறவை என அனைத்து உயிரினங்களும் மாந்துவதாகவும் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

சங்க இலக்கியங்களில் மாந்து - மனிதர்கள்:

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டிலும் மாந்து என்ற வினை பல நிலைகளில் பயன்படுத்தப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. மனிதர்கள் செல்நெல் சோறு, வெண்சோறு, வாளைமீனுடன் கூடிய வெண்சோறு, இறைச்சியுடன்கூடிய உணவு, வரகுஅரிசி சோறு, நெல்லிக்காய், மீன், பனம்பழம் என திடப்பொருளை மாந்தியதாக குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

மனிதர்கள் திரவப்பொருளை உட்கொண்டதாகப் பார்க்கும்போது கள் மட்டும் மாந்திய தாகக் பல பாடல்களில் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

விலங்குகள்:

விலங்குகள் என்று பார்க்கும்போது மான், யானை, எருமை, ஏறு, பன்றி, நீர்நாய், நரி முதலானவை திடப்பொருளை மாந்தியதாக அறியமுடிகிறது. மான் அறுகினது மெல்லிய தண்டினையும், யானை கொருக்காந்தட்டை, வேங்கைப் பூ ஆகியவற்றையும் எருமை ஆம்பலையும், ஏறு புல்லினையும், பன்றி கிழங்கினையும், நீர்நாய் மீனினையும், நரி இறைச்சியினையும் மாந்தியதாக சான்றுகள் சங்க இலக்கியப் பாடல்களில் கிடைக்கின்றன.

திரவப்பொருள் என்று பார்க்கும்போது மான் நீரினையும், மான் குட்டி பாலினையும், யானைக்கன்று எருமையின் மடிப்பாலையும் மாந்தியதாக அறியமுடிகிறது.

பறவைகள்:

சங்க இலக்கியங்களில் எந்தெந்தப் பறவைகள் எந்த வகையான திட உணவுப் பொருளை மாந்தின என்று பார்க்கும்போது குருவி தானியங்களையும், வௌவால் நெல்லிக்காயினையும், அன்னம் அயிரையினையும், காக்கை மீன் மற்றும் பலிச் சோற்றினையும் கிளி தினையையும் மயில் ஆலம்பழத்தினையும் மாந்தியதாக அறியமுடிகிறது.

திரவப்பொருள் என்னும்போது வண்டு தேனினையும், காக்கை குருதியினையும் மாந்தியதாகப் புலவர்கள் தம் பாடல்களில் பதிவுசெய்து சென்றுள்ளனர்.

மாந்து வினையும் அட்டவணைகளும்:

மாந்து என்ற வினை சங்க இலக்கியங்களில் எவ்வாறெல்லாம் வாழ்ந்தது என்பதை பின்வரும் அட்டவணைகள் தெளிவாக விளக்கி நிற்கின்றன. அட்டவணை 1 சங்க இலக்கியங்களில் மாந்து என்னும் சொல் பயின்று வரும் இடங்களின் மொத்த எண்ணிக்கையினையும், அட்டவணை 2 சங்க இலக்கியங்களில் மாந்து என்னும் சொல் இடம்பெறும் பாடல் எண்கள் மற்றும் அடி எண்களையும், அட்டவணை 3 மாந்து என்னும் வினையின் வினை வடிவங்களையும், அட்டவணை 4 சங்க இலக்கியங்களில் மாந்து என்னும் வினை எவ்வாறெல்லாம் பிறசொற்களோடு (திட உணவுப்பொருள், திரவ உணவுப்பொருள்) இணைந்து சொல் இணைகளாக வந்துள்ளன என்பதையும் அட்டவணை 5 சங்க இலக்கியங்களில் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் திடப்பொருளையும் திரவப்பொருளையும் உட்கொள்ளும் மொத்த இடங்களின் எண்ணிக்கையினையும் எடுத்துரைப்பதாக அமைகின்றன.

அட்டவணை - 1

சங்க இலக்கியங்களில் மாந்து என்னும் சொல் பயின்று வரும் இடங்களின் மொத்த எண்ணிக்கை.

சங்க இலக்கியம்	மாந்த	மாந்தி	மாந்தும்	மாந்திய
எட்டுத்தொகை	2	38	7	-
பத்துப்பாட்டு	-	3	-	1
மொத்த எண்ணிக்கை				51

அட்டவணை - 2

சங்க இலக்கியங்களில் மாந்து என்னும் சொல் இடம்பெறும் பாடல் எண்களும், அடி எண்களும்.

எட்டுத்தொகை நூல்கள்	மாந்த	மாந்தி	மாந்தும்
ஐங்குறுநூறு	-	-	165-2; 263-2
குறுந்தொகை	225 -1	46-3;187-2;201-4;250-1;256-2;277-3;317-2	170-3
நற்றிணை		60-6;195-2;213-4;258-6;304-1;352-6;386-3;388-8	
அகநானூறு		56 -5; 139-9; 157-3; 178-5;182-4;221-1;236-3;277-17;313-14;336-6;346-15; 348-9;349-11	100-17; 107-10; 165- 5
கலித்தொகை		109-2;121-4	
புறநானூறு	225-2	61-6;67-6;209-4;361-19;367-7;395-37	215- 5
பதிற்றுப்பத்து		12-18;81-21	

பத்துப்பாட்டு நூல்கள்	மாந்தி (அடி எண்ணிக்கை)	மாந்திய
பொருநராற்றுப்படை	192	183
நெடுநல்வாடை	33	-
குறிஞ்சிப்பாட்டு	155	-

அட்டவணை - 3

சங்க இலக்கியங்களில் மாந்து என்னும் சொல் வினை வடிவங்களின் எண்ணிக்கை அடிப்படையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

எட்டுத்தொகை நூல்கள்	மாந்த	மாந்தி	மாந்தும்
ஐங்குறுநூறு	-	-	2
குறுந்தொகை	1	7	1
நற்றிணை	-	8	-
அகநானூறு	-	13	3
கலித்தொகை	-	2	-
புறநானூறு	1	6	1
பதிற்றுப்பத்து	-	2	-

பத்துப்பாட்டு நூல்கள்	மாந்தி	மாந்திய
பொருநராற்றுப்படை	1	1
நெடுநல்வாடை	1	-
குறிஞ்சிப்பாட்டு	1	-

அட்டவணை - 4

சங்க இலக்கியங்களில் மாந்து என்னும் சொல் எவ்வாறெல்லாம் பிறசொற்களோடு இணைந்து சொல் இணைகளாக வந்துள்ளன என்பது பற்றிய விவரங்கள்;

1. மனிதர்கள் - திடப்பொருள், திரவப்பொருள்
2. விலங்குகள் - திடப்பொருள், திரவப்பொருள்
3. பறவைகள் - திடப்பொருள், திரவப்பொருள்

என்னும் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன.

1. மனிதர்கள் - திடப்பொருள், திரவப்பொருள்

எதை	யார் அல்லது எது	மாந்து
திடப்பொருள்	மனிதர்கள் நாடன், குறவன் சுற்றத்தார், உழவன், வீரன்.	1.செந்நெல்சோறு (குறு. 277-3), வெண்சோறு (அக. 100-17, நற். 258 -6), நெல்லிக்காய் (குறு. 317-2), வாளைமீனுடன் கூடிய வெண் சோறு (புற. 61-6), இறைச்சியுடன் கூடிய உணவு (புற. 395 - 37), வரகுஅரிசி - வெண்பூ - தயிர் - சேர்ந்த கலவைச் சோறு (புற. 215 - 5), சோறு (நற். 60-6). 2. ஊன் இறைச்சியோடு கள் (பதி - 12 - 18), 3. மீன் (அக- 236-3), பனம்பழம் (புற - 225 - 2)
திரவப்பொருள்	மனிதர்கள்	ஆடவர்கள் - கள் (அக. 157-3; 182-4; 221-1; 346- 15; 348-9), (புற. 209- 4; 361-19; 367 - 7), (பதி. 81 - 21), (நற். 388 -8), (குறிஞ். 155), (நெடு. 33). மகளிர் - கள் (அக. 336-6)

2. விலங்குகள் - திடப்பொருள், திரவப்பொருள்

எதை	யார் அல்லது எது	மாந்து
திடப்பொருள்	விலங்குகள்	
	மான்	அறுகினது மெல்லிய தண்டு (குறு. 256-2)
	யானை	கொருக்காந்தட்டை (குறு. 170-3), வேங்கைப் பூ(அக. 349-11)
	எருமை	ஆம்பல் (அக. 56-5), புதுமலர் (அக. 100 -17)
	ஏறு	புல் (கலி.109 -2)
	பன்றி	கிழங்கு (அக. 178-5), தினை (ஐங். 263 - 2, நற். 386 - 3)
	நீர்நாய்	மீன் (நற். 195-2)
	குழூவிச்சேதா	பழம் (நற். 213 - 4)
	நரி	இறைச்சி (நற். 352 -6)
திரவப்பொருள்	விலங்குகள்	
	மான்	நீர் (குறு. 250-1), (அக. 139-9)
	மான் குட்டி	பால் (குறு. 187-2; 225 -1)
	யானைக்கன்று	எருமையின் மடிப்பால் (அக.165 -5)

3.	பறவைகள் - திடப்பொருள், திரவப்பொருள்	
எதை	யார் அல்லது எது	மாந்து
திடப்பொருள்	பறவைகள்	
	குருவி	தானியங்கள் (குறு. 46-3)
	வெளவால்	நெல்லிக்காய் (குறு. 201-4)
	அன்னம்	அயிரை (புற. 67 - 6)
	பறவைகள்	இரை (கலி. 121 - 4)
	காக்கை	மீன் (ஐங். 165-2), பலிச்சோறு (பொரு. 183)
	கிளி	தினை (நற். 304 - 1)
	மயில்	ஆலம்பழம் (பொரு. 192)
திரவப்பொருள்	பறவைகள்	மாந்து
	வண்டு	தேன் (அக. 277 -17)
	காக்கை	குருதி (அக. 313- 14)

அட்டவணை - 5

சங்க இலக்கியங்களில் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் திடப்பொருளையும் திரவப்பொருளையும் உட்கொள்ளும் மொத்த இடங்களின் எண்ணிக்கை:

யார் அல்லது எது	உண்ணும் பொருள்	உண்ணும் இடங்களின் மொத்த எண்ணிக்கை
மனிதர்கள்	திடப்பொருள்	11
மனிதர்கள்	திரவப்பொருள்	13
விலங்குகள்	திடப்பொருள்	12
விலங்குகள்	திரவப்பொருள்	5
பறவைகள்	திடப்பொருள்	8
பறவைகள்	திரவப்பொருள்	2

மேற்கண்ட அட்டவணைகளின் வழியாக மாந்து என்னும் வினை அதன் வடிவங்களோடு 51 இடங்களில் சங்க இலக்கியங்களில் புலவர்களால் பயன்படுத்தப் பட்டுள்ளன. மனிதர், விலங்கு, பறவை என மூன்று நிலைப்பட்ட உயிர் வாழினங்களும் திட உணவு, திரவ உணவு ஆகியவற்றை மாந்துவதாகக் குறிப்புகள் கிடைக்கின்றன. இதில் மனிதர்கள் திடப்பொருளை 11 இடங்களிலும், திரவப்பொருளை 13 இடங்களிலும் மாந்துவதாக அறியமுடிகிறது. விலங்குகள் திடம், திரவம் என முறையே 12, 5 ஆகிய எண்ணிக்கையில் மாந்துவதாக குறிப்பு கிடைக்கின்றது. பறவைகள்

இடப்பொருளை 8 இடங்களிலும், திரவப்பொருளை 2 இடங்களிலும் மாந்துவதாகப் பாடல்கள் கிடைக் கின்றன.

இன்று அருவழக்காக அருகிவிட்ட அல்லது பெருவழக்கிலிருந்து வீழ்ந்துவிட்ட மாந்து என்னும் வினையினை இரண்டாயிரம் ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று சங்க இலக்கியங்களின் வழி அறிய முற்படுகிறபோது அச் சொல் வாழ்ந்த வரலாறு பதிவுசெய்யப்படவேண்டிய வரலாறாகக் காணப்படுகின்றது. உண் என்னும் வினைக்கு அடுத்த நிலையில் மாந்து என்ற வினை பலநிலைகளில் செயல்பட்ட வினையாக இருப்பதையும் அறியமுடிகிறது.

குறிப்புகள்

1. இந்த வினைச்சொல் சங்க இலக்கியங்களில் வழங்கவில்லை. எந்த நூற்றாண்டில் இந்த வினை தமிழில் வழங்கத் தொடங்கியது என்பதும் அறியக்கூடியதாக இல்லை. மேலும் இந்த வினை பிற திராவிட மொழிகளிலும் காணப்படவில்லை என்பதை Dravidian Etymological Dictionary என்பதில் அந்த வினைக்குப் பதிவு இல்லாத காரணத்தால் அறியமுடிகிறது.
2. புலவர் மணியன், சங்க இலக்கிய வினைவடிவங்கள், பக். 63-65.
3. பா.ரா. சுப்பிரமணியன், பா. இளமாறன், "மயில் அகவும், குயில் அகவுமா?" "சங்க இலக்கியங்களில் சொல் இணைகளின் நிலை," " புதிய பனுவல், ப.24 - 28.

துணை நூல்கள்

1. சுப்பிரமணியன், பா. ரா., இளமாறன், பா., "மயில் அகவும், குயில் அகவுமா?" "சங்க இலக்கியங்களில் சொல் இணைகளின் நிலை," புதிய பனுவல் - காலாண்டிதழ், அக்டோபர், 2011.
2. பசுபதி, ம.வே., செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2010.
3. புலவர்மணியன் (தொகுப்பும் பகுப்பும்), சங்க இலக்கிய வினைவடிவங்கள், Dravidian Linguistics Associations, Thiruvananthapuram, 2007.
4. மாதையன், பெ., சங்க இலக்கியச் சொல்லடைவு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2007.
5. Thomas Lehmann & Thomas Malten (comp.), A Word Index For Cankam Literature, Institute of Asian Studies, Chennai, Second ed., 2007.
6. Burrow, T., Emeneau, M.B. (ed.), A Dravidian Etymological Dictionary, Oxford, Second ed., 1984.
7. Oxford Collocations, Dictionary for Students of English, Oxford University Press, 2002.

12. மொழித் தூய்மையும் தனித்தமிழியக்கமும்

கி. குணத்தொகையன்

முன்னுரை

மொழியின் இன்றியமையாமை, மொழித்தூய்மை, அதன் தேவை, உலகளாவிய நிலையில் மொழித்தூய்மை இயக்கங்கள், தமிழகத்தில் மொழித்தூய்மை இயக்கங்கள், அவற்றின் பணிகள், பயன்கள் பற்றியது இவ்வாய்வுக்கட்டுரை.

கருதுகோள் (Hypothesis)

உலகம் இன்றைய அறிவியலின் வெகுவேக வளர்ச்சியால் ஒரு சிற்றூராகச் சுருங்கிவிட்டது. எங்கும் எதிலும் எந்திர ஆளுமை மேலோங்கியுள்ளது. இக் காலக்கட்டத்தில் மொழித் தூய்மையின் தேவையும், பங்களிப்பும், பயன்பாடும் பற்றிய மதிப்பீடே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

மொழியின் இன்றியமையாமை

மொழி என்பது தொடக்கத்தில், கருத்துப் பரிமாற்றத்துக்கான கருவியாக மட்டுமே இருந்திருக்கிறது. ஆனால், காலப்போக்கில், அது தன் பங்களிப்பைப் பல்வேறு வாழ்வியல் கூறுகளுக்குப் பல்வேறு தளங்களில் அளிக்கத் தொடங்கியது;

ஒரு மொழி, அதைப் பேசும் மக்களை ஒரு தொகுப்பாக - குமுகமாக (சமூகமாக) - இனமாக மலர்த்துகின்றது. (காட்டாகத், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் தமிழர்கள் என்கிற இனமாகின்றனர்);

ஒரு மொழியைப் பேசுகிற இனம், காலம் காலமாகத் தொடர்ந்து வாழும் இடம், நாளடைவில் அவ்வினத்தின் நாடாக ஆகிறது;

மேலும், மொழியின் இலக்கிய, இலக்கண அமைப்புகள் காலப்போக்கில் வளர்ந்து செழுமை அடைகின்றன; மொழிவளர்ச்சி - அவ்வின மக்களின் அறிவு, கலை, நாகரிகம், பண்பாடு என்று பலவற்றின் வளர்ச்சிக்கும் துணை செய்கிறது.

கி. குணத்தொகையன், அறி.இ., க.மு., (தமிழ்). க.மு., (பொருளியல்), கல்.இ., பதிப்பாசிரியர், தமிழ்ப்பேராயம், திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம். எழுதியுள்ள நூல்கள்: அறிவியலறிஞர் டார்வினின் வாழ்வும் பணியும், பாவலரேறு பெருஞ்சித்திரனார், இனிய தமிழ்ப் பெயர்கள், நீரின்றி அமையாது உலகு, அறிவுக்கொத்து முதலியன.

தவிர, இவற்றை அடுத்தடுத்த தலைமுறையினர் பெற்றுக்கொள்ளவும் அவற்றை அவர்கள் வளர்க்கவும் - மொழி, வழிகோலுகிறது. ''மொழி இல்லையானால் உலகம் தன் இயக்கத்தின் ஒரு பகுதியை இழந்துவிடும்'' என்கிறார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

பிறமொழிக் கலப்பு

இவ்வாறு, மக்கள் இயக்கத்தின் அடிப்படைக் கூறுகளுள் ஒன்றாக உள்ள மொழியில் பிற மொழிகள் கலக்கின்ற சூழல்கள் பின்வரும் காரணங்களால் ஏற்படுகின்றன.

- பிற நாட்டினரின் ஆட்சி. (எ-டு) ஆங்கிலேயர் ஆட்சியில், ஆங்கிலம் தமிழில் கலந்தது.
- அயலவரின் பண்பாட்டுப் படையெடுப்பு. (எ-டு) ஆரியரின் பண்பாட்டுப் படையெடுப்பால் தமிழ் மன்னன் முதல் மக்கள்வரை வாழ்வியல் கூறுகள் பலவற்றிலும் தமிழில் சமற்கிருதம் கலந்தது.
- பிற நாட்டினரின் வாணிகத் தொடர்புகள். (எ-டு) யவணர், அரேபியர், யூதர், பார்சியர், சீனர், ஆங்கிலேயர் உள்ளிட்ட ஐரோப்பியர் முதலான பல நாட்டினர் தமிழகத்திற்கு வந்து வணிகம் நடத்தியபோது அவர்களின் மொழிச் சொற்கள் பல தமிழில் கலந்தன.
- கண்டுபிடிப்புகள் - புதுக் கருவிகள் கண்டுபிடிக்கப்படும்போது, அக் கருவிகளின் பெயர் அவற்றைக் கண்டுபிடித்தவர்களின் மொழியில் இருந்தால் அப் பெயர்களை அப்படியே பயன்படுத்தும்போது பிறமொழிச் சொற்கள் கலக்கின்றன. (எ-டு) கார், மொபைல், குக்கர்.
- கல்வி, வேலைவாய்ப்பு. கல்வியைப் பிறமொழியில் பயிலுவது, வேலைவாய்ப்புக்காகப் பிறமொழியைப் பயிலுவதன் விளைவாக - அம் மொழிப் பயிற்சிக்காக, அம்மொழியில் பேச முயலும்போது அதன் சொற்கள் தாய்மொழியில் கலந்து பேசப்படுகிறது. பிறமொழியில் உயர்கல்வி பயிலவும் இந்நிலை மேற்கொள்ளப்படுகிறது. (எ-டு) தமிழ்வழியில் பள்ளிக் கல்வியை முடித்தவர்கள், கல்லூரிப்படிப்பை ஆங்கிலத்தில் தொடரும்போது, ஆங்கிலத்தில் பேச முற்படுகையில் ஆங்கில மொழிச் சொற்கள் கலந்துபேசும் நிலை ஏற்படுகிறது.
- பிறப்பியம் (ஜாதகம்). குழந்தைக்குப் பெயர் வைக்கும்போது, கணியர்(ஜோஸ்யர்) பெரும்பாலும் மொழிமுதல் வாரா தமிழ்

எழுத்துகளில் அல்லது கிரந்த எழுத்துகளில் தொடங்கும் பெயரை வைக்குமாறு தெரிவிப்பர். இது, ஒருவரின் பெயரிலிருந்தே பிறமொழிக் கலப்பு தொடங்க வழிவகுக்கிறது. (எ-டு) லோகு, ரமேஷ், டில்லிபாபு, ரம்யா, லதா, ஜனனி.

- பிறமொழிக் கவர்ச்சி. (எ-டு) ஆங்கிலத்தில் பேசப்படுவதைப் பார்த்து, ஈர்ப்பு ஏற்பட்டுத், தாமும் ஆங்கிலச் சொற்கள் கலந்து பேசுதல், (காட்டாக), வணக்கம் என்று கூறாமல் ''ஹாய், ஹலோ, குட் மார்னிங்'' என்று கூறுதல்.
- தற்பெருமை - தனக்கு இன்னொரு மொழி தெரியும் என்பதைக் காட்டும்வகையில் அம் மொழிச் சொற்களைக் கலந்து பேசுதல். (எ-டு) ஆங்கிலம்.
- ஊடகங்கள். ஏடுகளில் தரப்படும் செய்திகளில் பிறமொழிச் சொற்கள் கலந்து எழுதுதல். (எ-டு) தர்ணா, பந்த், ஹர்த்தால் முதலியன; தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் நாடகங்களிலும் பிறமொழிச் சொற்கள் கலந்து பேசுதல். (எ-டு) புருஷன், வாஸ்தவம்.
- மொழிபெயர்ப்புகள். பிறமொழி நூல்கள், கட்டுரைகளைத் தமிழில் பெயர்க்கும்போது, பிறமொழிச் சொற்கள் கலந்து எழுதுதல். (எ-டு) ஜனநாயகம், சோசலிசம், வர்க்கம், ஜபம்.

பிறமொழிக் கலப்பின் தீமைகள் :

''ஓர் இனத்தை ஒழிக்க விரும்பும் எவரும் அழிப்பது முதலில் அதன் மொழியைத்தான்! உன் தாய்மொழியைக் காத்தால் உன் தாய் நாட்டைக் காத்திடலாம்'' -- எமன் டிவேலரா, ஐரிசு அறிஞர்.

- பிறமொழிக் கலப்பினால் ஒரு மொழி தன் தனித்தன்மையை இழக்கின்றது. அம்மொழி சிதைந்து வேறொரு புதுமொழியாகத் திரிபடைகிறது. (எ-டு) மொழிக் கலப்பினாலும் ஒலிக் கலப்பினாலும் தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய இருபது மொழிகள் தோன்றின.[2]
- இதனால் அம் மூலமொழி பேசும் மக்கள் தொகை எண்ணிக்கை குறைகிறது. அவர்கள் வழிவழியாக வாழ்ந்து வரும் நாட்டின் பரப்பும் குறைகிறது. திரிபடைந்த மொழியைப் பேசுவோர், நாளடைவில் தங்களின் மொழிக்குத் தாய் எது என்று அறியாமல் அல்லது மறந்து

அல்லது ஏற்கமறுத்து அல்லது பொருட்படுத்தாது அந்தத் தாயினத்தையே பகையாகப் பார்க்கும் போக்கும் ஏற்படலாம். இப்படி ஒரு கொடும் நிலையைத் தமிழக வரலாற்றிலேயே பார்க்க முடிகிறது.

பிறமொழிக் கலப்பு மொழி அளவில் மட்டும் நிற்காமல், கூடவே பிற இனத்தாரின் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகளும் கலக்கும் நிலை ஏற்படுகிறது. இதனால் மூல மொழியினர் தம் தனித்தன்மையை இழந்து விடலாம்.

பிறமொழியைக் கலக்கக் கலக்க, மூலமொழி அழிந்து போகக்கூடிய கொடிய நிலையும் உண்டு.

மொழித் தூய்மையம்

இத்தகைய பேரவலக் கொடும் நிலைகளிலிருந்து தங்களின் மொழியைக் காக்க - பிறமொழிக் கலப்பை நீக்கவும் தவிர்க்கவும் மேற்கொள்ளப்படும் செயல் தூய்மையம் எனப்படுகின்றது. ''மொழியைத் தூய்மைப்படுத்த - குறிப்பாகப் பிறமொழிச் சொற்களை நீக்க - அவ்வப்போது மேற்கொண்ட முயற்சிகளே தூய்மையம் எனப்படுகின்றன''[3] என்று அறிஞர் கட்டன் (J.A.Cuddon) குறிப்பிடுகிறார். ''தூய்மையம் என்பது மொழியை வள்ப்படுத்துவதற்குத் தன் மொழி வாயில்களைத் திறத்தலும் பிறமொழி வாயில்களை அடைத்தலும் எனலாம்''[4] - வெக்சுலர்பால். ''பிறமொழிக் கடன் பேறுகள், பிறமொழிச் சொற்கள் ஆகியவற்றை இலக்கிய மொழியிலிருந்து நீக்கும் முயற்சிகள் மொழிக்குப் புறம்பான சொற்கூறுகள், இலக்கணக் கூறுகள் ஆகியன ஊடுருவாமல் தடுக்கும் முயற்சிகள் ஆகியனவே தூய்மையம் எனப்படும்'' என்கிறது சோவியத் கலைக் களஞ்சியம்.[5] (தொகுதி 21; பக்கம் 20)

உலக மொழிகளில் தூய்மையம்

ஆங்கில மொழியில் இலத்தீன், கிரேக்கம், பிரெஞ்சு, காண்டிநேவிய மொழிகளின் சொற்கள் கலந்திருந்த நிலையை எதிர்த்துத் தூய ஆங்கிலக் கழகம் 1913ல் ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்து பல ஆங்கில அறிஞர்களும் எழுத்தாளர்களும் பிறமொழிக் கலப்பை எதிர்த்து வந்தனர்; பிரெஞ்சு மொழியில் செருமன், இலத்தீன், ஆங்கிலம், கெல்டிக் முதலிய பிறமொழிகளின் சொற்கள் கலந்தன. பிரெஞ்சு மொழித் தூய்மை முயற்சியில் பிரெஞ்சுமொழிக் கழகம் 1635ல் அமைக்கப்பட்டு அது பல பணிகளைச் செய்தது. 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பிரெஞ்சு அரசு மொழிக் கலப்பைத் தடுக்கும் வகையிலான

ஆணைகளைப் பிறப்பித்தது; செர்மனி மொழியில் இலத்தீன், கிரேக்க மொழிகளின் கலப்பினை மார்ட்டின் லூதர், லெபனிசு, தொமாசியசு, காரல் மார்க்கசு முதலான அறிஞர்கள் எதிர்த்தனர். உருசிய மொழியின் தூய்மையைக் காக்கும் வகையில் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உலோமொனோசோவ் முதல் பெலின்சுகி, அலெக்சாண்டர் புசுகின், இலியோ டால்சுடாய், மாக்சிம் கார்க்கி, இலெனின் என்று பலரும் பாடுபட்டனர்; இத்தாலியமொழித் தூய்மையைக் காக்க 'அகாடெமியா டெல்லா குருசுகோ' என்னும் கழகம் 1583இல் தொடங்கப்பெற்று, அது 1900வரை சிறப்பாகச் செயல்பட்டுள்ளது. 'தவிடு நீக்குதல்' என்னும் பொருளில் அமைந்த இக்கழகத்தின், சின்னத்தில் மொழித் தூய்மையைக் குறிக்கும்வகையில் கோதுமையிலிருந்து தவிடு நீக்கும் சல்லடைக் கருவி இடம்பெற்றுள்ளது.[6]

துருக்கிய மொழியில் கலந்திருந்த அரபு, பாரசீக மொழிகளின் சொற்களை நீக்கி துருக்கியின் ஆட்சியாளர் ஆணை பிறப்பித்தார். பெயர்கள், பட்டங்கள், முதலியன துருக்கிய மொழிமரபுப்படி இருக்கவேண்டும் என்று அரசு 1934இல் சட்டம் போட்டது. தானே இதற்கு முன்னோடியாகத் தன் பெயரை அவர் 'கமால் அக்தாதுர்க்' என்று மாற்றிக் கொண்டார். கான்சுடான்டிநோபிள் நகரின் பெயர் இசுதாம்புல் என்று மாற்றப்பட்டது. சீனாவில் எத்தகைய புதிய கருத்தினையும் சுட்டும் சொற்களைப், பிறமொழி கலக்காமல் படைக்கின்றனர். பொருள் ஓரளவு மாறுபட்டாலும் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. (எ-டு)

சொல்	சீனச்சொல்	இதன் பொருள்
பல்கலைக்கழகம்	தாஸ்வோ	பெரிய பள்ளி
தொலைப்பேசி	தியேன்ஹவா	மின் மொழி
தூவல் (பேனா)	ச. லாயி. க்வயி-பி	தானே வரும் நீர்க்கோல்



கொரியமொழி மறுமலர்ச்சி இயக்கம், மொழித் தூய்மையை வற்புறுத்தியது. இவ்வியக்கத்தை, தென்கொரியாவின் ஆட்சித் தலைவர் 1976இல் தொடங்கிவைத்தார். அம் மொழியின் தூய்மை காக்கும் சட்டங்களை அந் நாட்டரசு இயற்றியுள்ளது. சிங்கள மொழியில் கலந்திருந்த சமற்கிருதம், பாலி, தமிழ்ச் சொற்களை நீக்கிடத், தூய சிங்கள இயக்கத்தை 1930களில் முனிதாச குமாரதுங்கா என்பவர் தொடங்கினார். மொழித் தூய்மை இயக்கங்கள் அரபு மொழி, வியத்நாமிய மொழி, பல்கேரிய மொழி, மாசிடோனிய மொழி, செர்பிய மொழி, போர்ச்சுகீசிய மொழி என்று பல மொழிகளிலும் தோன்றி இயங்கியுள்ளன.

இந்திய மொழிகளில் தூய்மையம்

'வங்க மொழியைச் சமற்கிருதத்தின் தாக்கத்திலிருந்து மீட்டவர் இரவீந்தரநாத் தாகூர்' என்று பாராட்டப்படுகிறார். குசராத்தி மொழித்தூய்மைப் பணியை, தாத்தாத்திரேய பாலகிருட்டிண காலேசுகர் தொடங்கினார். காந்தியார் தன் கட்டுரைகளைத் தூய குசராத்தியில் எழுதியுள்ளார். பஞ்சாபி மொழியில் இந்தி மொழிக் கலப்பை நீக்கத் தூய பஞ்சாபி இயக்கம் தொடங்கப்பட்டது. பஞ்சாப் அரசும் இது தொடர்பாகச் சில ஆணைகளைப் பிறப்பித்தது. கோக்பெரோக்(திரிபுரி) மொழியிலிருந்து வங்கமொழிச் சொற்களை விலக்கி அதன் தூய்மையைக் காக்க அம் மாநிலத்து இளைஞர்கள் பாடுபட்டுள்ளனர்.

தமிழிய மொழிகளில் தூய்மையம்

கன்னட மொழியில் சமற்கிருதச் சொற்கள் கலப்பதை ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இராட்டிரகூட மன்னர் எதிர்த்தார். தூய கன்னட முயற்சியில் பல புலவர்களும் ஈடுபட்டனர். தனித் தெலுங்கு அகராதிகள் 1887 முதல் வெளிவந்தன. பல தெலுங்குப் புலவர்கள் தனித் தெலுங்கில் இலக்கியங்கள் படைத்தனர். மலையாள மொழியில் 18ஆம் நூற்றாண்டில் குஞ்சன் நம்பியாரால் தொடங்கப்பெற்ற மொழித்தூய்மை முயற்சி வெண்மணிக்குழு என்ற அறிஞர்களால் தொடர்ந்து நடைபெற்றது.[7]

தமிழில் தூய்மையம்

பிறமொழிக் கலப்பு

தொடக்க நிலை

தமிழில் சமற்கிருதத் தாக்கம் கி.மு.1200 அல்லது கி.மு.1000 போல் ஏற்பட்டதாகக் கொள்ளலாம் என்பார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.[8] திருக்குறளின் ஆயிரக் கணக்கான சொற்களில் 11 சொற்களே சமற்கிருதச் சொற்கள்.

தொடக்கத்தில் மிகக் குறைவாக இருந்த சமற்கிருதக் கலப்பு, ஆரியர்கள், அரசின் பெருந்துணையைப் பெற்றபிறகு அதிகமாகத் தொடங்கியது. சிலம்பிலும் மணிமேகலையிலும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் பிறமொழிக் கலப்பு நான்கு அல்லது ஐந்து விழுக்காடு இருக்கும் என்று பேரா.மு.வரதராசனார் குறிப்பிடுகிறார்.[9] பரிபாடல், முருகாற்றுப்படை முதலிய கழக நூல்களிலும் வடசொற் கலப்பு மிகுந்திருந்தன.

வளர்ச்சி நிலை

தமிழகத்தில் கி.பி.3ஆம் நூற்றாண்டில் களப்பிரர் படையெடுப்பு நிகழ்ந்தது. அவர்கள் சமண, புத்த மதங்களைச் சார்ந்திருந்தவர்கள். ஆகவே, பிராகிருதத்திற்கும் பாலி மொழிக்கும் அரசின் பெருந்துணை கிடைத்தது. 4ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் ஆண்டபோது, அவர்கள் பட்டயங்களைப் பிராகிருதத்தில் பொறித்துவந்தனர். பின்னர் கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் சமற்கிருதத்தில் பொறித்தனர். 7ஆம் நூற்றாண்டில் கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் தமிழில் கிரந்த எழுத்து கலந்து எழுதினர். வைதீகச் சமயத்தவரான பல்லவர்கள் சமற்கிருதத்தைப் போற்றினர். கல்வித்துறையில் சமற்கிருத வல்லாண்மை மேலோங்கியது. சமற்கிருதக் கல்லூரிகளைத் தொடங்கினர். அம் மொழிக்கும் வைதிகக் கல்விக்கும் முதன்மை தந்தனர். தமிழகத்திற்குள் நுழைந்த ஆரியர், அரசின் துணை பெற்று, வடமொழித் திணிப்பில் முனைப்புடன் ஈடுபட்டனர்; தமிழை நசுக்கினர். சமற்கிருதம் சமயநோக்கோடு தமிழில் பலவாறு கலக்கப்பட்டது. மதப் போராட்டங்களினாலும் வேத மதத்தின் அளவு கடந்த தாக்குதலினாலும் வளர்ச்சியினாலும் தமிழ் மேன்மேலும் கலப்பு மொழியாக்கப்பட்டது.

கி.பி.9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்லவர் ஆட்சி நீங்கியது; பிற்காலச் சோழர் ஆட்சி ஏற்பட்டது. இருந்தாலும் சமற்கிருத வல்லாண்மை தொடர்ந்தது; தமிழில் சமற்கிருதக் கலப்பு மிகுந்தது. மன்னர்களின் பெயர்கூட, ராஜ ராஜ சோழன், ராஜேந்திர சோழன் என்றெல்லாம் சமற்கிருதமானது. கோயில்களில் தமிழ் புறக்கணிக்கப்பட்டது. சமற்கிருத வல்லாண்மைப் போக்கு வலுவடைந்து வந்த நிலையில் 11ஆம் நூற்றாண்டில் தமிழ் உரைநடையில் சமற்கிருதத்தைக் கலந்து எழுதி மணிப்பிரவாள நடை என்று அதற்குப் பெயர் சூட்டி வலிந்து திணித்தனர். அந்த நடையில் எழுதுபவரே அறிஞர் என்று கருதுமாறு செய்தனர். இந் நிலையில், தொல்காப்பியர் சுட்டிய மொழிநெறிக்கு முரணாகப் பிறமொழிச் சொற்களைக் கிரந்த எழுத்தில் எழுதும்நிலை

தோன்றியது. பிற்காலப் பாண்டியர் ஆட்சியிலும் தமிழைவிடச் சமற்கிருதமே மேன்மை நிலையில் இருந்தது.

13ஆம் நூற்றாண்டு பிற்பகுதி முதல் 18ஆம் நூற்றாண்டுவரை, தமிழகத்தில் பல ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டன. மதுரையில் இசுலாமியர் ஆட்சி ஏற்பட்டது. உருது, அரபு, பாரசீகம், இந்துத்தானி சொற்கள் தமிழில் கலந்தன. விசயநகரப் பேரரசின் ஆட்சி தமிழ்நாட்டில் ஏற்பட்டது. அதன் வீழ்ச்சிக்குப் பிறகு, நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. இவர்களின் ஆட்சியில் தெலுங்கரும் கன்னடரும் ஆயிரக்கணக்கில் குடியேறினர். நாயக்கர் ஆட்சியில் சௌராட்டிரர் குடியேற்றமும் நடந்தது. ஆட்சிகள் மாறினாலும் சமற்கிருத மேலாண்மைக் காட்சி மாறவில்லை. மேலும் தெலுங்கு, மராட்டி, சௌராட்டிரம், கன்னடம் என்று பல மொழிகள் தமிழில் கலந்தன.

இந்தியப் பகுதிகளில் பெரும்பான்மையானவற்றைப் படிப்படியாகத் தன் ஆட்சியின்கீழ் கொண்டுவந்த ஆங்கிலேய ஆட்சி, இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆங்கிலத்தை 1835 மார்ச்சு முதல் ஆக்கியது. இதனால், தமிழில் ஆங்கில ஆட்சித்துறைச் சொற்கள் அதிக அளவில் கலந்தன. மெக்காலே கொண்டுவந்த கல்வித் திட்டத்தால் ஆங்கிலம் கல்வி மொழியாகவும் ஆனது. தமிழகத்தின் சிற்சில பகுதிகள் பிரெஞ்சு, டச்சு, போர்ச்சுகீசியர் முதலான பிற நாட்டினரின் பிடியில் இருந்ததால், அம் மொழிகளின் சொற்களும் தமிழில் கலந்தன. (எ-டு) ஜன்னல், சாவி.

தமிழ்நாட்டில் யவணர், அரபியர், யூதர், பார்சியர், சீனர், மலாயர், போர்ச்சுக்கீசியர் என்று பல இனத்தவரும் வந்து வாழவும் வணிகம் நடத்தவும் தொடங்கினர். இதனால் இவர்கள் மொழிகளின் சொற்களும் தமிழில் கலந்தன. (எ-டு) அலமாரி, அசல், இலாகா, உஷார், கம்மி, கைதி, கறார், சால்வை, சவடால், சிபாரிசு, சவாரி, சபாஷ், சலாம், சவால், தபால், தமாஷ், தயார், தாலுகா, நகல், பஞ்சாயத்து, பந்தோபஸ்து, புகார், பேட்டி, மசோதா, மாமூல், முகாம், மேஸ்திரி, ராஜினாமா, வக்கீல், வக்காலத்து, வசூல், வாரிசு, வாய்தா, சர்பத், சந்தா, பாக்கி, மராமத்து, லாடம், பீப்பாய், கிராக்கி, பகோடா, படுதா, தகவல், தர்ணா, தர்கா, ஜமக்காளம், ஜப்தி, பட்டா, பட்டாசு, பசலி, பல்டி.

வல்லாண்மை நிலை

கோயில் வழிபாட்டிலும் இல்லச் சடங்குகளிலும் சமற்கிருத ஆளுமை மேலோங்கி வளர்ந்து வந்தது. தமிழ்க் கடவுளர் பெயர்கள் சமற்கிருதமாக்கப்பட்டன. (எ-டு) முருகனுக்கு, சுப்ரமண்யன், சரவணன்,

கார்த்திகேயன், சுவாமிநாதன், ஷண்முகம், குமாரசாமி என்றும்; திருமாலுக்கு, 'விஷ்ணு', 'ஸ்ரீநிவாஸ்' என்றும்; காளி, கொற்றவைக்கு, துர்கா என்றும் சமற்கிருதப் பெயர்கள் சூட்டப்பட்டன. கோயில்களில் தமிழில் வழிபாடு நடக்கவில்லை. சமற்கிருதத்தில் அர்ச்சனை நடந்தது; இன்னும் 'கும்பாபிஷேகம்', சம்ப்ரோக்ஷனம், ப்ரதோஷம், ஏகாதசி, துவாதசி, அஷ்டமி, நவமி, சங்கடஹர சதுர்த்தி, அங்க ப்ரதக்ஷணம் என்று என்னென்னவோ நடந்தன. காருவா, அமாவாஸ்ய (அமாவாசை) என்றும் வெள்ளுவா, பூர்ணிமா (பௌர்ணமி) என்றும் சமற்கிருதம் ஆனது. ஊர்ப் பெயர்களையும் சமற்கிருதமாக்கினர். (எ-டு) திருமறைக்காடு - வேதாரண்யம்; புள்ளிருக்கு வேளூர் - வைத்தீஸ்வரன் கோயில்; மயிலாடுதுறை - மாயூரம். திருவரங்கம் - ஸ்ரீரங்கம்; திருவில்லிப்புத்தூர் - ஸ்ரீவில்லிப்புத்தூர். பிறப்பியம், திருமண உறுதி, திருமணம், நீத்தார் நினைவு, ஆண்டு நினைவு (திவசம்) என்று எல்லா நிகழ்வுகளிலும் சமற்கிருதமே மேலோங்கியது. ராம், லக்ஷ்மணன், பிரசாத், பிரசாந்த், ரித்திஷ், சுரேஷ், மகேஷ், லோகேஷ், விக்னேஷ், தினேஷ், லக்ஷ்மி, புஷ்பா, சரோஜா, ஸ்ரீவித்யா, மஹேஸ்வரி, அபர்ணா என்று நூற்றுக்கணக்கான சமற்கிருதப் பெயர்களை மக்கள் சூடிக்கொள்ளும்படி செய்தனர்.

தமிழிசைப் பண்களும் தாளங்களும் நடனம், சிற்பம் முதலான கவின்கலைகளிலும் பிற கலைகளிலும் தொழில்களிலும் மருத்துவம் முதலான அறிவியல் துறைகளிலும் தமிழிலிருந்த கலைச்சொற்கள் சமற்கிருதமாக்கப் பட்டன. (எ-டு) தமிழ் மருத்துவத் துறையில் வியாதி, ரத்தம், வாந்தி, பேதி, மாந்தம், ஜீரணம், குஷ்டம், சிகிச்சை, ரணம், ஜலதோஷம் என்று சமற்கிருதச் சொற்கள் மிகுதியாக்கப்பட்டன. கல்விநிலையில் - வேதியல், 'ரசாயணம்' என்றும் வரலாறு 'சரித்திரம்' என்றும் அறிவியல், 'விஞ்ஞானம்' என்றும் பாடப்பிரிவுகளின் பெயர்களில் மட்டுமின்றி, பாடங்களினுள்ளும் தமிழ்க்கலைச் சொற்களுக்கும் ஆங்கிலக் கலைச் சொற்களுக்கான தமிழ் மொழிபெயர்ப்புக்கும் சமற்கிருதமே திணிக்கப்பட்டது. காட்டாக, உயிர்வளி (Oxygen), 'பிராண வாயு' என்றும் மாந்த உடற்கூறு இயல் 'ஆத்மவாச விவரணம்' என்றும் நிலநடுக்கோடு 'பூமத்ய ரேகை' என்றும் பிற கோடுகள் 'அக்ஷ ரேகை', 'தீர்க்க ரேகை' என்றும் வெப்பநிலை 'சீதோஷ்ண நிலை' என்றும் ஆயிரக்கணக்கான சமற்கிருதச் சொற்கள் திணிக்கப்பட்டன. 'Census Report' என்பதை, மக்கள் தொகை அறிக்கை என்று கூறாமல், 'குலஸ்தீரி புருஷ பால விருத்த அவயவ பத்திரிகை' என்று சமற்கிருத சங்கை நீட்டி ஊதினார்கள்.

இவ்வாறு அரசின் சட்டங்களிலும் திட்டங்களிலும் அலுவலக நடைமுறைகளிலும் மக்களின் வாழ்க்கை நடைமுறைப் பேச்சிலும் எழுத்திலும் எங்கும் எதிலும் தமிழ் புறக்கணிக்கப் பட்டு, சமற்கிருதம் பெருமளவிலும் பிற மொழிகள் சிற்றளவிலும் பயன்படுத்தப்பட்டன.

தமிழ் - சமற்கிருதப் போராட்டம்

தமிழில் பிறமொழி கலக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே, அதைத் தவிர்க்கும் மனவுணர்வும் முயற்சியும் தமிழுணர்வு தழைக்கப்பெற்றோரிடம் தொடங்கியுள்ளது. நோய் தொடங்கியவுடனே, எவ்வாறு நோய் நீக்க முயற்சியும் தொடங்கிவிடுகிறதோ, அவ்வாறே ஆரிய மொழியாகிய சமற்கிருதக் கலப்பு தொடங்கியவுடனேயே மொழித்தூய்மை முயற்சியும் தொடங்கித் தொடர்ந்து நடந்து வந்துள்ளது. தொல்காப்பியர் உள்ளிட்ட கழகப் (சங்க) புலவர்கள், திருவள்ளுவர், இளங்கோவடிகள், சாத்தனார், கம்பர் முதலிய பாவியப் புலவர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலிய சமயப் புலவர்கள் இறையனார், அடியார்க்கு நல்லார், இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், முதலிய உரையாசிரியர்களிடையேயும் அது நடந்து வந்ததை அறிய முடிகிறது என்று பெருஞ்சித்திரனார் கூறுகிறார்.[10]

தமிழ் புறக்கணிக்கப்பட்டுப், பிறமொழிகளின் ஆளுமை நிலவியபோது, எதிர்ப்புக் குரல்கள் எழத் தொடங்கின. சிவனிய (சைவ) நாயன்மார்களும் மாலிய (வைணவ) ஆழ்வார்களும் பக்தியுடன் தமிழுணர்வையும் கலந்து இறைப்பாடல்களை எழுச்சியுடன் இயற்றிப் பாடினர். சமண, புத்த மதங்களின் வழியாக ஏற்பட்ட வட இந்திய மொழிகளின் வல்லாண்மையைத் தடுக்கும் முயற்சியாக இந்தப் பற்றி(பக்தி) இயக்கம் அமைந்தது. இதனால் தமிழ் மக்களிடம் இறைநெறியுடன் தமிழுணர்வும் வளர்ந்தது. 11ஆம் நூற்றாண்டில் தமிழில் புகுத்தப்பட்ட மணிப்பிரவாள மொழிக்கலப்புநடை, உண்மைத் தமிழறிஞர்பால் கால்கொள்ளவில்லை.

“தமிழ், வடமொழி இருமொழியும் நிகர், வடமொழி உணர்ந்தார்க்கின்றி, தமிழியல்பு விளங்காது” என்று சிவஞான முனிவர், ‘இருமொழிக்கும் இலக்கணம் ஒன்றே” என்று சாமிநாத தேசிகர் முதலியோர் சமற்கிருத வல்லாண்மைக்கு ஆட்பட்டனர். ஆனாலும் இப் போக்கிற்கு எதிராகத் தமிழின் மேன்மையை நிலைநாட்டும் முயற்சிகளும் நடந்தன. 16ஆம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவரும் 17ஆம் நூற்றாண்டில் கருணைப்பிரகாசரும் இம்முயற்சிகளில் ஈடுபட்டோரில் குறிக்கத் தக்கவர்களாவர். இருப்பினும்

இத்தகையோரின் முயற்சிகளால் சமற்கிருத வல்லாண்மையைத் தடுக்கமுடியவில்லை. அருணகிரிநாதர், தாயுமானவர் பாடல்களில் சமற்கிருத கலப்பு மிகுந்திருந்தது. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கராச்சாரி, ''சமற்கிருதமே எல்லா மொழிகளுக்கும் தாய்'' என்று கூறியபோது, வள்ளலார், அதை மறுத்து ''அவ்வாறாயின் தமிழ் எல்லா மொழிகளுக்கும் தந்தை'' என்று கூறி விளக்கினார். மேலும், ஆரியம் முதலிய மொழிகளின் கடுமையையும் அவற்றின் தேவையின்மையும் சுட்டிக் காட்டித் தமிழ்த் தூய்மைப் போக்கினை மேற்கொண்டார். பிற்காலத்தில் நல்லூர் ஞானப்பிரகாசர், உ.வே.சா., வையாபுரியார், மணிக்கொடிக் குழுவினர் போன்றோர் தனித்தமிழுக்கு எதிரானவர்களாக இருந்தனர்.[11]

தமிழ்த் தூய்மையத்திற்கான தூண்டல்கள்

சமற்கிருதச் சார்பினர் தமிழைச் சமற்கிருதப்படுத்துவதை விடாமுயற்சியாகவும் வேண்டுமென்றேயும் வலிவாகவும் விரிவாகவும் செய்து தமிழை அழித்தும் இழித்தும் பழித்தும் வந்த போக்கு, தமிழைக் காக்க வேண்டும்; அதில் பிறமொழிக் கலப்பை நீக்க வேண்டும்; தடுக்க வேண்டும் என்கிற தமிழ்த் தூய்மையச் செயற்பாடுகள் தோன்ற எதிர்நிலைத் தூண்டலாகியது. 1856இல் வெளிநாட்டு அறிஞர் இராபர்ட்டு கால்டுவெல் அவர்கள் ''தமிழானது, சமற்கிருதச் சொற்களை முற்றிலும் தவிர்த்துவிட்டுத் தனித்தியங்க முடியும்'' என்று தன் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலில் விளக்கமாக எடுத்துரைத்தார். பெர்சிவல், வின்சுலோ, இராபர்ட்டு நொபிளி, எல்லிசு, வீரமாமுனிவர், போப் முதலான வெளிநாட்டு அறிஞர்கள் தமிழை ஆய்ந்தறிந்து அதன் சிறப்புகளை வெளிப்படுத்திக் கட்டுரைகளும் நூலும் படைத்தார்கள். மனோன்மணீயம் சுந்தரனார், தான் இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில், தமிழையும் சமற்கிருதத்தையும் ஒப்பிட்டுத் தமிழின் மேன்மையை உணர்த்தினார். இந் நிலைகளும், தமிழறிஞரிடையே அரும்பியிருந்த தமிழ்த் தூய்மை எண்ணத்திற்கு வலு சேர்த்தன.

தமிழறிஞர்கள் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களைத் தேடித் தொகுத்து வெளியிட்டனர். ஆறுமுக நாவலர், திருமயிலை சண்முகனார், மழவை மகாலிங்கனார், சி.வை.தாமோதரனார், உ.வே.சா. என்று பலரும் இத் திருப்பணியைச் செய்தனர். இதனால் சமற்கிருதச் சார்பில்லாத தனித்தமிழ் இலக்கியங்கள் பண்டே படைக்கப்பட்டுள்ளன என்பதைப் பலரும் அறிந்தனர்; கிளர்ச்சி உற்றனர். தமிழுக்கு ஆக்கமான அரிய ஆராய்ச்சி நூல்களை

இரா.இராகவனார், மு. இராகவனார், பி.டி. சீனிவாசனார், எசு.கிருட்டிணசாமியார், டி.சேசனார் என்று பலரும் எழுதினர். கு.கதிரைவேலனார், மதுரையில் தமிழ்ச் சங்கம் தொடங்கிய பாண்டித்துரையார், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், மாகறல் கார்த்திகேயனார், வீ.கனகசபையார், எம்.எசு. பூரணலிங்கனார், பூபாலனார், தமிழவேள் உமாமகேசுவரனார், கே.எசு. சீனிவாசனார், விபுலானந்த அடிகளார் என்று பலரும் பல வழிகளில் தமிழுக்கு ஆக்கப் பணிகளை மேற்கொண்டனர். தமிழர்களுக்குத் தமிழார்வமும் தமிழுணர்வும் மேலோங்கியது.

தனித்தமிழியக்கத் தோற்றமும் வளர்ச்சியும்

கால்டுவெல்லாரின் நூல் வெளிவந்த பின்னர் தூயதமிழ்ப் படுத்தும் முயற்சிகள் தமிழறிஞர்களிடையே படிப்படியாக வளர்ந்தன. தமிழறிஞர் சூரிய நாராயண சாஸ்திரியார் தன் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று தனித்தமிழில் புனைபெயராகச் சூட்டிக்கொண்டார். பாம்பன் சுவாமிகள், சமற்கிருதச் சொல் கலவாமல் 'சேந்தன் செந்தமிழ்' நூலை இயற்றினார். இசைத்துறையில் தமிழின் தனித்தன்மையை தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் நிலைநாட்டினார். அயோத்திதாசப் பண்டிதர் 'தமிழன்' என்னும் இதழ் நடத்தித் தமிழுணர்வைப் பரப்பினார். விருதை சிவஞான யோகிகள், பாரதியார், சுப்பிரமணிய சிவா, வ.உ.சி. என்று பலரும் தமிழில் பிறமொழிக் கலப்பை எதிர்த்து எழுதினர்.

சமரச சன்மார்க்க நிலையத்தை நிறுவிய சுவாமி வேதாசலனாரின் உள்ளத்திலே தமிழ்மொழித் தூய்மைய உணர்வு பல காலமாக உருப்பெற்று வளர்ந்து வந்திருந்தது. 1916இல் ஒரு நாள் அவர் வள்ளலாரின் 'பெற்ற தாய்தனை மக மறந்தாலும்' என்ற பாடலை பாடிக்கொண்டிருந்தபோது, ''இரண்டாம் அடியில் உள்ள 'உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்' என்னும் பகுதியில் வரும் 'தேகத்தை' என்னும் சமற்கிருதச் சொல்லுக்கு 'யாக்கை' என்னும் தமிழ்ச்சொல்லை அமைத்திருந்தால் அவ்வடி இன்னும் சிறப்பாக இருக்குமே; தமிழில் வடமொழிச் சொற்களைச் சேர்ப்பதால் தமிழ் தன் இனிமையை இழப்பதோடு பல தமிழ்ச் சொற்களும் வழக்கில் இல்லாமல் இறந்துபடுகின்றன'' என்று உடனிருந்த தம் மகள் நீலாம்பிகை அம்மையாரிடம் கூறினாராம். அவருரை கேட்ட அவ்வம்மை மிக மகிழ்ந்து ''இனி, நாம் வடசொல் கலந்து பேசுவதைத் தவிர்ப்போம்'' என்றுரைக்க, இருவரும் இனி, தனித்தமிழையே கையாளுவது என்று உறுதிபூண்டு செயற்பட்டனர். சமற்கிருதத்திலிருந்த தம் பெயரை அவர் மறைமலை அடிகள் என்று மாற்றிக்கொண்டார். சமரச சன்மார்க்க நிலையம் பொதுநிலைக் கழகமானது; அவர் நடத்திவந்த 'ஞான சாகரம்' இதழ்

'அறிவுக் கடல்' என்று பெயர் மாற்றப்பட்டது. அவரின் மக்கள் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாக மாற்றப்பட்டன. இந் நிகழ்வுகளைத், தனித் தமிழ் இயக்கத்தின் தோற்றமாக அதன் வரலாறு கூறுகிறது.

கரந்தை தமிழ்ச் சங்கத்தின் 'தமிழ்ப்பொழில்', மதுரை தமிழ்ச்சங்கத்தின் 'செந்தமிழ்', சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 'செந்தமிழ்ச் செல்வி' இதழ்களில் பிறமொழிக் கலப்பைக் கண்டித்துக் கட்டுரைகள் வெளிவந்தன. ந.சி. கந்தையா அவர்கள் நடத்திய 'தமிழன்' மாத இதழ் தனித்தமிழ்க் கொள்கையைப் போற்றியது. திரு.வி.க., உமாகசேசுவரனார், சோமசுந்தர பாரதியார், கா.சுப்பிரமணியனார், பா.வே.மாணிக்கனார், அரசஞ்சண்முகனார், மு.கதிரேசனார், சாமி வேலாயுதனார், செல்வகேசவராயனார், நெல்லைப் பால்வண்ணனார், தஞ்சை சீனிவாசனார், ஈழத்துச் சிவானந்த அடிகளார், கா.நமச்சிவாயனார், அழகரடிகள், நா.மு.வேங்கடசாமியார், வரகுணப் பாண்டியனார், தாரமங்கலம் வரதனார், இ.மு.சுப்பிரமணியனார் முதலிய நூற்றுக்கணக்கான பெருமக்கள் தமிழ் மறுமலர்ச்சிக்கும் தூயதமிழ் வளர்ச்சிக்கும் ஆக்கப்பணிகள் புரிந்துள்ளனர். கீ.இராமலிங்கனார், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள், க. வெள்ளைவாரணனார், மேலகரம் கந்தசாமியார், மா.அரசமாணிக்கனார், அ.சிதம்பரநாதனார், துடிசைக்கிழார், கார்மேகனார், தி.வை. சதாசிவனார், ஔவை சு.துரைசாமியார், வ.சுப.மாணிக்கனார், பெருமழைப் புலவர் சோமசுந்தரனார், மே.வீ.வேணுகோபாலனார், மயிலை சீனி.வேங்கடசாமியார், சி.இலக்குவனார், கா.அப்பாத்துரையார், மு.வரதராசனார், உறையூர் இறையனார், மறை. திருநாவுக்கரசு, மா.சண்முகசுப்பிரமணியனார், புதுவை சுந்தரசண்முகனார், வை.பொன்னம்பலனார் மு. அண்ணல்தங்கோ, அண்ணா, ம.பொ.சி., கி.ஆ.பெ., சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் திருவரங்கனார், வ.சுப்பையா என்று பல பெருமக்களும் தம் எழுத்தாலும் பேச்சாலும் செயல்களினாலும் தனித் தமிழியக்க வளர்ச்சிக்குத் துணை நின்றனர். புரட்சிப்பாவலர் பாவேந்தர் பாரதிதாசன் 'தமிழியக்கம்' முதலிய எழுச்சி மிக்க பாடல்களைப் பாடித் தமிழ் மக்களுக்குத் தமிழுணர்வூட்டிப் பெருந்தொண்டு புரிந்தார்.

மறைமலையடிகளுக்குப்பின், தனித்தமிழியக்கத்திற்கு மிக முதன்மையான பங்களித்து அடுத்த கட்டத்திற்கு வளர்த்தவர் மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள். தமிழே ஞால முதன்மொழி அது ஆரியத்திற்கு மூலம் திராவிடத்திற்கு தாயும் ஆகும் என்ற தன் கோட்பாடுகளை நிலைநிறுத்தியவர் பாவாணர். அவருடைய அரிய ஆராய்ச்சியினால் விளைந்த தமிழாய்வு

மொழியியல் நூல்களும் நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளும் தனித்தமிழியக்கத்திற்கு நல்ல ஊற்றமாகவும் உரமாகவும் அமைந்தன. அவர்தம் தலைமாணாக்கர் பாவலரேறு பெருஞ்சித்திரனார், பாவாணரைச் சிறப்பாசிரியராகக் கொண்டு 'தென்மொழி' என்கிற தூயதமிழ் இலக்கியத் திங்களிதழை 1959இல் தொடங்கினார். அதுகாறும் தமிழறிஞர் குழாத்திடமும் தமிழ்ப் புலவரிடத்தும் மட்டுமே மெதுவாகப் பரவிக்கொண்டிருந்த தூயதமிழ் உணர்வைப் பாவலரேறு அவர்கள் எளிய தூயதமிழ் நடையில் பல்துறைக் கட்டுரைகள், சொற்பொழிவுகள், நூல்கள், இதழ்கள்வழி பொது மக்களிடமும் மாணவர்களிடமும் பரப்பினார். மேலும், அடுத்த தலைமுறையினரான மாணவர்கள், சிறுவர்களையும் தனித்தன்மை நீரோட்டத்திற்கு வருமாறு தான் நடத்திய தமிழ்ச்சிட்டு இதழ் வழி பணியாற்றினார். பாவாணர் - பாவலரேறு ஆகியோரின் கூட்டுச்செயற்பாடு தனித் தமிழியக்கம் தளர்ந்துவிடாமல் வளர்ந்து பரவிட வழிசெய்தது. மேலும் உலகத் தமிழ்க்கழகம் என்னும் அமைப்பு தோன்றித் தமிழகத்திலும் பிற நாடுகளிலும் கிளைகளைப் பரப்பித் தனித்தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ்க் காப்பிற்கும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பல பணிகளைச் செய்திட காரணமாய் அமைந்தது. தமிழைப் பிறமொழிப் பிணிப்பிலிருந்தும் திணிப்பிலிருந்தும் விடுவித்துக் காக்கும் அறிஞர் படைவரிசை உருவாக வழிகோலியது. முனைவர் ஆர்.ஈ.ஆசர், ''மொழியில் தூய்மை நாடும் தன்மை தமிழரிடம் நெடுகிலும் இருந்து வந்துள்ளது. ஆனால் இந்த மொழித்தூய்மை உணர்ச்சி தமிழ்நாட்டில் இந்த இருபதாம் நூற்றாண்டில் உள்ளது போன்ற வலிவுடன் முன் எப்போதும் இருந்ததில்லை'' என்று கூறுகிறார்.[12]

பயன்கள்

1938இல் வெளியான மருத்துவ அகராதியில் 'ஆநாக ரோகம்' என்கிற சொல்லுக்கான விளக்கத்தில் ''இதற்குத் தமிழில் 'உஷ்ணவாயு' என்று பெயர் என்கிறார் நூலாசிரியர் அறிஞர் சாம்பசிவனார் அவர்கள். உஷ்ணம், வாயு இரண்டுமே சமற்கிருதம் என்று கூட உணரமுடியாத அளவுக்குச் சமற்கிருதச் சொற்கள் தமிழில் நன்கு கலக்கப்பட்டு இருந்த அவல நிலை, தனித்தமிழியக்கத்தின் பணியால் நீங்கியது.

தமிழறிஞர், புலவர் பலருக்குத் தனித்தமிழியக்கத்தின்மீது ஈர்ப்பு ஏற்பட்டது. அதன் காரணமாகத் தமிழில் பிறமொழி கலந்து பேசும், எழுதும் நடைமுறையை அவர்கள் கைவிட்டனர். எண்ணற்ற இலக்கியங்கள், இலக்கண நூல்கள் கலை, அறிவியல் நூல்கள், பாட நூல்கள் தனித்தமிழில் படைக்கப்பட்டுள்ளன.

தமிழில் எல்லாம் முடியும் என்பது மெய்ப்பிக்கப்பட்டது. எத்தகைய அறிவியல் வளர்ச்சியையும் தூயதமிழில் வெளிப்படுத்த முடியும் என்பது அனைத்துத் துறைகளிலும் புதிய கலைச்சொற்கள் தூயதமிழில் உருவாக்கப்பட்டு, மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. (எ-டு) தமிழ்ப்பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள அறிஞர் ப. அருளி அவர்களின் அருங்கலைச்சொல் அகரமுதலி.

வெளிநாட்டு அறிஞர்கள் சமற்கிருத மேன்மை மயக்கத்திலிருந்து விடுபட்டுத் தமிழின் மேன்மையை தனித்தமிழியக்க அறிஞர்களின் பணிகள் உணர வைத்தன.

தம் மொழி தொடர்பாகத் தமிழர்களிடையே இருந்த தாழ்வு மனப்பான்மை அகல வழிவகுத்தது. தனித்தமிழில் பேசும், எழுதும் தமிழர்களின், தமிழ்க் குடும்பங்களின் எண்ணிக்கை பெருகிவருகிறது. எஞ்சிய தமிழ் மக்களிடமிருந்தும், பிறமொழி கையாளும் வழக்கம், சிறிது சிறிதாகத் தொலைந்து வருகிறது. சான்றாகச்சிலவற்றை மட்டும் பார்க்கலாம். 'நமஸ்காரம்' வணக்கம் ஆகியுள்ளது; 'பிரசங்கம்' சொற்பொழிவாகியுள்ளது; 'அபேட்சகர்' வேட்பாளர் ஆகியுள்ளார்; 'அக்கிராசனார்' தலைவர் ஆகிவிட்டார்; 'காரியதரிசி' செயலர் ஆனார்; 'பொக்கிஷதாரர்' பொருளாளர் ஆனார்; 'வாத்தியார்' ஆசிரியர் ஆகியுள்ளார்; இவ்வாறு 'மகா ஜன'ங்கள் வெகு மக்களாகியுள்ளார். 'பிராணவாயு' உயிர்வளியாகித் தமிழன்னை மூச்சுயிர்க்கிறாள்.

முடிவுரை

இன்னமும், தமிழ் மக்களில் பெரும்பான்மையினர், தாங்கள், பிறமொழி கலந்த தமிழில்தான் பேசியும் எழுதியும் வருகிறோம் என்பதை அறியாமல், பிறமொழி கலந்த தமிழில் பேசியும் எழுதியும் வருகிறார்கள். தமிழ்ப் புலவர்களிலும் அறிஞர்களிலும் சிலர் தெரிந்தே பிறமொழி கலந்த தமிழில் பேசியும் எழுதியும் வருகிறார்கள். காட்டாக, ''போன் பண்ணு, கட் பண்ணு, ட்ரஸ் பண்ணு, டிபன் பண்ணு, கால் பண்ணு'' என்றே பலரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ''இந்த வருஷம் ஜாஸ்தி லீவ்'' என்று சொல்கிறார்கள். நான்கு சொற்கள் அடங்கிய இந்தத் தொடரில் 'இந்த' என்பது மட்டுமே தமிழ்ச் சொல்லாக உள்ளது. இன்னமும் பலர் 'புதுமனை புகுவிழா' என்று சொல்லாமல் சமஸ்கிருதச் சொற்களால் கூறும் அவல நிலை உள்ளது.

தமிழ்ச் செய்தி ஊடகங்களிலும் காட்சி ஊடகங்களிலும் பிறமொழி ஆளுமை அதிகமாகவுள்ளது. இதனால் தமிழ் மக்கள், பிறமொழிக்கலப்பின் பிடியிலிருந்து இன்னமும் விடுபடவில்லை.

எல்லாத் தமிழ் மக்களும் தேவையற்ற பிறமொழிக் கலப்பைத் தம் பேச்சிலும் எழுத்திலும் தவிர்த்துத் தம் தாய்மொழியைப் பேணிடத் தமிழ் மொழித்

தூய்மை முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்; தமிழ்ச்சிதைவு தடுத்து நிறுத்தப்பட வேண்டும்; தமிழின் அழிவைத் தடுத்து அதை வாழ்விக்க வேண்டும். ஏனெனில் அவள் நம் தாயன்றோ? பெற்ற தாயைக் காத்திடல் பிள்ளைக் கடனன்றோ?

சான்றெண் விளக்கம்

1. பெருஞ்சித்திரனார், இலக்கியத்துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள், ப. 6.
2. மேற்படி , ப. 14.
3. J.A.Cuddon, A Dictionary of Literary Terms, P.542.
4. Wexler Paul, Purism and Language, P. 11.
5. திருமாறன், கு., தனித்தமிழியக்கம், ப. 32.
6. www.Accademia, della Crusco.com
7. திருமாறன், கு., மு.நூ., ப. 58.
8. பெருஞ்சித்திரனார், தனித்தமிழியக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும், முன்னுரை, ப.IV.
9. வரதராசன், மு., மொழி வரலாறு, ப.109.
10. பெருஞ்சித்திரனார், தனித்தமிழியக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும், முன்னுரை ப. V & VI.
11. திருமாறன், கு., மு.நூ., ப. 150. 226.
12. தென்ஆசிய ஆய்விதழ் ஆறாம் மடலம் முதல் இதழ் அக்டோபர், 1972.

துணைநூற் பட்டியல்

1. திருமாறன், கு., தனித்தமிழியக்கம், மருதம், திருச்சி, 1992.
2. பெருஞ்சித்திரனார், இலக்கியத்துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள், தென்மொழி, சென்னை. 1973.
3. பெருஞ்சித்திரனார், தனித்தமிழியக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும், நிறைமொழி வெளியீடு, சென்னை, 1992 .

மற்றும் சில இணையத்தளங்கள்

13. Index of The Journal of Tamil Studies - 2

VOL. 33- 42 ⁄ *பி. கவிதா*

TITLE INDEX

47. The Martial character of Trade guilds
- Manickam, V.
PP. 58 - 62 ; Vol. 36 ; December 1989.\

48. The Notion of Arete (Virtue) in Greek Ethical thought in relation to Aram (Virtue) in Tirukkural.
- Ananthanathan, A.K.
PP. 33 - 48 ; Vol. 36 ; December 1989 .

49. The Notion of Dhamma in the Early Theravada Buddhist Tradition.
- Ananthanathan
PP.17 - 27; Vol. 35 ; June1989.

50. The poet in Bharathidasan's Alakin Cirippu
- Devendran , B.
PP. 1 - 10; Vol. 39; June 1991.

51. The Presiding Deity of Tirupparankundram
- Nachiyappan, Nagappa.
PP. 11 - 21 ; Vol. 33 ; June 1988.

52. The Proto – Dravidians in Central Asia
- Clyde Ahmad Winters.
PP. 73 - 76 ; Vol. 33 ; June 1988.

53. The rebel as Hero: Bharathidasan's Use of Myth
- Marudanayagam, P.
PP. 11 - 19; Vol. 39; June 1991.

54. The Saptanga theory and the State in the Cankam age.
- Balambal, V.
PP. 53 - 57 ; Vol. 36 ; December 1989.

55 . The Tamil Movement in Jaffna and in India – A Comparison
- Dagmar Hellmann Rajanayagam.
PP. 38 - 66 ; Vol. 33 ; June 1988.

56. Theory and Practice of Bhakti Cult in Nayanmars and Saiva Saints
- Singaravelan, C.
PP. 1 - 14 ; Vol. 34 ; December 1988.

57. Tirukkural as National Literature
- Kandaswamy, S.N.
PP. 8 - 21; Vol. 38; December 1990.

58. Trade Guilds
- Rajamani, V.
PP. 1 - 11 ; Vol. 35; June1989.

59. Worship of the Mast Deity
- Nachiyappan, Nagappa.
PP. 39 - 46 ; Vol. 35 ; June1989.

தமிழ்க் கட்டுரைகள் - தலைப்பு முதல் அகர வரிசை
வ.எண்

1. அறமும் அரசு பற்றிய கோட்பாடும் நடைமுறையும்
- ஆனந்தநாதன், ஆ.க.
PP. 65 - 75; Vol. 38; December 1990.

2. அறிஞர் அப்புஸ்வாமியும், வையாபுரியும்
- வினாயகப் பெருமாள், வ.
PP. 20-23; Vol. 40; December 1991.

3. அறிஞர் பெ.நா. அப்புசாமி அவர்கள் நூற்றொகை
- இராசேந்திரன், ம. மற்றும் வளர்மதி, மு.
PP. 24-31; Vol. 40; December 1991.

4. அறிஞர் பெ.நா. அப்புசாமியின் சிறுவர் அறிவியல் கதைகள்
- வளர்மதி, மு.
PP. 24-31; Vol. 40; December 1991.

5. அறிவியல் தமிழ்க் கல்வி
- மேரி ரோஸ்லின், மு.
PP. 71 -93; Vol. 94; December 1992.

6. ஆனந்தவிகடன் இதழ்ச் சிறுகதைகளில் அறமதிப்புகள்
- கிருபாகரன், மா.
PP. 117 - 122 ; Vol. 36 ; December 1989.

7. *ஈழத்து வன்னிமை மக்களின் விவசாயகச் சடங்கு முறைகள்*
- கனகரத்தினம், இரா. வை.
PP. 95 -110; Vol. 109; December 1992.

8. *உள் உணர்ச்சி வெளியீட்டுச் சுதந்திரம் பாரதிதாசன் கவிதைகளில்*
- பத்மநாபன், நீல.
PP. 56 - 70; Vol. 39; June 1991.

9. *ஊர்ப்பெயர் ஆய்வுக் களஞ்சியம்*
- பகவதி, கு.
PP. 104-119; Vol. 41; June 1992.

10. *கல்வெட்டுகளில் கொங்குவேளாளர் கூட்டப் பெயர்கள்*
- இராசவேலு, சு.
PP. 67 - 74 ; Vol. 36 ; December 1989.

11. *கல்வெட்டுத் தமிழில் தொடரியல் அமைப்பு*
- பாக்கியலட்சுமி, இரா.
PP. 95 – 10 6 ; Vol. 33 ; June 1988.

12. *கலித்துறையின் வகைகள்*
- ராஜேஷ்வரி, த.
PP. 87 - 96; Vol. 38; December 1990.

13. *சமுதாயவியல் நோக்கில் தமிழ்ப் புதினங்கள்*
- நளினிதேவி, நா.
PP. 99 - 106 ; Vol. 37 ; June 1990.

14. *சோக்கிரட்டீஸின் ஒழுக்கவியற் சிந்தனை*
- ஆனந்தநாதன், ஆ.க.
PP. 91 - 98 ; Vol. 37 ; June 1990.

15. *தமிழ் அகராதிகளில் வினைக்குரிய தலைச்சொல்*
- சண்முகன், முத்து.
PP. 103 - 116 ; Vol. 36 ; December 1989.

16. *தமிழ்மொழி வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தில் வே.கனகரத்தினத்தின உபாத்தியாயரின் "ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம்" (1882) பெறும் முக்கியத்துவம்.*
- கனகரத்தினம், இரா.வை.
PP. 81 - 102 ; Vol. 35 ; June1989.

(To be continued)

பி. கவிதா, நூலகர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.

14. அரிய பழந்தமிழ் நூல்கள் மின் எண்மம் செய்தும் புதுப்பித்தும் வெளியிடப்படும் திட்டம்

இரா. பெருமாள் சாமி

அரியநூல்கள் என்றால்...

ஏடுகளிலும் தாள்களிலும் இடம்பெற்றிருந்த பனுவல்கள் அச்சுவடிவத்திற்கு வந்த புரட்சி நம் நாட்டில் தமிழில்தான் முதன்முதலில் கி.பி.16ஆம் நூற்றாண்டின் மய்யத்தில் ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து அயல்நாட்டினரும் சுதேசிகளும் நூல்களை அச்சு எந்திரம் மூலமாக விரைந்தும் பலவாகவும் மலிவுவிலையிலும் அச்சடித்துத் தமிழ்க் கல்வியையும் ஆராய்ச்சியையும் பரவலாக்கினர். தொடக்கத்தில் சமய நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் போன்றவை அச்சாக்கம் பெற்றாலும் கி.பி.1812 ஆம் ஆண்டளவிலேயே திருக்குறள் முதன் முதலாக அச்சாக்கம் பெற்றது. அதைத் தொடர்ந்து பல பழந்தமிழ் நூல்கள் அச்சுவாகனம் ஏறின.

நூல்கள் மறைதல்

நூல்கள் அழிதல் என்பது தொடர்நிகழ்வாகி விட்டது. இயற்கையாக அழிதலும் மனிதன் அழித்தலுமாக நூல்களின் அழிவு வழிவழியாகத் தொடர்கிறது. கடல் கோள்களால் முதல், இடைச்சங்க நூல்களின் அழிவை இறையனார் களவியல் உரை கூறுகின்றது. தொல்காப்பியச் சுவடி ஒன்றில் குறிப்பிட்டிருந்த ''தகடூர் யாத்திரை'' என்னும் நூலைப் பதிப்பிக்கத் தேடும் போது கிடைக்காததையும் , முன்னோர் நூல்கள் கிடைக்காமையினால் பல விவரங்கள் விளங்காமையையும் உ.வே.சா. வின் என் சரித்திரம் மூலம் அறிகிறோம். பல தமிழ் நூல்கள் மறைந்த கதையும் மதுரைத்தமிழ்ச் சங்கம் தீக்கிரையாக்கப் பட்டதையும் வரகுண பாண்டியனின் நூல் நிலையத்து ஏட்டுச் சுவடிகள் ஓமத்தீயில் இடப்பட்டது பற்றியும் மயிலை சீனி. வேங்கடசாமி தம்முடைய மறைந்து போன தமிழ் நூல்கள் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். காகிதப் பற்றாக்குறையினால் நூல் அச்சுக்கு வருதலில் தாமதம் ஏற்பட்டுள்ளதைப் பற்றி மு. அருணாசலம் கூறுகின்றார். நாளந்தா பல்கலைக்கழகம், யாழ்நூலகம் போன்றவை தீக்கிரையாக்கப் பட்டன. இன்றும்கூட நம் பார்வையில்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்துள்ள நூல்களும் அழிந்து கொண்டு வருகின்றன.

தமிழ்ப் பனுவல்கள் தோன்றி 2000 ஆண்டுகளுக்கு மேலாகியும் அவற்றுள் சில மீளக் கிடைப்பதற்கு இலக்கிய ஆர்வமுள்ள ஆசிரியர்களாகப் பணி செய்து வந்த முன்னோர்கள் அவற்றைப் பாதுகாத்து வந்தது தான் காரணமாகும். இந்த நீண்ட பயணம் பல நூல்களின் பெரும் அழிவைத்தடுத்திருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அவையெல்லாம் இன்று செவ்விலக்கியங்கள் என்று சொல்லும் இலக்கியங்களை விட இன்னும் சிறப்பான இலக்கியங்களாக இருந்திருக்கலாம்.

அழிந்து போன இலக்கிய நூல்கள்

அகத்தியம், அடிநூல், அவிநயம், அவிந்த மாலை, ஆசிரிய மாலை, ஆசிரிய முறை, ஆசிரிய முறி, ஆன்மவியல், ஆட்சி நூல், இந்திரம், இந்திர காவியம், இளந்திரையம், எதிர்நூல், ஐந்திரம், ஒப்பு நூல், கச்சபுடம், கடகண்டு, கணக்கியல், கிலியாண கதை, கலைக் கோட்டுத் தண்டு கலிப்பாடல், கவிமயக்கிறை, களரியாவிரை, களவு நூல், கனவு நூல், காலகேசி, காக்கைப் பாடினியம், குடுகு, குண்டலகேசி, கோள்நூல் (வான நூல்) சங்க யாப்பு, சயந்தம், சாதவாகனம், சிந்தம், சிறுகு இலியுரை, செயன்முறை, தந்திரவுரை, தும்புப்பாட்டு, தேசிகமாலை, நாக்குமாரம், பதினாறுபடலம், பரிநூல், பழைய பரிபாடல்கள் , பல்காப்பியம், பல்காயம், பன்மணிமாலை, பன்னிரு படலம், பறவைப்பாட்டு, பாண்டியன் மரபு, பாட்டுமடை, பாண்டியன் பாரதம், புணர்பாவை, புதையல் நூல், பூதபுராணம், பெரியபம்மம், பெருபாரதம், பெருவெல்லம், பெருவஞ்சி, மணியாரம், மந்திரநூல், மயேச்சுரயாப்பு, மாபுராணம், மார்கண்ட காஞ்சி, முதுநாரை, முதுகுருகு, முத்தொள்ளாயிரம், முப்பேட்டுச் செய்யுள், மூவடி முப்பது, வஞ்சிப்பாட்டு, வளையாபதி, வாய்ப்பியம், வியாழமாலை, விசாகன் பாரதம், வீரமாலை, வீரவிளக்கம், வீரவணுக்கம், வெண்பாறி, வேந்தியன்முறை, வைப்புயம், வைரமாலை, வச்சத் தொள்ளாயிரம் முதலியன அழிந்துபோன நூல்களுள் சிலவாம்.

இவற்றுள் என்னென்ன செல்வங்கள் புதைந்து கிடந்தனவோ? நமக்குக் கிடைத்திருப்பவை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்பன மட்டுமே. அழியும் நிலையிலுள்ள உயிரினங்களையும் பாதுகாக்கச் சிறப்பு நடவடிக்கை எடுப்பது போல. துறை சார்ந்த அறிஞர்களின் ஆலோசனையுடன் நம் பண்பாட்டுக் கூறுகளை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் இலக்கிய வரலாற்றின் பயன்பாட்டுக்கான நூல்களில் எவை அழியும் நிலையில் உள்ளன என்பதைக் கண்டு, தொடர்ந்து மறுபதிப்போ மீள் அச்சோ பெறாமலிருந்த காரணத்தால் அவற்றின் பிரதிகள் கிடைப்பதற்கு அரிதாகிப்போயின.

தமிழக அரசின் திட்டம்

இதனைக் கருத்தில் கொண்டே மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சுவடிப்புலத்தின் வாயிலாக அழியும் நிலையிலிருக்கும் அரிய தமிழ்நூல்களைத் திரட்டி, பாதுகாத்து, மின்எண்மம்செய்தும் மீள அச்சிட்டும் தமிழ்வளர்க்கும் திட்டத்திற்குத் தாராள நிதி உதவி அளித்தார்கள். இதன் முதற்கட்டமாக அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் எடுக்கப்பெற்ற பல முயற்சிகளில் தற்காலத்தில் நடை முறையிலிருக்கும் எரிக்க முடியாத மின் எண்மத் தொழில் நுட்பத்தால்

தமிழறிஞர்கள் மின்எண்மம் மேற்கொள்ளப் படுதலைப் பார்வையிடுதல்

(Digitization) உருவாக்கப்பட்டிருக்கும் தொழில் நுட்பத்தின் கீழ் அழியும் நிலையிருக்கும் தமிழ் நூல்களைப் பாதுகாத்து மீள் அச்சுச் செய்தும் மின் எண்மம் செய்து இணையத்தில் பதிவேற்றம் செய்தும் எல்லோரும் பயனடையும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அரிய நூல்கள் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப் பெற்றது.

காஞ்சிபுர அரியநூல்கள் நூலகம்

காஞ்சிபுரத்தை அடுத்த புதுப்பாளையம் கிராமப் பகுதியில் 1914 ஆம் ஆண்டு முதல் சமரசசன்மார்க்க நூலகம் செயல்பட்டு வந்துள்ளது. இந்நூலகத்தில் 18- ஆம், 19-ஆம் நூற்றாண்டுகளில் வெளியிடப்பட்ட பல அரிய வகை நூல்கள் உள்ளதாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்குத் தகவல் கிடைத்தது. இதன் பேரில் நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையில் நிறுவனத்தின் நூலகர் இரா. பெருமாள் சாமி, முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் பத்மபிரியா, அருட்பாமணி, மூத்த தமிழ் அறிஞர்கள் பலர் புதுப்பாளையம் சென்று சமரச சன்மார்க்க சங்க நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்த நூல்களை ஆய்வு செய்ததில் நூல்கள் அனைத்தும் படிக்கமுடியாத நிலையில் மிகவும் மோசமாகச் சிதைந்திருந்தமை கண்டறியப்பட்டு அங்கிருந்த மிக அரிய வகை 171 நூல்களை நிறுவனம் கேட்டுப் பெற்று வந்தது.

150 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான இந்நூல்கள் இன்று அச்சில் கிடைப்பது அரிதாகையால் இன்றைய தலைமுறையினர் படித்துப் பயன்பெறும் வகையில் அவற்றைக் கணினியில் அச்சேற்றி, மின்எண்மம் செய்து, புதுப்பித்து வெளியிடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அரிய நூல்களின் பட்டியல்

வ எண்.	நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	பதிப்பு ஆண்டு
1.	திராவிடபாஷ்யம்		1905
2.	சைவ ஷோடசப் பிரகாசிகை		நந்தன
3.	சைவ பூஷண சந்திரிகை	(நா.கதிர்வேற்பிள்ளை)	1902
4.	வாசுதேவ மன்னம் என்று வழங்கும் விவேகசாரம்		1906
5.	வடவேங்கட நாராயண சதகம்	(நாராயணதாசர்)	1897
6.	நந்த மண்டலசதகம்	(மாத்ருபூதையர்)	1894-95
7.	சிவஞான போதவசனாலங்காரதீபம்	(செந்திநாதையர்)	நள
8.	தர்க்க பரிபாஷை	(கோ. வடிவேலுசெட்டியார்)	1908
9.	விசுவ பிரம புராணம்		1910
10.	திருக்குறள் விளக்கமென்னும் தென்கைலாய சதகம்	(ஆ.க.குமாரசாமி முதலியார்)	1912
11.	வசன புராணம்		ஸ்ரீமுக
12	கோயினான்மணிமாலை		1911
13.	சிவஞான சித்தியார் சுபக்ஷம்		விரோதி
14	காசி ரகசியம்	(மீனாட்சிசுந்தரம்பிள்ளை)	1881
15.	தண்டபாணி பேரில் பதிகம் உபதேச உண்மையும் உப்தேச உண்மைக் கட்டளையும் தோத்திர மாலையும்		குரோதன
16.	திருவேற்காட்டுப்புராணம்		1903
17.	பதவுரையோடு கூடிய திராவிட பாஷியம்		1900
18.	ஸ்ரீரங்கர் மகத்துவம்		1901
19.	இராமேச்சுர மான்மியமென்னும் சேது மகத்துவம்		1913
20.	வேதாந்தப் பிரதீபம்		1909
21.	நன்னெறிப் பதவுரை	சிவப்பிரகாச சுவாமிகள் (III பதிப்பு)	1871
22.	திருக்குதிரிசிய விவேகம் மூலமும்உரையும்	(IIம் பதிப்பு சச்சிதானந்த சுவாமிகள்)	1899
23.	கைவல்ய நவநீதம் விருத்தியுரை	(தாண்டவராய சச்சிதானந்த சுவாமிகள்)	1919

வ எண்.	நூல் பெயர் ஆசிரியர் பெயர்	பதிப்பு ஆண்டு
24.	சிவாநந்த லகரி (ஆதிசங்கரர்)	1941
25.	நாலடியார் (ஆங்கில மொழிபெயர்ப்பு)	1904
26.	தருக்க விளக்கம் (சே.சோமசுந்தரம்பிள்ளை)	1907
27.	ஜயமுனி வாக்கியம் என்று வழங்குகிற ஜயமுனி சூத்திர மொழிபெயர்ப்பு	1802
28.	ஸ்ரீ விசார சாகரம் (இந்தி, தமிழ்) (மொழிபெயர்த்தவர்: அ. சிவராயர் ஸ்ரீசாது நிச்சலதாஸர்)	1904
29.	திருப்பெருந்துறைப் புராணம் (உ.வே.சா. பதிப்பு)	1892
30.	ஸ்ரீபால போதம் (வெ.குப்புசாமி) (மொழிபெயர்ப்பு - ராஜூ)	1902
31.	அத்வைத சிந்தா கௌஸ்துபம் அல்லது தத்வாநு சந்தானம்	1911
32.	மோக்ஷ சாதன நிச்சல விளக்கம் (இராமாநந்தசுவாமிகள்)	1906
33.	அருட்பா (இராமலிங்கம் பிள்ளை)	1890
34.	திருவடிமாலை (பா. சோணாசலபாரதி)	1915
35.	சட்டப்புத்தகம்	1920
36.	சற்குரு மாலை	1862
37.	திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் சரித்திர ஓரடிச் சிந்து (தேவார தியாகராச பிள்ளை)	1905
38.	சுப்ராம ஐயர் பதம்	1903
39.	யாப்பிலக்கண விளக்கம் (அ.க.அமிர்தம் பிள்ளை)	1876
40.	பிரபந்தத் திரட்டு (கொ. பள்ளிகொண்டான்)	1899
41.	இரத்தினகிரி என்னும் திருவாட்போக்கிப் புராணம்	1911
42.	இந்து பைபிள் எனும் ஆரியர் சத்திய வேதம்	1906
43.	சிதம்பரசபாநாத புராணம் (சபாபதி நாவலர்)	
44.	நளவீம பாக சாஸ்திரம் (கந்தசாமி முதலியார்)	1935
45.	ஸ்ரீகிருஷ்ண சைதன்யா அவதாரச்செயல்களும் பக்தவச்சலம் அவர் நற்போதனைகளும் (வெங்கட் ஸ்ரீநிவாசன்)	1902
46.	திருப்பனைசைப் புராணம்	

வ எண்.	நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	பதிப்பு ஆண்டு
47.	வருணகுலாதித்தன் மடல்	சென்னை மாநகர் கந்தசாமிபேரில் பிள்ளைக்கவி	
48.	திருப்புகழ் வகுப்பு, பதிற்றுப்பத்தந்தாதி, வெண்பாக்கள் பதிகம்		ஈசுவர
49.	நைடதம் (அதிவீரராம பாண்டியன்)		1897
50.	திருவாசகம்		பிரபவ
51.	சூதசங்கிதாஸார ம்ருத வசனம்	சௌ. பாலசரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள்	1912
52.	சாதகாலங்காரம் (கீரனூர் நடராஜர்)		1910
53.	வேதாந்த சூளாமணி (சிவப்பிரகாச சுவாமிகள்)		1897
54.	ஆத்மானந்த விலாசம்		1898
55.	திருவருட்பா இங்கித மாலை		1904
56.	The History of Tamil Poets (தமிழ்ப்புலவர் சரித்திரம்)	வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்	1899
57.	திராவிடப் பிரகாசிகை (சபாபதி நாவலர்)		1899
58.	திரிகடுகம், பாரதவெண்பா மற்றும் பஞ்சதந்திரம் (பகுதி II.)	சி. ராஜகோபால பிள்ளை	1870
59.	காசிவாசி சிவானந்த பிரகாசசுவாமிகள் சரித்திரம்	(யதீந்திர சுவாமிகள்)	1934
60.	ஸ்ரீ முருகானந்த சுவாமிகள் மேல் பதிகங்கள்	(ஸ்ரீ லஸ்ரீசிவ அருணகிரி முதலியார்)	1912
61.	திருநாளைப்போவாரென்னும் நந்தனார் ஏலப்பாட்டு	(ஒ.சி. சோணாச்சல முதலியார்)	1900
62.	பிரணவ வித்யா பரிமளம், ஸ்ரீலஸ்ரீ சிவ அருணகிரி என்னும் ஓங்காரவிளக்கம்		1920
63.	அகம்புற ஆராய்ச்சி விளக்கம் (சுப்பராய ஆசாரியர்)		1907
64.	இரட்டை மணிமாலை (ஸ்ரீமத் க. குப்புசாமி முதலியார்)		1921
65.	சொரூபாநந்த விளக்கம் (தே.அ.சாமி குப்புசாமி)		1912
66.	புலவர் புராணம் (தண்டபாணி சுவாமிகள்)		1931

வ எண்.	நூல் பெயர் ஆசிரியர் பெயர்	பதிப்பு ஆண்டு
67.	தைல வருக்கச் சுருக்கம் (சி.த.சுப்பிரமணியபண்டிதர்)	1970
68.	தமிழ்த் தென்றல் திரு.வி.கல்யாண சுந்தரனார்	1934
69.	ஸ்ரீமத் ராமானுஜாசார்யர் (ஸி.ஆர்.ஸ்ரீநிவாஸ அய்யங்கார்)	1926
70.	யசோதர காவியம் (ஔவை சு.துரைசாமிப் பிள்ளை)	1944
71.	சோதிட கிரகஹ சிந்தாமணி (பி. இரத்தின நாயகர் & ஸன்ஸ்)	1936
72.	பழமொழி நானூறு (செல்வகேசவராய முதலியார்)	1929
73.	நானாவித உதாரணங்கள் (இராகவ செட்டி)	1892
74.	மகாமக மகாத்மியம் (எம். அநந்தராமய்யர்)	1909
75.	வன்னியர் பிரதாப மாலை	
76.	சொரூபா நுபூதிக் கொம்மி நிச்சல (இராமாநந்தசுவாமிகள்)	1912
77.	ஞானத்திரட்டு	
78.	ஆரூட சாஸ்திரம் (குப்புசாமி நாயுடு)	1896
79.	சுகாதார விளக்கம் (தனகோடி ராஜு)	1879
80.	விஷ்ணு நாமாவளிகள் (ஏகாம்பர முதலியார்)	1895
81.	கிள்ளைவிடுதூது, கோயிலின் கோரசரிதம் (ராம்பால் பிரஸ், மதராஸ்)	1936
82.	அருணகிரி அந்தாதி (கே.சிதம்பரம்பிள்ளை)	1907
83.	தேவாரத்திரட்டு (ம. முருகேச முதலியார்)	
84.	பக்தமகிமை வரகவி (அ.சுப்பிரமணிய பாரதி)	1920
85.	உபோற்காதம் (ஆகஸ்டு 24 மஹாவிகட தூதன் பத்திரிகையில் வெளிவந்தது)	1889
86.	கிருஷி சாஸ்திரம் (செ.கி.சுப்பராயலு)	1892
87.	ஜீவோற்பத்தி சிந்தாமணி (ஞானாநந்தசுவாமிகள்)	1906
88.	தேவாரத் திரட்டு	
89.	முருகன் அருள் வேட்டல் (திரு.வி.கல்யாணசுந்தர முதலியார்)	1889
90.	வீராகமம் (சாந்தலிங்க சுவாமிகள்)	1857

வ எண்.	நூல் பெயர் ஆசிரியர் பெயர்	பதிப்பு ஆண்டு
91.	குமரேச சதகம் (தி.தியாகராஜ சுவாமிகள்)	1905
92.	Life And its Possibilities (Part I) (A. Janakiram Mudaliyar)	1928
93.	ஸ்ரீமத் வாச்சாரியார் ஜீவிய சரிதை (பி.வி. பிரபஞ்சன்)	1923
94.	அங்கக் குறி சாஸ்திரம் (முனுசாமி முதலியார்)	1903
95.	திருமுதுகுன்றத் தேவாரம் (ஞானசம்பந்த முதலியார்)	
96.	பொருள் அகராதி அட்டவணை (சோதிட கிரக சிந்தாமணி) (ஞானசம்பந்த முதலியார்)	
97.	விசயத் தவசியும் சிவவேடனும்	
98.	முருகவேள் பனுவல் திரட்டு (திரு.வி. உலகநாத முதலியார்)	
99.	வரசித்தி விநாயகர் பதிகம் (அரங்கசாமி முதலியார்)	
100.	பூகோள சாஸ்திரம் (வெள்ளம்பி குப்புசாமி ஐயரவர்கள்)	1896
101.	வஜ்ஜிர சூசிகை யுபநிடதம் (சிவாநந்த யதீந்திர சுவாமிகள்)	1934
102.	தமிழன் இதயம் (நாமக்கல் கவிஞர்)	1948
103.	இந்திய பூபதிகள் (சரிதை டி.வி.கணேசன்)	1930
104.	கந்தபுராணத் திரட்டு (ரா.வி.சேதுப்பிள்ளை)	
105.	நன்னூற் காண்டிகையுரை (ஆறுமுக நாவலரவர்கள்)	
106.	விஷய சூசிகை (பு.ப.மாசிலாமணி)	1927
107.	தமிழகம் (ந.சி. கந்தையா பிள்ளை)	
108.	விநோதரசமஞ்சரி (வீராசாமி செட்டியார்)	1941
109.	நீதிநெறி விளக்கம் உரை	
110.	திருவிளையாடற் புராணம் (நாராயணசாமி பிள்ளை)	
111.	திருக்குறள் விளக்கம் (மு.வ.)	
112.	வியாஸபிரகாசிகை (பி.எஸ்.அப்புஸ்வாமி) ஐயர் சக்கரவர்த்தினி இதழாசிரியர்	1910
113.	காஞ்சிபுரம்	
114.	திருவருணை உண்ணாமலை அம்மை பிள்ளைத்தமிழ் (காஞ்சிபுரம் சோணாசல பாரதியார்)	1967
115.	திருவிளையாடற் புராணம்	1942

வ எண்.	நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	பதிப்பு ஆண்டு
116.	கம்பராமாயணம் இருப்பதாஇறப்பதா	(வெ.ப.சுப்ரமணிய முதலியார்)	1942
117.	ஆரவல்லி சூரவல்லி	(அருணாசல முதலியார்)	
118.	சிற்றிலக்கியச்சொற்பொழிவுகள்	(பேராசிரியர் எண்மர்)	1958
119.	Story of Nuncomar		1885
120.	இலக்கண நூல்		
121.	தனிப்பாடற் திரட்டு	(கா.சுப்பிரமணியப் பிள்ளை)	1948
122.	விருத்தி பிரபாகரம்	(தஞ்சை வெ. குப்புஸ்வாமி ராஜு)	
123.	சேந்தன் திவாகரம்		
124.	Tamil Text (University of Madras)		1901
125.	பொது அறிவு-வினா விடை	(எம்.ஆர்.வைத்திய நாத சாஸ்திரி)	
126.	சிவஞானபோதச் செம்பொருள்	(ஸ்ரீ காசி வாசி சாமிநாத சுவாமிகள்)	1958
127.	ஜகதீஸ் சந்திரபோஸ்	(சைவ சித்தாந்த நூற்பதிப்பு)	1945
128.	ஸ்திரீபுருஷ லட்சணச்செம்பொருள் குறிசாஸ்திரம்		
129.	சுபாஷ் சந்திர போஸ்	(டி.எஸ்.சொக்கலிங்கம்)	
130.	பெரிய இந்திர சபா	(சுந்தர முதலியார்)	1896
131.	வீமகவி	(சோதிடர் குப்புமுத்துசெட்டியார்)	1910
132.	சுகாதாரவிளக்ககதை	(சிதம்பர முதலியார்)	1916
133.	உடலறி விளக்கம்	(சிதம்பர முதலியார்)	1903
134.	அத்வைத கீர்த்தன்	(நந்தலஹரி)	
135	தர்க்காமிர்தமும் பிரஸ்தானபேதமும்	(ஸ்ரீசுப்பையாசுவாமிகள்)	1913
136.	தமிழறியும் பெருமாள் கதை		
137.	அறவுரை	(கா.சி.சிவசங்கர முதலியார்)	1920
138	ஸ்ரீராமநாம கீதாமிர்த சாரம்	(வீரராகவ தாசரவர்கள்)	1905
139.	சீகாளத்தி புராண வசனம்	(தியாகராய செட்டியார்)	1911
140.	பூகோள சுருக்கம் வினா விடை		1901
141.	அக்ஷர நுட்பம்	(நல்லப்பரெட்டியார்)	1918
142.	சாத்து கவிகள்	(ஸ்ரீமத் தண்டபாணி சுவமிகள்)	
143.	பார்ஸி சரசமோஹனாவளி	(வே.நாராயணசுவாமி பிள்ளை)	1907

வ எண்.	நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	பதிப்பு ஆண்டு
144.	ஞானதரிசன லக்ஷெணம்		1933
145.	சதுரகராதி		
146.	தொண்டை மண்டலசதகம் (விக்டோரியா பிரஸ்)		
147.	ஸந்தியா வியாக்கியானம்		
148.	சோதிடசிகாமணி உரை		
149.	Chola Kings (Kanaka Rajaiyer)		1931
150.	அகநானூறு சொற்பொழிவுகள் (சைவ சித்தாந்த நூற்பதிப்பு)		
151.	கலித்தொகை சொற்பொழிவுகள் (ந.மு. வேங்கடசாமி நாட்டார்)		
152.	தமிழ்மொழிவரலாறு (சூரிய நாராயண சாஸ்திரிகள்)		
153.	புகழ் பூத்த தமிழர் (வே.ரா. சுந்தரராமன்)		
154.	நல்லதங்காள் கதை		
155.	அறநூல்கள் (சக்கரவர்த்தி ராஜகோபால்)		
156.	புகழ் பூத்த தமிழர் (வெ.ரா. சுந்தரராமன்)		1950
157.	புதுவைத் தலபுராணம்		1902
158.	திருப்பத்தூர் புராணம்		1900
159.	திருக்கடம்பநாத புராணம்		1927
160.	பழநித் தலபுராணம்		1901
161.	காசி ரகசியம்		1881
162.	திருக் களர்ப்புராணம்		1902
163.	தனிப்பாடல் திரட்டு 2		1902
164.	சிதம்பர சபாநாத புராணம்		1903
165.	அறுவகை இலக்கணம்		1893
166.	புறப்பொருள் விளக்கம்		1925
167.	யாப்பருங்கலக் காரிகை		1925
168.	பொதிகை நிகண்டு		1934
169.	தண்டியலங்காரம் மூலமும் உரையும்		1926
170.	விருத்தப்பாவியல்		1911
171.	நளாயினி வெண்பா		1929

தொகுப்பு: இரா. பெருமாள் சாமி, நூலகர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.

15. List of Translations of Tamil Works

English

1. Kindersley, ***Estracts from Teeroovaulavar Kuddal*** or ***Ocean of Wisdom***, 1794.
2. Ellis, F.W., ***Thirukkuṟaḷ on virtue*** (in verse) ***with commentary***, 1812, reprint, Madras 1955.
3. Drew, H.W., ***The Kuṟaḷ of Thiruvaḷḷuvar with commentary of Parimelazhalakar***, Madras, 1840.
4. Aiyar, V.V.S. ***The Kuṟaḷ*** or ***The maxims of Thiruvaḷḷuvar***, Tiruchirapalli, V.V.S. Krishnamurthy, 1953, 1915 (1st) xLix+287p. Poetry.
5. Thirunavukarasu, Mrs., T., ***Kuṟaḷ a selection of 366 verses*** (a gem for each day), Poona 1916.
6. Poornalingam Pillai, M.S., ***English Translation of Kuṟaḷ***, 1920.
7. Mathavaiyah, ***A kuṟaḷ in English with commentary in Tamil***, Madras, 1925.
8. Michael, S.M., ***The sacred aphorisms of Thirukkuṟaḷ*** (in verse), Nagercoil, 1928.
9. Pareswaran Aiyar, T.V., ***108 gems from the sacred Kuṟaḷ***, Kottayama, 1928.
10. Popley, H.A. ***The Sacred Kuṟaḷ or the Tamil veda of Thiruvaḷḷuvar***, Calcutta: YMCA Publishing House, 1958 (2nd, Rev), 1931 (1st), xviii+157p. Poetry.
11. Ranganatha Muthaliar, A: ***Thirukkuṟaḷ moolamum uraiyum with English translation***, Madras, 1933.
12. Aranganatha Mudaliar, A., ***English Translation of Kuṟaḷ***, 1933.
13. Rajagopalachari, C. ***Kuṟaḷ, The Great Book of Kuṟaḷ, A selection of stanzas of Kural part II.***, Madras: Rochouse & sons ltd., 1937, Poetry.
14. Rajagopalachari, C. ***Kuṟaḷ, The second Book of Kuṟaḷ, A selection of stanzas of Kural part II.***, Madras: Rochouse & sons ltd, 1937, Poetry.
15. Rajagopalachari, C. ***Kuṟaḷ, the great book of Thiruvaḷḷuvar***, Madras, 1937, 3rd ed. 1973.
16. Ramachandra Dikshithar, V.R., ***Thirukkuṟaḷ in English with Roman translation***, Madras, 1949.

17. *Thirukkuṟaḷ*, Madras: Teachers publishing house, 1949, Poetry.

18. Dikshitar, U.R.R. *Thirukkuṟaḷ*, Thirukkuṟaḷ Madras: The Adyar Library, 1949, xvii+27p.

19. Raja, P. *Thirukkuṟaḷ*(in verses), Kumbakonam, 1950.

20. Popely, H.A., *The sacred Kuṟaḷ* (selections in verss), Calcutta, 1951.

21. Chakravarthy, A. *Thirukkuṟaḷ* in English with commentary, Madras, 1953.

22. Chakravarthy, A., *Thirukkuṟaḷ*, Thirukkuṟaḷ Madras: Dioceasan press, 1953, Lxix + 648p. Poetry.

23. Thangaswamy, T.D. *Thirukkuṟaḷ*(selections in verse), Madras, 1954.

24. Sethupillai, R.P. (ed.), *Thirukkuṟaḷ, Ellis' commentary*, Madras: University of Madras, 1955, 406p. Poetry.

25. Drew, H.W., and Lazarus, J., *Thirukkuṟaḷ* (in verses), Reprint, Madras, 1956.

26. Pope, G.U, *A collection of the English translation of Thirukkuṟaḷ*, Madras, 1959.

27. Vanmikanathan, G. *The Thirukkuṟaḷ: A Unique Guide to moral, material and Spiritual properity*, Tiruchirapalli: Thirukkural prachar Sangh, 1960, Vol. 1. Poetry.

28. Aiyar. V.V.S. *Kuṟaḷ: Maxims of Thiruvaḷḷuvar*, 4th ed. Madras, 1961.

29. Balasubramanian, K.M. *Thirukkuṟaḷ of Thiruvaḷḷuvar*, Madras, 1962.

30. Popely, H.A., *"The sacred Kuṟaḷ of the Tamil veda of Thiruvaḷḷuvar"*, Translated in English, Calcutta, 1962.

31. Pope, G.U., Drew, W.H., Lazarus, J. and Ellis, F.W., *Thirukkuṟaḷ*, Madras, The South India, 1962.

32. Thiruvachakamaṇi, K.M., Balasubramaniam, *Translation into Rhyming English Couplets*, 1962.

33. Muthuswamy, P. *Thirukkuṟaḷ in English*, Madurai, 1965.

34. Yogi Suddanantha Bharathi, *Thirukkuṟaḷ with English couplets*, Madras, 1968.

35. Gajapathy Nayagar, A. *The rosary of gems of Thirukkuṟaḷ*, Madras, 1969.

36. Kasturi Srinivasan, *Thirukkuṟaḷ: an ancient Tamil classic* (in couplets), Bombay, 1969.

37. Vanmikinathan, G. ***The Thirukkuṟaḷ - a unique guide to moral, material and spiritual prosperity***, Trichy, 1969.

38. ***Thirukkuṟaḷ, (An Ancient Tamil classic)*** Bombay: Bharatiya Vidya Bhavan, 1969, xxv+139p. Poetry.

39. Kannan, K.T. ***Thirukkuṟaḷ, Poyyamozhiyin ponmozhikal***, Salem, Illakkiya vattam 1969, 28p. Poetry.

40. Yogi Suddanantha Bharathi, ***Thirukkuṟaḷ couplets with clear prose rendering***, Madras, 1970.

41. Drew, W.H. & John Lazarus, ***Thirukkuṟaḷ***, Madras: South India Saiva Siddhanta, 1972. Xci+27p. Poetry.

42. Vadivel Chettiar, K. ***Kuṟaḷ in English with Tamil text and Parimelazhalakar commentary***, (3 parts), Madurai, 1972-1980.

43. ***Thirukkuṟaḷ***: Thurudandal, Sri Kasimutt, 1984.

44. Pope, G.U. ***The Sacred Kuṟaḷ of Thiruvaḷḷuvar Nayanar***, London, OUP, 1986, Poetry.

45. Sundaram, P.S. ***The Kuṟaḷ*** (translation from Tamil), Madras: 1987, 154p.

46. Srinivasa Iyengar, K.R. ***Thirukkuṟaḷ: lights of the righteous life: and English verse rendering from the Tamil***, Calcutta: M.P. Birla Foundation 1988, 145p.

47. Sundaram, P.S. ***The Kuṟaḷ***, New Delhi: Penguin Books, 1990, 168p. Poetry.

48. ***The Kuṟaḷ, Tiruvalluvar, translated from the Tamil with an introduction*** Harmondsworth: Penguin, 1991.

49. Kulandaiswamy, V.C. ***The Immortal Kuṟaḷ*** (Sahitya Akademi Award Winning Tamil Literary Critique), South Asia Books, 1994, ISBN: 8172015895. (commentary)

50. Kallapiran, T.R. ***Thirukkuṟaḷ (words of eternal wisdom)***, Madras: Baba Pathippagam, 1995.

51. Drew, W.H., John Lazarus. ***Thirukkuṟaḷ English translation***, New Delhi Madras, 1996.

52. Isaac Thangaiah, ***English Translation with Parimel Azhagar's Commentary*** (First Two Parts Alone).

53. Pareswaran Pillai, V.K., ***Kuṟaḷ***, Madras.

54. Vanmikanathan, G. ***Thirukkuṟaḷ***...

16. நூல் மதிப்புரை

-கா. விஜய்மணியன்

நூல்	:	*இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகள்*
ஆசிரியர்	:	ச.கிருஷ்ணமூர்த்தி
பதிப்பு	:	2014
விலை	:	உரு.80/-
பக்கங்கள்	:	176
வெளியீடு	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சோழர்களின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளும் வகையில் பல தரவுகள் உள்ளன. அந்த வகையில் ச.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுதியுள்ள *திருவாலங்காட்டுச் செப்பேடுகள்* என்னும் நூல் பிற்காலச் சோழரின் வரலாற்றை ஒரு புதிய கோணத்தில் எழுதியுள்ளதாகக் கொள்ளலாம்.

பொதுவாகச் செப்புப்பட்டையங்களைப் பதிப்பிக்கும்போது இப்பட்டையம் இம்மன்னனின் ஆணையைத் தாங்கியுள்ளது என்றும். இன்னவர்க்குத் தானம் அளிக்கப்பட்டது என்றும் பதிப்பித்துச்செல்வார்கள். ஆனால் இவ்வாசிரியர் தகுந்த ஆதாரங்களுடன் விளக்கமாகவும் விரிவாகவும் செப்பேட்டைத் தமிழ்ப் படுத்தி எழுதியுள்ளார்.

'திருவாலங்காட்டுச் செப்பேடுகள் அறிமுகம்' எனும் பகுதியில் திருவாலங்காடு ஊர் பற்றியும் சோழர் கால நிலை பற்றியும் கி.பி.1903 இல் கோயில் திருப்பணியின் போது 31- ஏடுகளின் தொகுப்புக் கிடைத்தது என்றும் கூறுகின்றார்.

இச்செப்பேடு சோழர் இலச்சனையுடன் இரட்டைக் கயல்களும் புலிச் சின்னங்களையும் அவற்றிற்கு இருபுறமும் விளக்குத் தாங்கிகளும் வில் சின்னமும் இடம் பெறுகின்றன. இச்செப்பேடுகள் முதன் முதலில் தொல்லியல் துறையில் கி.பி.1903ஆம் ஆண்டு சுருக்கமாகவும் கி.பி.1906ஆம் ஆண்டு பத்துப்பக்கங்களில் சென்னைக் கல்வெட்டு ஆண்டறிக்கை இரண்டாம் பாகத்தில் விரிவாகவும் ஆய்வு செய்து பதிப்பிக்கப்பட்டன.

இதில் வடமொழிச் சுலோகம் 137 என்றும் தமிழ் மொழி எழுத்துக்கள் எவை எவை என்றும் செப்பேட்டை விளக்கி, பழையனூர் வரலாற்றுச் செய்திகளுடன் தானமாக ஓலையெழுதியவன், 'உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுத் துளாருடையாந் கற்றளியான உத்தம சோழ தமிழதரையான்' என்றும் தமிழ்ப் பகுதியில் "நம் ஓலை எழுதும் உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுத் துளாருடையான் நாராயணன் கற்றளியான உத்தம சோழத் தமிழதரையான்" (நூலில், ப.9) என்ற

பெயர்கள் வெவ்வேறு காலங்களில் அரசனின் ஓலை நாயகர்களாக மேற்கண்ட ஓலைநாயகர்கள் இருந்துள்ளனர் என்பதைச் சான்றுடன் விளக்குகிறார்.

இச்செப்பேடு கி.பி.1024 இல் வெட்டிமுடிக்கப்பட்டது என்றும், தமிழதரையர் என்ற பெயரில் பல அதிகாரிகள் (அ) சிற்றரசர்கள் சோழரின் கீழ்த் தமிழகத்தின் வடபகுதியில் நாடாள்பவராக இருந்துவந்துள்ளனர் எனத் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார். இந்த ஓலை, கருமாளிகை மதுராந்தக தேவனில் தெற்கில் மறைவிடத்து இருந்து நடுவில்மலை பெருமூர் நாட்டுச் சிங்களாந்தகச் சதுர்வேதிமங்கலத்துச் சபைக்கு மன்னனின் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆணை திருவாலங்காட்டு மகாதேவருக்கு இறையிலியாக மன்னன் வெள்ளாளன் வகையாரா நிலத்தை 3238 கலம் 7 குறுணி 5 நாழி பொன்னாகவும் தானியமாகவும் கொடுக்கலாம் என விளக்கியுள்ளார். ஓலை நாயகம் நான்கு பேர் பற்றிய விவரங்கள் விரிவாகக் கூறியுள்ளார். இச்செப்பேட்டில் மரங்கள், ஊர்கள், நீர் நிலைகள், எல்லைகள் போன்றவற்றை விளக்கி வரிசைப்படுத்தியுள்ளார். இச்செப்பேட்டை ஆணையாகப் பெற்றுள்ள ஊர்ச்சபையின் செயல்பாடுகளில் அறவேளை செய்யும் பணியில் பழையனூர் ஊரவையும் சிங்களாந்தகச் சதுர்வேதிமங்கலமும் இவ்வூரின் மத்தியஸ்தன் ஆயிரவனையன் பெருமானான கிருஷ்ணன் உத்தம பிரியனும் உதவி புரிந்துள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

செப்பேட்டுத் தொகுதியிலுள்ள சுலோகங்கள் (மங்கல ஸ்ரீ கண்டனான சிவபெருமானான கழுத்தில் நாகங்களின் தலைவன் காட்சி தருகின்றான் எனத் தொடங்குகின்றது மெய்கீர்த்தி வரிகள்).

தமிழ் வரிவடிவமும் மொழிபெயர்ப்பும் குறிப்புரை எனும் பகுதியும் வரலாற்றை மறுஆய்வு செய்யவும் புதிய கோணத்தில் வரலாற்றை எழுதவும் துணைபுரியும். 12 ஏடுகள் சோழரின் வரலாற்றைச் சங்க காலத்திற்கு முன்பிருந்து தொடங்கி 36 மன்னர்களின் பெயர்களும் பட்டப் பெயர்கள் மற்றும் வரலாற்றில் இடம்பெற்றுள்ள சோழ மன்னர்களின் 14 பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன.

திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் தமிழ்ப் பகுதியின் மூலத்தைத் தற்காலத் தமிழில் கூறியுள்ளார், ஆலங்காடு உடையார் கோயில் திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர் கோயில் பற்றிய தலபுராணம் ஆகியவற்றை விளக்கி எழுதியுள்ளார். பின்னிணைப்பாகச் சொல்லடைவு, செப்புப்பட்டய ஒளிப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

நூல் மதிப்புரை: கா.விஜய்மணியன், முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ. பை.
சிதம்பர சபாநாத புராணம்	80.00
ஓங்கார விளக்கம்	150.00
திருப்பெருந்துறைப் புராணம்	130.00
திருவருட்பா இங்கித மாலை	70.00
சிவப்பிரகாச சுவாமிகள்	100.00
ஸ்ரீரங்கர் மகத்துவம்	50.00
திருவரங்கக் கலம்பகம்	30.00
திருவாட்போக்கிப் புராணம்	150.00
அகம்புற ஆராய்ச்சி விளக்கம்	250.00
கைவல்லிய நவநீதம்	200.00
வசனாலங்கார தீபம்	200.00
தைலவருக்கச் சுருக்கம்	150.00
சைவ பூஷண சந்திரிகை	140.00
வேதாந்த சூளாமணி	150.00
திராவிடப் பிரகாசிகை	150.00
வாசுதேவனமனனம் என்று வழங்கும் விவேகசாரம்	220.00
ஸ்ரீ பாலபோதம்	220.00
தேவாந்தப் பிரதீபம்	250.00
விசுவபிரம புராணம்	180.00
பிரபந்தத் திரட்டு திருக்குதிரிசிய விவேகம்	250.00
மூலமும் உரையும்	200.00
நன்னெறி பதவுரை	40.00
நந்தனாரேலப் பாட்டு	30.00
ஸ்ரீ முருகானந்த சுவாமிகள்	20.00
Tamil Culture Part I	250.00
Tamil Culture Part II	250.00
Tamil Culture Part III	250.00
Tamil Culture Part IV	250.00
Tamil Culture Part V	250.00
Tamil Culture Part VI	250.00
Tamil Culture Part VII	300.00
Tamil Culture Part VIII	250.00
Tamil Culture Part IX	300.00
Tamil Culture Part X	300.00
Tamil Culture Part XI	250.00







Edited & Published by the Director of International Institute of Tamil Studies, Chennai - 600 113
and Printed by Sri Saravana Printers, Chennai - 600 005. Cell : 94442 65471